வெளியீடு : 28-11-2016 Issued : 28-11-2016

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, ஜூலை 25, 2016—தொகுதி 4—எண் 2**

**Monday the 25th July 2016—Volume 4—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009.**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**25–7–2016**

**உள்ளடக்கம்**


*பக்கங்கள்*

**1. இரங்கற்குறிப்புகள்—**

*முன்னாள் உறுப்பினர்கள் மறைவு* 77-78

**2. தகவல் கோரல்—**

*பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு தடுப்பணை கட்டுதல்* 79-97

*திரு. மு.க. ஸ்டாலின்* 79-81, 90-91

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 82-84, 86-90

*திரு. கரி. இராமசாமி* 91

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி* 92-97

**திரு. துரைமுருகன்* 95-96

**3. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதம்—** 97-225

**திரு. எ.வ. வேலு* 97-100, 102-105, 109-111 113, 120-121, 123-130, 133

*மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி* 99-102, 178, 211-212

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்* 102,105-113, 120-121, 124-127, 146, 198-199, 212-216, 219-220.

*பக்கங்கள்*

**3. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதம்**—*தொடர்ச்சி*


| | |
|---|---|
| **திரு. க. பாண்டியராஜன்* | 113,115-119, 200-202, 206-207, 218-219 |
| *திரு. மு.க. ஸ்டாலின்* | 117,152, 164-165, 207 |
| *மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்* | 121,161-169, 179-180 |
| *மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி* | 122-123, 182-183, 202-203 |
| **திரு. துரைமுருகன்* | 126-127, 144, 146-147, 151, 153-154, 205-206 |
| *திரு. பி.எம். நரசிம்மன்* | 128, 130-131, 133-145, 148-150, 152-155, 158-159 |
| *திரு. கரி. இராமசாமி* | 155-157 |
| *திரு. ஜே.ஜி. பிரின்ஸ்* | 159-161, 164,168, 170-172, 174-176, 180-182 |
| *மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்* | 172-174 |

*பக்கங்கள்*

**3. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2016–2017, பொது விவாதம்**—*தொடர்ச்சி*

*மாண்புமிகு திரு. பி. தங்கமணி* 173-174, 217

*மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்* 176-178

*மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்* 179

**திரு. சு. ரவி* 183-193

**திரு. பழனிவேல் தியாகராஜன்* 194-197, 203-204, 208-211, 217, 219-220

**திருமதி பொன். சரஸ்வதி* 219-225

**4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 226-230

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## துன்முகி, ஆடி 10, திருவள்ளுவர் ஆண்டு–2047

## 2016 ஜூலை 25, திங்கட்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*“வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை*
*ஆராய்வான் செய்க வினை.”*

*பொருள் வரும் வழிகளைப் பெருகச் செய்து, அவற்றால் வளத்தை ஏற்படுத்தி வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லவரே செயல்புரிய ஏற்றவராவார்.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 1. இரங்கற்குறிப்புகள்

### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. அ. இராசமாணிக்கம் அவர்கள் 26-6-2016 அன்றும், திரு. ர.சொ. சுப்பிரமணியம் அவர்கள் 5-7-2016 அன்றும், திரு. இ.எம். சுப்ரமணியம் அவர்கள் 10-7-2016 அன்றும், திரு. நீ. அன்புச்செழியன் அவர்கள் 19-7-2016 அன்றும் மற்றும் திரு. க. முத்துவேல் அவர்கள் 23-7-2016 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

திரு. அ. இராசமாணிக்கம் அவர்கள் 1971 முதல் 1976 வரை நாகப்பட்டினம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ர.சொ. சுப்பிரமணியம் அவர்கள் 1977 முதல் 1980 வரை கடலாடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. இ.எம். சுப்ரமணியம் அவர்கள் 1967 முதல் 1971 வரை திருக்கோவிலூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திறம்படப் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. நீ. அன்புச்செழியன் அவர்கள் 1971 முதல் 1976 வரை பெரியகுளம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்கள். மேலும், 1967 முதல் 1970 வரை திண்டுக்கல் தொகுதி மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. க. முத்துவேல் அவர்கள் 1986 முதல் 1988 வரை முதுகுளத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நன்கு பணியாற்றியுள்ளார்கள். இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)*

*2016 ஜூலை 25]*

## 2. தகவல் கோரல்

### பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு தடுப்பணை கட்டுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநில அரசு பாலாற்றில் தடுப்பணை கட்டுவது குறித்து, நான் தங்களிடத்தில் ஓர் ஒத்திவைப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இந்தப் பிரச்சினைக் குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் இங்கே மேற்கொண்டு எதையும் பேசவேண்டாம். (குறுக்கீடுகள்) அவருடன் நான் பேசிக் கொண்டிருக்கும்போது, எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி? (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சித் தலைவரிடம் நான் பேசிக்கொண்டிருக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சித் தலைவரிடம்தான் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்; நீங்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவரிடம் நான் பேசிக்கொண்டிருக்கும்போது, நீங்கள் எல்லோரும் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறார். (குறுக்கீடுகள்) எல்லோரும் நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்வதைப்போன்றுதான் சபையை நடத்த வேண்டுமென்றால், அது என்னால் முடியாது. விதிமுறைகள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்)*

*முற்பகல் 10-05*

*நீதிமன்றத்திலே அதுகுறித்த வழக்கு இருக்கின்றது, அதற்குக் குந்தகம் விளைவிக்கின்ற வகையில், மேற்கொண்டு இங்கே எதையும் பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இருக்கைக்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவரும், நானும் பேசிக் கொண்டிருக்கிறோம் அல்லவா? (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவரைப் பேசுவதற்கு அனுமதித்திருக்கிறேன் அல்லவா?*

*பிறகு நீங்கள் எல்லோரும் எழுந்து நின்று கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேச அனுமதி கேட்டார்: நான் அவருக்கு அனுமதி கொடுத்து, அவர் எழுந்து அதுகுறித்து பேசியிருக்கிறார். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) தயவுசெய்து சொல்வதைக் கேளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எனக்குத் தெரியும்; நீங்கள் உட்காருங்கள். சபையை நடத்துவதற்கு எனக்கெல்லாம் நீங்கள் சொல்லிக்கொடுக்காதீர்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவரைப் பேசுவதற்கு நான் அனுமதித்திருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் எதிர்க்கட்சித் தலைவரைப் பேச அனுமதித்தேன்; அவர் பேசினார். பேசியதற்குத்தான் நான் பதில் சொன்னேன். மேற்கொண்டு அவர் பேசுவதற்கும் நான் அனுமதி அளித்திருக்கிறேன். அப்படியிருக்கும்போது நீங்கள் எழுந்து நின்று, ஆளாளுக்குப் பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) திரு. சக்கரபாணி, அவர் பேசும்போது, 'அதுகுறித்து* detail-*ஆகப் பேசவேண்டாம். அதுகுறித்து நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது' என்று நான் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) அதற்கு அவருடைய பதில் என்னவென்று கேட்கலாம்; நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நீங்கள் சொல்லுங்கள். வழக்கு விவரத்திற்குள்ளே போகாமல் உங்கள் கருத்தைப் பதிவு செய்யுங்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்தில் பாலாறு தோன்றி, அங்கு 93 கிலோ மீட்டர் பாய்ந்து, ஆந்திர மாநிலத்திற்குள் நுழைகிறது. ஆந்திராவிலே வெறும் 33 கிலோ மீட்டர் மட்டுமே பாய்ந்து தமிழகத்திற்குள்ளே நுழையக்கூடிய பாலாறு, நம் மாநிலத்திற்குள் 222 கிலோ மீட்டர் பயணிக்கிறது. இறுதியிலே வயலூர் என்னும் இடத்திலே வங்கக் கடலிலே சங்கமிக்கிறது என்பதைப் பார்க்கும்போது, பாலாறு தண்ணீரைப் பெரிதும் நம்பியிருப்பது நம்முடைய தமிழகம்தான்.*

*அதிலே குறிப்பாக, வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம் உள்ளிட்ட 3 மாவட்டங்களுக்கும், அதைத் தொடர்ந்து திருவள்ளூர், சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கும் பாலாறு*

*மிகப்பெரிய நீராதாரமாக விளங்கிக்கொண்டிருக்கிறது. மக்களுடைய குடிநீர்த் தேவைக்கும், நான்கரை இலட்சம் ஏக்கர் விவசாய நிலத்திற்காகவும் பாலாறு ஆதாரமாக இருந்துகொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், பாதுகாப்புத் துறையினுடைய முக்கிய கேந்திரமாக விளங்கக்கூடிய கல்பாக்கம் அணு மின் நிலையம் பாலாற்றை நம்பித்தான் இருக்கிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.*

*இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1892 ஆம் ஆண்டு சென்னை—மைசூர் ஒப்பந்தத்திலே இருக்கக்கூடிய அட்டவணை Aஇல் குறிப்பிட்டிருக்கின்றபடி, பல மாநிலங்களுக்கிடையில் பாயும் 15 முக்கிய நதிகளில் பாலாறும் ஒன்றாக விளங்கிக்கொண்டிருக்கிறது. எனவே, மாநிலத்தினுடைய முன் அனுமதியின்றி புதிய அணையைக் கட்டவோ அல்லது நீரைத் தடுப்பதற்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவோ கூடாது. இதுமட்டுமின்றி, தமிழகத்தின் அனுமதியின்றி நீரைத் திருப்புவதோ, தேக்குவதோ கூடாது. 1892 ஆம் வருட ஒப்பந்தப்படி, பாலாற்று நீரைத் தேக்கவோ அல்லது திருப்பவோ, புதிய அணை அல்லது தடுப்பணை போன்றவற்றை ஆந்திர மாநில அரசு கட்டவோ கூடாது.*

*இதை மீறி ஆந்திர மாநிலத்திலுள்ள—தற்போது சீமாந்திர மாநிலம்—-குப்பம் தாலுகாவில் இருக்கக்கூடிய கணேசபுரத்திலே 2006-ல் புதிய அணை கட்டக்கூடிய முயற்சியை மேற்கொண்டது. அப்போதிருந்த அ.தி.மு.க. அரசு அது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்ற நிலையிலே, 10-2-2006 அன்று ஒரு வழக்கும் போட்டிருக்கிறது; அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திலே இருக்கிறது. எனவே, தங்களுடைய உத்தரவின்படி, அந்தப் பிரச்சினைக்குள் நான் செல்ல விரும்பவில்லை. அதைத் தொடர்ந்து மே மாதம் 2006-லே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப்பிறகு. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், எதிர்க்கட்சித் தலைவரைப் பேச அனுமதித்தேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

*[2016 ஜூலை 25*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள் நீங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களை அழைத்திருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசியதற்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவரை நான் அழைக்கிறேன். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்ததற்குப் பிறகு நீங்கள் பேசலாம். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மரபு இருக்கின்றது அல்லவா? (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் எழுந்து நின்று கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் உட்காருங்கள்; நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் உங்களைப் பேசுவதற்கு அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், இதெல்லாம் முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். இதெல்லாம் சரியில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எனக்குத் தெரியும்; நீங்கள் உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள்; நான் சொல்கிறேன். இப்படி எல்லாம் செய்தால் எதுவும் செய்ய முடியாது; இப்படி எல்லாம் நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் பிறகு அனுமதி கொடுக்கிறேன் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) ஒரு அரைநிமிடம்தான். நான் சொல்லிவிடுகிறேன். இரண்டே இரண்டு வார்த்தைகள்தான். நான்*

*2016 ஜூலை 25]* [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) இதெல்லாம் நல்ல நடைமுறையல்ல. இது நல்ல மரபு கிடையாது. (குறுக்கீடுகள்) இது நல்ல நடைமுறை கிடையாது. (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான்தான் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன் அல்லவா? அதன்பிறகும் இப்படிச் செய்தால் நான் எப்படி அனுமதி கொடுக்க முடியும்? (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான்தான் அனுமதி கொடுத்தேன் அல்லவா? (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரான நான் பேசுவதற்கு மீண்டும் அனுமதி கொடுக்கிறேன் என்றும் சொல்லியிருக்கிறேன். முதலில் அவர் பேசிக்கொண்டிருந்தார்; இடையில் அவை முன்னவர் அவர்கள் குறுக்கிடுகிறார். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் அவர்கள் பேசியதற்குப் பிறகு, திரும்பவும் பேச அனுமதி கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புக் கொடுக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள்; நான் அனுமதி கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் அனுமதி கொடுக்கமாட்டேன் என்று சொல்லவில்லையே; நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். எழுந்து நிற்கின்ற அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் செய்வது முறையல்ல. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசவேண்டுமென்று கேட்டார்; அவர் பேச ஆரம்பித்த உடனேயே ஒரு பிரச்சினையைச் சொன்னார். அதுகுறித்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது என்று நான் சொன்னேன். (குறுக்கீடுகள்) நான் சொல்வதை நீங்கள் கேளுங்கள்; உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) இதெல்லாம் முறையல்ல. இதெல்லாம் முறையல்ல. உட்காருங்கள். நான் பேசுகிறேன். பேரவைத் தலைவரான நான் எழுந்து நின்று பேசுகிறேன். நீங்கள் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பேச அனுமதித்து அவர் பேசிக்கொண்டிருக்கிறார்; இடையிலே அவை முன்னவர் அவர்கள் பதில் சொல்வதற்கு எழுந்தார். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். அவர் பேசி முடித்தபிறகு எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் திரும்பவும் அனுமதி கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் திரும்பவும்*

வாய்ப்புத் தருகிறேன். நான் சொல்வதைக் கேளுங்கள். இப்படி ஒரு சார்பாக மட்டும் நான் அவையை நடத்த முடியாது. நீங்கள் எழுப்பி இருக்கிற பிரச்சினைக்கு மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதில் சொல்ல எழுந்தார். அவர் பேசி முடித்த பிறகு நான் உங்களுக்குப் பேச அனுமதி கொடுக்கிறேன். *(குறுக்கீடுகள்)* நீங்கள் நீண்ட விவாதமின்றி முடிப்பதாக இருந்தால், நான் பேச வாய்ப்புத் தருகிறேன். *(குறுக்கீடு)* மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஒரேயொரு வார்த்தை மட்டும் பேசட்டும். *(குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து நின்றுகொண்டு கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இது தவறு. *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்னதான் சத்தம் போட்டாலும் சரி, *(குறுக்கீடுகள்)* நீங்கள் என்னதான் கூச்சல் போட்டாலும் சரி, *(குறுக்கீடுகள்)* நீங்கள் என்னதான் கூச்சல் போட்டாலும் சரி, எழுந்து நின்று குறுக்கிட்டு எதைப் பேசினாலும் சரி, *(குறுக்கீடுகள்)* சபையை நடத்துவது என்னுடைய பொறுப்பு. *(குறுக்கீடுகள்)* சபையை நடத்துவதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளின்படி, எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டிருக்கும்போது, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் குறுக்கிட்டால், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கு வாய்ப்புத் தர வேண்டியது என்னுடைய கடமை. *(குறுக்கீடுகள்)* அதனடிப்படையிலே இப்போது அவை முன்னவர் அவர்கள் பேசுவார். அவர் பேசி முடித்ததற்குப் பின்னர், எதிர்க்கட்சித் தலைவரை நான் மீண்டும் அழைக்கிறேன். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் தெளிவாகச் சொல்கிறேன்; எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இரண்டு

*2016 ஜூலை 25]* [பேரவைத் தலைவர்]

*பேருக்கும் சேர்த்துச் சொல்கிறேன்; திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் சேர்த்துச் சொல்கிறேன். எப்படி அவையை நடத்த வேண்டுமென்று நீங்கள் எனக்கு வழிகாட்டக் கூடாது; எனக்குத் தெரியும். நான் அனுமதி கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், குறுக்கிட்டு வாய்ப்புக் கேட்டிருக்கிறார். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசி முடித்ததற்குப் பின்னர், மீண்டும் எதிர்க்கட்சித் தலைவரை நான் பேச அழைக்கிறேன். அப்போது உங்களுடைய பேச்சைத் தொடரலாம். (குறுக்கீடுகள்) ஆனால், என்னை நீங்கள் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்; ஒரு நிமிடம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்னை நீங்கள் வற்புறுத்த முடியாது. நீங்கள் எவ்வளவுதான் சத்தம் போட்டாலும், (குறுக்கீடுகள்) எப்படி சபையை நடத்த வேண்டுமென்று நீங்கள் எனக்குப் பாடம் சொல்லித்தர முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து அமருங்கள். (குறுக்கீடுகள்) தயவு செய்து அமருங்கள். (குறுக்கீடுகள்)*

*மாண்புமிகு அவை முன்னவர் பேசியபிறகு, எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய பேச்சைத் தொடர்வதற்கு நான் அனுமதியளிக்கிறேன். சபையினுடைய தலைவர் நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நான்தான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேனே; இப்படி நீங்கள் என்னை வற்புறுத்தினால், நான் எப்படி சபையை நடத்துவது? (குறுக்கீடுகள்) இப்படி நீங்கள் வற்புறுத்தினால் நான் எப்படி சபையை நடத்துவது? (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், இப்படி உங்களுடைய கட்சி உறுப்பினர்கள் ஒத்துழைக்காமல் இருந்தால் சபையை எப்படி நடத்துவது? (குறுக்கீடுகள்) சபையை நடத்த எனக்கு அனுமதி கொடுங்கள். (குறுக்கீடுகள்) சபையை நடத்த விடுங்கள். (குறுக்கீடுகள்) நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்கிறமாதிரி, நான் கேட்க முடியாது; சபையில் நான் சொல்கிறபடிதான் நீங்கள் கேட்கவேண்டும். உட்காருங்கள், நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் எவ்வளவு நேரம் வற்புறுத்தினாலும் சரி, நான் சபையை நடத்துவதற்கு நீங்கள் எனக்கு வழிகாட்ட முடியாது; எனக்குத் தெரியும். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு வாய்ப்புத்*

*தருகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசி முடித்தவுடனேயே, நான் எதிர்க்கட்சித் தலைவரைத் தொடர்ந்து பேச அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) மீண்டும், மீண்டும் சொல்கிறேன், நீங்கள் எவ்வளவு நேரம் வற்புறுத்தினாலும், என்னுடைய முடிவிலே மாற்றம் இல்லை; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர், நீங்கள் பேசுங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) இப்படிச் செய்வது முறையல்ல. நான் அடுத்த* agenda-*க்குப் போக வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) நான் எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், உங்களுக்கும் நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள்; உங்களுக்கும் வாய்ப்புத் தருகிறேன்; எதிர்க்கட்சித் தலைவருக்கும் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்னை நீங்கள் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்; உங்கள் இடத்திற்குச் சென்று உட்காருங்கள். வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழகத்திற்கான வாய்ப்பை நான் மறுக்கவில்லை; வாய்ப்பைத் தருகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) திரு. எ.வ. வேலு நீங்கள் எல்லோரும் இன்றைக்குப் பேச வேண்டும்; உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அவரைப் பேச அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்கிறபடி நான் சபையை நடத்த முடியாது. சபையை விதிமுறைகளுக்குட்பட்டுத்தான் நடத்த முடியும். (குறுக்கீடுகள்)*

*2016 ஜூலை 25]* [பேரவைத் தலைவர்]

*சபையை நீங்கள் சொல்வது மாதிரியெல்லாம் நடத்த முடியாது. (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் நடத்த முடியாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசியதற்குப் பின்னாலேதான், எதிர்க்கட்சித் தலைவருக்கு நான் வாய்ப்பு அளிப்பேன். நீங்கள் எவ்வளவு நேரம் கூச்சல் போட்டாலும் நான் அனுமதி அளிக்க முடியாது. (குறுக்கீடுகள்) வேறு வழியில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் பேசட்டும்; பேசியதற்குப் பின்னாலே நான் எதிர்க்கட்சித் தலைவருக்கு வாய்ப்பு அளிக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் நின்று கொண்டு தொடர்ந்து கூச்சலிட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *பேசுவதே கேட்கவில்லை; எப்படிப் பேசுவது? (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்* zero hour-*ல் கேள்வி எழுப்பியதற்கு. . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான்தான் வாய்ப்புத் தருகிறேனே, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்; வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் அமைதியாக அமருங்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசி முடித்தவுடனேயே நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உங்கள் தலைவர்கள் இரண்டுபேருமே சரியென்று ஒப்புக்கொண்டார்கள். மற்றவர்கள் ஏன் ஒப்புக்கொள்ளமாட்டேன் என்கிறீர்கள்? அதற்கு என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) நீங்கள் யாருடைய கட்டுப்பாட்டில் இயங்குகிறீர்கள் என்றே தெரியவில்லையே? (மேசையைத் தட்டும்*

ஒலி) (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்கள் சொன்னபின்பும் உங்கள் உறுப்பினர்கள் கேட்கமாட்டேன் என்கிறார்களே?

ஒன்று, எனக்குக் கட்டுப்பட வேண்டும்; சொல்வதைக் கேளுங்கள், (குறுக்கீடுகள்) இல்லையென்றால், உங்களுக்குக் கட்டுப்பட வேண்டும். யாருக்கும் கட்டுப்பட மாட்டேன் என்கிறார்களே? (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன்; உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். உங்கள் தலைவர் சொல்வதையே கேட்கமாட்டேன் என்கிறீர்களே; சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. டி.ஆர்.பி. ராஜா, நான் சொல்வதைத்தான் கேட்கமாட்டேன் என்கிறீர்கள்; உங்கள் தலைவர் சொல்வதையாவது கேளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் இருக்கைக்குப் போய் உட்காருங்கள்; வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பிரச்சினையைப்பற்றி இங்கே பேச ஆரம்பித்தபோது, 'அதுகுறித்த வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது' என்று நீங்கள் சொன்னீர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், தான் அந்த வழக்கிற்குள் போகவில்லை என்று சொன்னதால் நீங்கள் அவரைப் பேச அனுமதித்தீர்கள். ஒரு பிரச்சினை zero hour-ல் எழுப்பப்படும்பொழுது, அது என்ன பிரச்சினை? அந்தப் பிரச்சினைக் குறித்து அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது குறித்து மட்டும்தான் கேட்க வேண்டும். (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் பேசிக்கொண்டிருப்பீர்களா? இது தவறு; இதெல்லாம் allow பண்ண முடியாது. (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இது என்ன முறை? உட்காருங்கள்; அவர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** Zero hour-ல் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருக்க முடியாது. Zero hour-ல் ஒரு மணி நேரம் பேசுவார்களா? அதெல்லாம் பேச முடியாது. என்ன பிரச்சினை என்று சொல்லிவிட்டு, அதிலே அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மட்டும்தான் கேட்க

*2016 ஜூலை 25]* [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*வேண்டும். அதை விட்டுவிட்டு நீங்கள் உங்கள் இஷ்டத்திற்குப் பேசிக் கொண்டிருந்தால், அது நல்ல நடைமுறை கிடையாது. (குறுக்கீடுகள்) அதுபோக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் மிகவும் பொறுமை காட்டிக் கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 25 நிமிடங்கள் ஆகின்றன. பொறுமை; பொறுமை; இன்றைக்கு ஏகப்பட்ட பொறுமையை உங்களிடம் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) பொறுங்கள்; பொறுங்கள். பேச்சுக்கு பேச்சு நீங்கள் எல்லோரும் சேர்ந்து சத்தம் போட்டால் எப்படி? நாங்களும் அதேபோன்று சத்தம் போட்டால் என்ன ஆகும் நிலைமை? (குறுக்கீடுகள்) எல்லோரும் கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) இது தவறு. எந்த உறுப்பினரும். . . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேன் அல்லவா? (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னதற்குப் பிறகு ஏன் இப்படி எழுந்து நின்று கொண்டிருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *நாங்களும் சத்தம் போட்டால் என்ன நிலைமை ஏற்படும் என்றுதான் உங்களிடம் நான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களை யோசிக்க வைக்கிறேன். அதை நீங்கள் எண்ணிப் பாருங்கள்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. துரைமுருகன், உங்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *25 நிமிடங்களாக நீங்கள் எழுந்து நின்று சத்தம் போடுகிறீர்கள். மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லிக்கொண்டே இருக்கிறார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசிமுடித்த பிறகுதான் நான் பேச வேண்டும் என்று சொல்வது எந்த விதியிலும் இல்லை; அதுபோன்று எந்த மரபும் இல்லை. நீங்கள் நன்றாகப் புரிந்துகொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) 25 நிமிடங்களாக யாரையும் பேசவிடாமல் நீங்கள் உங்கள் இஷ்டத்திற்குக் கூச்சல் போட்டபடியே இருந்தால் யார் பொறுப்பார்கள்? நன்றாக*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2016 ஜூலை 25

யோசனை செய்து சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இதெல்லாம் நல்ல நடைமுறையா? நீங்கள் சபையை ஒழுங்காக நடத்தவிடுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசி முடித்தவுடன், எதிர்க்கட்சித் தலைவருக்குப் பேசுவதற்கு அனுமதி தருகிறேன் என்று தாங்கள் சுமார் 15 தடவை சொல்லிவிட்டீர்கள். அதற்குப்பிறகும் இவர்கள் இப்படி கூச்சல்-குழப்பத்தை விளைவித்துக் கொண்டிருந்தால் இது நல்ல நடைமுறையா என்று மட்டும் அவர்கள் யோசனை செய்து பார்க்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன கருத்துகள் ஒருபுறம் இருக்க, அதே பிரச்சினையையொட்டி இன்னொரு பிரச்சினையை நான் குறிப்பிடவிரும்புகிறேன். கனகநாச்சியம்மன் கோயிலிலும் சீமாந்திர அரசினுடைய ** பாலாற்றின் கரையில் இருக்கக்கூடிய கனகநாச்சியம்மன் கோயில் தமிழக பக்தர்களால் கட்டப்பட்டு, தமிழக இந்து சமஸ்தானத்தின். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு பிரச்சினையைப் பேசுவதற்குத்தான் என்னிடம் அனுமதி கேட்டீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ஒரு பிரச்சினையைப் பேசுவதற்கு அனுமதி கேட்டீர்கள்; அனுமதி வழங்கினேன். தொடர்ந்து வேறு பிரச்சினையைப்பற்றி பேசுவது சரியல்ல. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நிறைவாக இந்த அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, உடனடியாக தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி அல்லது அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, இதுகுறித்து சுமுகமான ஒரு தீர்வு காண்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*2016 ஜூலை 25]* [திரு. மு.க. ஸ்டாலின்]

*இன்னொன்று, அங்கே தடுப்பணை கட்டக்கூடிய அந்த நிலையைக் கண்டிக்கக்கூடிய வகையிலே, இந்த சட்டமன்றத்தில் ஏகமனதாக ஒரு கண்டனத் தீர்மானத்தையும் நிறைவேற்றிட வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் கேட்டு அமைகிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, நீங்கள் காலையில் 9-25 மணிக்குத்தான் இதுகுறித்த கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறீர்கள். உங்களுடைய பிரச்சினையும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்* raise *செய்தப் பிரச்சினையும் ஒன்றுதான். எனவே, அதைப் பதிவு செய்கிறேன். (குறுக்கீடு) நேரத்தின் அருமை கருதி, நீங்களும் அவையில் அந்தப் பிரச்சினையை* raise *செய்ததாக நான் பதிவு செய்துகொள்கிறேன். தயவு செய்து அமருங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

**திரு. கரி. இராமசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலாற்றின் குறுக்கே தடுப்பணையினுடைய உயரத்தை அதிகப்படுத்துவதாகச் சொல்கிறார்கள். அதேபோல, கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களோடு தொடர்ந்து நாம் சுமுகமாக உறவு வைத்துக்கொள்ள வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சருடன் பேச வேண்டும்; அவர்களால் முடியவில்லையென்றால், அந்தப் பொறுப்பிலே இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களாவது தயவு செய்து பேசி, ஒரு சுமுகமான முடிவுக்கு வரவேண்டும். இது நீடித்தால் பக்கத்திலே இருக்கக்கூடிய மாநிலங்களுக்கும், நமக்கும் பிரச்சினை அதிகமாகிக் கொண்டேதான் போகும். வழக்கு தொடர்ந்து கொண்டே இருக்கலாம். நம்முடைய தலைமுறை முடிகிற வரையிலும்கூட இந்த வழக்கு நீடிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.*

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசும்போது, ஆந்திர அரசு **என்ற வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். அந்த வார்த்தை நமது அண்டை மாநிலத்தினுடைய உறவைப் பாதிப்பதுபோல் இருக்கிறது என்பதால்*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகா மாநிலம், கோலார் மாவட்டத்தில் பாலாறு உற்பத்தியாகி 92 கி.மீ. தூரம் கர்நாடக மாநிலத்தில் பயணித்து ஆந்திரா மாநிலத்தின் சித்தூர் மாவட்டம் வழியாக 33 கி.மீ. தூரம் கடந்து தமிழ்நாட்டிலுள்ள வேலூர் மாவட்டத்திற்குள் நுழைந்து, திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள் வழியாக தமிழகத்தில் 222 கி.மீ. தூரம் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கின்றது. 1892 ஆம் ஆண்டு மதராஸ்-மைசூர் ஒப்பந்தத்தின்படி, கீழ்ப் பகுதியிலுள்ள மாநிலத்தின் முன்னனுமதி பெறாமல் நீரைத் தடுப்பதோ, திருப்புவதோ மற்றும் நீரைத் தேக்குவதற்கான கட்டுமானப் பணிகளையோ அல்லது இதுபோன்ற எந்த ஒரு செயலையும் மேற்கொள்ள முடியாது.

சித்தூர் மாவட்டத்தில் குப்பம் தாலுகா, கணேசபுரத்தில் பாலாற்றின் குறுக்கே ஓர் அணையை ஆந்திர அரசு கட்ட இருந்ததை எதிர்த்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்பேரில் தமிழ்நாடு அரசு 10-2-2006 அன்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு O.S.No. 2/2006-ஐ தாக்கல் செய்ததன்பேரில், கட்டுமானப் பணிகள் தடுக்கப்பட்டன. இந்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப்பிறகு உங்களுடைய அரசு ஆட்சிக்கு வந்தது.

தற்போது பாலாற்றின் குறுக்கே ஆந்திர அரசு பெரும்பள்ளம் கிராமத்தில் அமைந்துள்ள தடுப்பணையின் உயரத்தை தன்னிச்சையாக 9 அடியிலிருந்து 12 அடி வரை உயர்த்தியுள்ளதாக செய்தி வந்தவுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் 1-7-2016 அன்று ஆந்திர மாநில முதலமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், 1892 ஆம் ஆண்டு மதராஸ்-மைசூர் ஒப்பந்தத்தை மீறும்வகையில் ஆந்திர அரசு பெரும்பள்ளம் கிராமத்தில் உள்ள தடுப்பணையின் உயரத்தை தன்னிச்சையாக உயர்த்தியதற்கு தமிழ்நாட்டின் வலிமையான எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார்கள். ஆந்திர மாநில முதலமைச்சர் உடனடியாக இப்பிரச்சினையில் தலையிட்டு, தற்போது உயர்த்தப்பட்ட தடுப்பணையின் உயரத்தை மீண்டும் பழைய நிலைக்குக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*2016 ஜூலை 25*] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

கொண்டுவரவும், கூடுதலாக நீரைத் தேக்காமல் இருக்கவும் மற்றும் இயற்கையாக தமிழ்நாட்டிற்குள் ஓடுகின்ற நீரை உறுதிப்படுத்தவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாக அறிவுரைகள் வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் 1-7-2016 நாளிட்ட கடிதத்தின் தொடர்ச்சியாக, தடுப்பணையின் உயரம் உயர்த்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டின் வலிமையான மறுப்பினைத் தெரிவித்து 11-7-2016 அன்று தமிழக அரசின் தலைமைச் செயலாளர் மூலமாக ஆந்திரப் பிரதேச அரசின் தலைமைச் செயலாளர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், தடுப்பணைகளை முன்பிருந்த நிலைக்கே கொண்டு வரவேண்டும் என்றும், 1892 ஆம் ஆண்டு போடப்பட்ட மதராஸ்-மைசூர் ஒப்பந்தத்தை மீறும்வகையில் செயல்படக் கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டது. மேலும், அன்றே தலைமைச் செயலாளர் கடிதம்மூலம், இப்பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டு, ஆந்திர அரசுக்கு உரிய அறிவுரை வழங்குமாறு மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், இக்கடிதத்தில் மத்திய அரசு உடனடியாகத் தீர்வுகாணாவிட்டால் சட்டப்படி தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகும் என்றும் தெரிவிக்கப்பட்டு, *(மேசையைத் தட்டும் ஒலி)* அதன் அடிப்படையில் 18-7-2016 அன்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசின் மனுவில் பாலாற்றின் குறுக்கே நீரைத் தேக்கும்வகையிலோ, நீரைத் திருப்பிவிடும்வகையிலோ எந்தவித கட்டுமானப் பணிகளையோ மேற்கொள்ளக் கூடாது என்றும், தற்சமயம் உயர்த்திக் கட்டிய தடுப்பணையை பழைய நிலைக்கே கொண்டுவர உரிய ஆணைகள் பிறப்பிக்கவும் வேண்டப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தில் இடைக்கால மனுவின் நிலை முடியும்வரை பாலாற்றின் கிளை ஆறுகளில் எவ்வித தடுப்பும் ஏற்படுத்தக்கூடாது என்றும், பாலாற்றில் உயர்த்தப்பட்ட தடுப்பணையில், அவை உயர்த்தப்படுவதற்கு முன்பு இயற்கையாகச் சென்றுகொண்டிருந்த நீரை உறுதிப்படுத்த வேண்டும் என்றும், புதிய தடுப்பணைகள் கட்டக் கூடாது என்றும் உறுதிக் கட்டளை வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்குப் பிறகு விவாதம் கிடையாது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அதுசம்பந்தமாக எதுவும் பேச முடியாது. (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் வேறு விஷயம் ஏதாவது பேசுவதாக இருந்தால் நான் அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்* raise *செய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லிவிட்டார்கள். அதே பொருள் குறித்து நீங்கள் பேசுவதாக இருந்தால், பேச வேண்டாம்; உட்காருங்கள். (குறுக்கீடு) வேறு ஏதாவது பொருள் குறித்துப் பேசுவதாக இருந்தால் நான் அனுமதியளிக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையில் மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் இந்தப் பொருள் குறித்து தனது கருத்துகளை பதிவு செய்திருக்கிறார்கள். 2006 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில் தெரிவித்த கருத்து. இதைத்தான் நான் முன்கூட்டியே* point of order—*ல் கிளப்பியுள்ளேன். "ஒரு வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்றபோது, (குறுக்கீடு) அதை அவர்களே தொடுத்திருந்தாலும் சரி, யார் தொடுத்திருந்தாலும் சரி, அந்த வழக்கு குறித்து சட்டமன்றத்தில் பேசுவது மரபல்ல. அதற்கு சட்டமும் இடம் தரவில்லை.* Sub-judice *என்பார்கள்; அதனாலேயே அத்தகைய செய்திகளை இந்த மாமன்றத்தில் விவாதிக்க அனுமதிக்கக் கூடாது என்பது சட்டமன்ற மரபு, சட்டமன்ற விதி". இதைத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், 2006, டிசம்பர் 6 ஆம் தேதி அவையில் பேசியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் தாங்களும் சுட்டிக்காட்டியுள்ளீர்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.*

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வழக்கு நீதிமன்றத்தில் இருக்கின்றபோது, அந்த வழக்குக்குள்ளே போய் பேசக்கூடாது என்று தாங்களும் சொன்னீர்கள்; நானும் அதைத்தான் சொல்லியிருக்கிறேன். அதிலே மாறுபட்ட கருத்து எதுவும் இல்லை. ஆனால், என்னுடைய யோசனை என்னவென்றால், ஓர் அரசு, நீங்களாக இருந்தாலும் சரி, நாங்களாக இருந்தாலும் சரி, கடிதம் எழுதியோ, உச்ச நீதிமன்றத்திற்கு சென்றோ தடுப்பணை கட்டுவதைத் தடுக்கும்படி கேட்போம். ஆனால், இவற்றையும் மீறி சில செயல்கள் நடக்கின்றன. மாண்புமிகு ஆந்திர முதல்வர் திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள் நம்மிடத்திலே நல்ல நட்பாக இருக்கக்கூடியவர். இன்னும் சொல்லப்போனால் அவருடைய தொகுதி, நம்முடைய தமிழ்நாட்டை ஒட்டியிருக்கிறது. எனவே, இதை சுமுகமாக தீர்க்க வேண்டும். இது அவருடைய கவனத்தை மீறிகூட வந்திருக்கலாம். எனவே, நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலேயே, சர்வ கட்சித் தலைவர்களை அழைத்துக் கொண்டு போய் அவரை சந்தித்து, விளக்கம் சொன்னால், அவராகவே ஒத்துக்கொள்வார். காரணம், அவருக்கு தமிழர் ஓட்டுக்கள் நிறைய இருக்கின்றன. குப்பம் தொகுதி என்பது தமிழ்நாட்டோடு ஒட்டி உறவாடி, mingle ஆகியிருக்கிற ஒரு தொகுதி. எனவே, ஒரு delegation-ஐ மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், திரு. சந்திரபாபு நாயுடு அவர்களைப் பார்க்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுப்பினால், நிச்சயம் இதற்குப் பயன் ஏற்படும். இந்தப் பிரச்சினையில் பாதிக்கப்படும் மாவட்டத்தைச் சார்ந்தவன் என்கின்ற காரணத்தினால், உரிமையோடு சொல்கிறேன். அவ்வப்போது இப்படி நீங்கள் கொஞ்சம், கொஞ்சம் மைக்கை கொடுத்தால் எந்தப் பிரச்சினையும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைச் சொன்னார்கள். 2006 ஆம் ஆண்டே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (குறுக்கீடு) அதைத்தான் திருப்பிச் சொல்கின்றேன். அவர்

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2016 ஜூலை 25

சொன்னதற்குப் பதில் சொல்கின்றேன். 2006 ஆம் ஆண்டே வழக்கு தொடரப்பட்டது. அதற்குப் பின்பு உங்களுடைய ஆட்சி வந்தது. 2011 ஆம் ஆண்டுவரைக்கும் உங்களுடைய ஆட்சி இருந்தது. நீங்கள் அப்போது இந்தப் பிரச்சினையிலே முனைப்போடு செயல்பட்டிருந்தால், இந்த நிலை ஏற்பட்டிருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) தடுப்பணை கட்ட வேண்டிய விவகாரம் வந்திருக்காது. ஆகவே, 2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரைக்கும் உங்களுடைய ஆட்சி இருந்த காலத்திலே என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? எத்தனை முறை ஆந்திர முதலமைச்சரைச் சந்தித்துப் பேசினீர்கள்? அப்படி சந்தித்துப் பேசி, ஒரு தீர்வு காணப்பட்டிருந்தால், இந்தப் பிரச்சினை இப்போது எழுவதற்கு வாய்ப்பு இருந்திருக்காது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது Zero Hour. (குறுக்கீடு) விவாதம் மேற்கொண்டும் வேண்டாம். (குறுக்கீடு) Zero Hour-ல்தான் உங்களை நான் பேச அனுமதித்து, நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசும்போது பேசலாம், உட்காருங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசும்போது பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் ஆட்சியிலே ஏன் செய்யவில்லை என்று கேட்கிறார். அப்போது இவ்வளவு உயரத்திற்கு அவர்கள் அணை கட்டவில்லை. நாங்கள் சொன்னவுடனேயே அணை கட்டுவதை நிறுத்திவிட்டார்கள். இப்போது பெரிய அணை கட்டியுள்ளார்கள். அவ்வளவுதான் வித்தியாசம். நாங்கள் சொன்னவுடன் அப்போது அணை கட்டுவதை நிறுத்திவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் மானியக் கோரிக்கையில் பேசிக் கொள்ளலாம், உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

*2016 ஜூலை 25]*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இதற்கு ஒரு சுமுகமான ஏற்பாடு, நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்பதன் அடிப்படையிலே அவர் கருத்து தெரிவித்தார். அதற்குத்தான் நான் சொல்கின்றேன். 2006 ஆம் ஆண்டே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழக்கு தொடர்ந்து, அந்த வழக்கு நிலுவையில் இருந்தது. அப்பொழுதே நீங்கள் இதற்கு முயற்சி எடுத்திருந்தால், இந்தப் பிரச்சினை தொடர்ச்சியாக நீண்டுகொண்டு போயிருக்காது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முற்றுப்புள்ளி கிடைத்திருக்கும். ஆகவே, தடுப்பணை கட்டுகின்ற இந்தப் பிரச்சினைக் குறித்து நீங்கள் ஆந்திரப் பிரதேச முதலமைச்சருடன் அன்றைக்கு கலந்து பேசி, உங்களுடைய ஆட்சியில் உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த நிலை இப்போது ஏற்பட்டிருக்காது என்பதைத்தான் தங்கள் வாயிலாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.*

## 3. திருத்திய வரவு—செலவுத் திட்டம், 2016—2017, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2016-2017 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள். (குறுக்கீடுகள்) மீதியெல்லாம் நாளை பேசலாம். 40 நிமிடங்கள் ஆகிவிட்டன.* Zero Hour-ல் *40 நிமிடங்கள் பேச அனுமதித்துவிட்டேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. எ.வ. வேலு, நீங்கள் பேசுங்கள்.*

*முற்பகல் 10-40*

***திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் ஐந்தாவது முறையும் சட்டப் பேரவை உறுப்பினராகப் பணியாற்றுவதற்காக எனக்கு ஒரு வாய்ப்பைத் தந்த, தமிழகத்தை ஐந்து முறை மக்களுக்காக ஆண்ட கழகத்தினுடைய தலைவர், என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற அன்புத் தலைவர் அண்ணன் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த நிதிநிலை அறிக்கையிலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பைத் தந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய*

பொருளாளரும், எதிர்க் கட்சியினுடைய தலைவருமான, 'நமக்கு நாமே' நாயகன் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) என்னைப் பேசுவதற்கு அனுமதித்த தங்களுக்கும் இந்த நேரத்திலே எனது நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகின்றேன்.

"ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்"

என்று வள்ளுவர் சொல்கிறார். ஆக, எத்தனைபேர்தான் துணையாக இருந்தாலும், முறையாக செய்யப்படாத முயற்சி இறுதியிலே முடங்கிப் போய்விடும் என்று வள்ளுவர் சொல்கிறார். ஆக, அந்த அடிப்படையிலே இந்த நிதிநிலை அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். நிதிநிலை அறிக்கை பக்கம் 75, பத்தி 152-ல் வருவாய் இனங்கள் 1,48,175.09 கோடி ரூபாய்; செலவினங்கள் 1,64,029.56 கோடி ரூபாய்; வருவாய்ப் பற்றாக்குறை 15,854.47 கோடி ரூபாய்; மூலதனச் செலவு 24,679.38 கோடி ரூபாய்; மொத்தப் பற்றாக்குறை 40,533.84 கோடி ரூபாய் என்று நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நீங்கள் திட்டமிட்ட வருவாய் வரவில்லை. எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு நிதிப் பற்றாக்குறை இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிறது. இந்த 4 மாதங்களில் நீங்கள் எதிர்பார்த்த வருவாய் வரவில்லை. அதுவும் குறிப்பாக 3,200 கோடி ரூபாய் குறைந்திருக்கிறது. அதற்குக் காரணம், மக்களிடத்திலே பணப்புழக்கம் என்பது இப்பொழுது இல்லை. அதோடு மட்டுமல்ல; மத்திய அரசாங்கத்தினுடைய திட்டங்கள் செயல்படாத நிலை இங்கே தமிழ்நாட்டிலே இருக்கிற காரணத்தினால்தான், வரி வருவாய் குறைந்திருக்கிறது. புதிய பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கென்று மத்திய அரசாங்கம் பணம் அனுப்பியது; சுமார் 4,400 கோடி ரூபாய் பணம் தமிழக அரசுக்கு அனுப்பியது. அதை முறையாகப் பயன்படுத்தவில்லை. Digital India சார்பிலே கணினி தொழில்நுட்பத்திற்காக தொடக்கப் பள்ளிகளுக்கு 900 கோடி ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் செலவிடப்படவில்லை.

இன்னும் சொல்லப்போனால், ஏற்கெனவே மானியக் கோரிக்கையிலே சென்ற முறை நான் பேசுகிறபொழுது, நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். மத்திய அரசாங்கத்தின் சார்பாக பல கோடி

ரூபாய் இங்கே மாநிலத்திலே சாலைகள் போடுவதற்காக பணம் ஒதுக்கப்படுகிறது. எனக்குத் தெரிந்த அளவுக்கு மத்திய அரசாங்கம் மாநில அரசுமூலம் சுமார் 10,000 கோடி ரூபாய் அளவிற்கு பணம் ஒதுக்கி, சாலைகளைச் செப்பனிட வேண்டுமென்று சொல்கிறது. குறிப்பாக, நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, சென்னை-திருப்பதி சாலை, எங்களுடைய திண்டிவனம்-கிருஷ்ணகிரி சாலை, திருச்சி-காரைக்குடி சாலை இப்படி பல சாலைப் பணிகளை 2013-லே முடித்திருக்க வேண்டும். அந்தப் பணிகளெல்லாம் சிறப்பாக நடந்திருந்தால் வரி வருவாய் கூடியிருக்கும். எப்படியென்றால், அதற்காக சிமென்ட் வாங்கியிருப்பார்கள், ஜல்லி வாங்கியிருப்பார்கள், கம்பி வாங்கியிருப்பார்கள், பெயின்ட் வாங்கியிருப்பார்கள், இவற்றையெல்லாம் வாங்கினால் VAT என்கிற வரி வரும்; அதனால் வரி வருவாய் உங்களுக்குக் கூடியிருக்கும். ஆக, மத்திய அரசாங்கத்தினால் போடப்பட்ட திட்டங்களும் இங்கே முறையாக நடைபெறாத காரணத்தினால், வரி வருவாய் என்பது குறைந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள், நெடுஞ்சாலைத் துறையிலே சுணக்கம் ஏற்பட்டிருக்கிற காரணத்தினாலே பணிகள் நடைபெறவில்லை என்று சொன்னார்கள். TRANSSTROY என்ற நிதி நிறுவனம் பொருளாதாரத்திலே நலிவடைந்த காரணத்தினாலே அவர்கள் அந்தத் திட்டப் பணியை உரிய காலத்திலே செய்ய முடியவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே, திண்டிவனம்-கிருஷ்ணகிரி சாலையைக் கிடப்பிலே போட்டுவிட்டார்கள். நாங்களும் கடிதம் எழுதினோம். இது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் மேற்கொள்ளப்படுகின்ற பணி. இது மாநில அரசால் மேற்கொள்ளப்படுகிற பணி அல்ல. அதற்குத் தேவையான நிலம் மாநில அரசால் எடுத்துக் கொடுக்கப்பட்டுவிட்டது. ஆகவே, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம்தான் உரிய ஆணைகளைப் பிறப்பித்து அந்தப் பணிகளைத் தொடங்க வேண்டுமேயொழிய, மாநில அரசு அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதைப்போல, மற்றொரு சாலையையும் குறிப்பிட்டார். அந்த TRANSSTROY நிறுவனம்தான் அந்தப் பணியையும் எடுத்து மேற்கொண்டு வருகின்றது. ஆகவே, சாலைப் பணிகளுக்குத் தேவையான நிலத்தையெல்லாம் மாநில அரசு கொடுத்திருக்கின்றது. ஆனால், அந்த நிறுவனம்தான் உரிய நேரத்தில் அந்தப் பணியை மேற்கொள்ளவில்லை என்பதையும், இதற்குக் காரணம் மாநில அரசு அல்ல என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பதிலைத் தந்திருக்கிறார்கள். ஆனால், 'மாநில அரசினுடைய பணம் இல்லை, மத்திய அரசாங்கத்தினுடைய பணம்தான்' என்று நானே குறிப்பிட்டேன். ஆனால் அந்தப் பணம் இங்கு முறையாகச் செலவு செய்யப்படவில்லை என்கிற செய்தியை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். ஆனால் இதில் இருக்கிற பிரச்சினை என்னவென்று சொன்னால், இந்தச் சாலைகள் பெரும்பாலும் நெடுஞ்சாலைகள் என்கிற வகையில் பல மாவட்டங்கள் வழியாக போகின்றன. பல மாவட்டங்கள் வழியாக அந்தச் சாலைகள் செல்கிறபோது, அந்தச் சாலையைச் செப்பனிடுவதற்கு தண்ணீர் எடுப்பது, gravel ஓட்டுவது, ஜல்லிகளை உடைத்தெடுப்பதற்காக பாறைகளைத் தகர்ப்பது போன்ற பலவகையான பணிகளுக்கு, மாவட்டங்களிலிருக்கிற நிருவாகத்தை நம்பித்தான் அந்தச் சாலைகள் போடுவதற்கு மத்திய அரசாங்கத்தின் மூலமாக பணம் வருகிறது. ஆனால் எனக்கு கிடைத்திருக்கிற தகவல்—வேண்டுமென்றால் மாண்புமிகு அமைச்சர்கள்கூட அதுகுறித்து ஆய்வு செய்யலாம். Verify செய்துகொள்ளுங்கள். ** அதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2016 ஜூலை 25]

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம்-கிருஷ்ணகிரி சாலை N.H. 66 இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தனியார் பங்களிப்புமூலம் அகலப்படுத்தி, மேம்படுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டு பணி ஆரம்பிக்கப்பட்டது. திண்டிவனம்-கிருஷ்ணகிரி சாலையில் 182.18 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.624.20 கோடி செலவில் மேம்படுத்த M/s. TRANSSTROY என்ற தனியார் நிறுவனத்திடம் 16-4-2011 அன்று ஒப்படைக்கப்பட்டது. இப்பணி 15-4-2012-க்குள் முடிக்கப்படவேண்டும். இத்திட்டத்திற்குத் தேவையான 99.22 சதவிகித நிலம் மாநில அரசால் கையகப்படுத்தப்பட்டு, அந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்தச் சாலைப் பணியில் 60 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்ட நிலையில், டிசம்பர் 2013 முதல் பணிகள் ஏதும் நடைபெறவில்லை. 60 சதவிகிதப் பணிகள்தான் முடிக்கப்பட்டுள்ளன. டிசம்பர் 2013-லிருந்து பணிகள் ஏதும் நடைபெறவில்லை. M/s. TRANSSTROY நிறுவனம் தங்களுடைய பொருளாதார பாதிப்பால் இப்பணியைக் கிடப்பில் போட்டுள்ளது. மாநில அரசு மத்திய அரசிற்கு பலமுறை கடிதம் எழுதியபின், M/s. TRANSSTROY நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தத்தை இரத்து செய்ய விளக்கம் கேட்டு NHAI நோட்டீஸ் அனுப்பியது; இன்று வரை இரத்து செய்யவில்லை. திண்டிவனம்-கிருஷ்ணகிரி சாலையில் ஏற்பட்டுள்ள பழுதுகளை மாநில அரசு வலியுறுத்தியதால், சாலை செப்பனிடும் பணிகள் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ரூ.16 கோடி செலவில் பணிகள் நிறைவுபெற்று போக்குவரத்து நடைபெற்று வருகிறது. மேலும், M/s. TRANSSTROY நிறுவனத்தால் தமிழகத்தில் கீழ்க்கண்ட இடங்களில் பணி எடுக்கப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளது. காரைக்குடி-இராமநாதபுரம் N.H. 210, சாலைப் பணி ஆரம்பிக்கப்படவில்லை. திண்டுக்கல்-தேனி-குமுளி சாலை N.H. 45, N.H. 220 சாலைப் பணிகள் 50 சதவிகிதம் முடிவடைந்த நிலையில் நிறுத்தப்பட்டுவிட்டன. சென்னை-திருப்பதி N.H. 205 சாலைப் பணி, 90 சதவிகிதம் முடிவடைந்த நிலையில் நிறுத்தப்பட்டுவிட்டது. திருச்சி-காரைக்குடி சாலை N.H. 210 சாலைப் பணி, 90 சதவிகிதம் முடிவடைந்த நிலையில் நிறுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இந்த நிறுவனம் பொருளாதாரரீதியாக நலிவடைந்த காரணத்தினால், இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, மாநில அரசால் எந்தத் தடையும் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. எ.வ. வேலு, ஒரு நிமிடம் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் பேசுகிறபோது இந்தச் சாலைப் பணி மிகவும் தாமதமாக நடப்பதற்கு ** என்ற ஒரு தவறான கூற்றை இங்கே பதிய வைத்திருக்கிறார். மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் விரிவான விளக்கத்தைத் தந்துவிட்டார். நம்முடைய பொறுப்பு, நிலத்தைக் கையகப்படுத்தி தரவேண்டியதுதான். அதை நூற்றுக்கு நூறு சதவிகிதம் செய்து முடித்தாகிவிட்டது. மற்றபடி, சாலைகள் போடுவது, அதை விரிவாக்கம் செய்வது, அந்தப் பணிகளையெல்லாம் துரிதப்படுத்தி நடத்துவதெல்லாம் மத்திய அரசினுடைய தேசிய நெடுஞ்சாலைத் துறையினுடைய ஆணையம், NHAI—னுடைய பொறுப்பு. அதோடுமட்டுமல்லாமல், ** தேவையில்லாத குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிறார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ** குறிப்பிட்டு, 'அங்கிருந்து ஏதாவது தாக்கீது வந்தது, அதை அவர்கள் சரியாக கவனிக்கவில்லை' என்று குறிப்பிட்டு குற்றச்சாட்டு சொன்னீர்களென்றால், அதற்குரிய பதில் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** குறித்து தெரிவித்த குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அது சம்பந்தமாக நான் சொன்னது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், ** ஒத்துழைப்பு குறித்துச் சொன்னார். அவருக்கு இன்னொரு செய்தியையும் நான் சொல்கிறேன். நேரத்தையும், காலத்தையும் அதிகம் எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றுசொன்னால், சாலை வசதி என்று சொன்னால், முன்னால் இருக்கிற எம்.எல்.ஏ., பின்னால் இருக்கிற எம்.எல்.ஏ., ஆளுங்கட்சியினர் அனைவரும்தான் காரில் அந்தச் சாலைகளில் செல்கிறோம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு அவர்களே, நான் நீக்கிய பொருள் குறித்து நீங்கள் மீண்டும் பேசி பதிவு செய்ய முயற்சி செய்ய வேண்டாம். (குறுக்கீடு) அதை நீக்கிவிட்டேன். வேறு பொருள் குறித்துப் பேசுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பொருளின்மீது பேசவில்லை. ** அதை நீங்கள் verify செய்ய வேண்டும் என்பதற்காக நான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை . . .

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, அதற்கு ஆதாரம் இருக்கிறதா? (குறுக்கீடு) ஆதாரம் இல்லாமல் எதற்குப் பேசுகிறீர்கள்? நீங்கள் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். (குறுக்கீடு) தேவையில்லாமல் குறிப்பிட்டதெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) நீங்கள் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு சப்ஜெக்ட்டுக்கு வருகிறேன். தினம் பத்திரிகையில் படிக்கிறோம். நீங்களும் படிக்கிறீர்கள். இந்தச் செய்திகளெல்லாம் வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் 5 முறை எம்.எல்.ஏ.வாக இருந்திருக்கிறீர்கள். பத்திரிகைச் செய்தியை ஆதாரமாக வைத்துக்கொண்டு சபையில் பேச முடியுமா? அதெல்லாம் வேண்டாம். (குறுக்கீடு) புதிதாக வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013-2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்தான் அன்றைக்கும் நிதியமைச்சராக இருந்தார்கள். 'உங்களுக்கு திட்டமிட்ட வரி வருவாய் வராததற்கு காரணம், நிதி ஆளுமை என்கிற திறன்-Financial Management இல்லாத காரணத்தினால், குறையும்' என்று

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

26-3-2013 அன்றே நான் இதே மாமன்றத்தில் உங்களிடத்தில் குறிப்பிட்டேன். அதற்கு நீங்கள் என்ன பதில் தந்தீர்கள் என்று சொன்னால், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதே அவையில், "மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மிகச் சிறந்த நிருவாகத்தினாலும், நிதி மேலாண்மை மூலமாகவும், ஆடம்பரம் இல்லாத, ஊதாரித்தனம் இல்லாத செலவுகளைக் கட்டுப்படுத்தி, நிதி சீரமைப்பு மேம்படுத்துவதன்மூலமாக அதிக வருவாய் வருவதற்கு இலக்கு எட்டப்படும்" என்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். ஆனால், சென்ற முறை 'ஒவ்வோர் ஆண்டும் மாநிலத்தினுடைய சொந்த வருவாய் திட்டமிட்டபடி வராமல் குறைந்திருக்கிறது' என்றும் நீங்கள்தான் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

2013–2014 ஆம் ஆண்டு ரூபாய் 88 ஆயிரத்து 303 கோடி என்று நீங்கள் கணித்தீர்கள். ஆனால், வருவாய் வந்தது ரூபாய் 83 ஆயிரத்து 61 கோடி; ரூபாய் 5 ஆயிரத்து 332 கோடி deficit. 2014-2015 ஆம் ஆண்டு ரூபாய் 1 இலட்சத்து 8 ஆயிரத்து 545 கோடி வரும் என்று கணக்கு போட்டீர்கள். ஆனால், வரி வருவாய் ரூபாய் 87 ஆயிரத்து 7,000 கோடி; ரூபாய் 21 ஆயிரத்து 538 கோடி deficit. சென்ற முறை, 2015-2016-ல் ரூபாய் 1 இலட்சத்து 12 ஆயிரத்து 159 கோடி வரும் என்று கணித்தீர்கள். ஆனால், வந்தது ரூபாய் 95 ஆயிரத்து 468 கோடி. ஆனால், deficit ரூபாய் 16,690 கோடி. ஆக, இப்போது 2016-2017 ஆம் ஆண்டுக்கு, ரூபாய் 1 இலட்சத்து 19 ஆயிரத்து 108 கோடி வரும் என்று நீங்கள் கணித்திருக்கிறீர்கள். ஆக, சென்ற முறை நிதி ஆளுமை, மிக poor administration; நிதி ஆளுமை இல்லாத காரணத்தினால் குறைந்திருக்கிறது. இந்த முறையும் நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள். ஆனால், குறைவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதுதான் எங்களுடைய கணிப்பு. அதனால் சொல்கிறேன். வருவாய் குறைந்துகொண்டே வருகிற காரணத்தினால்தான் மொத்தக் கடன் இந்த ஆண்டு, நீங்கள் குறிப்பிட்டதைப்போல, 2 இலட்சத்து 52 ஆயிரத்து 431 கோடி ரூபாய் இன்றைக்கு வந்திருக்கிறது.

பொதுவாக ஓர் அரசாங்கம் கடன் வாங்குகிறபோது மூலதனக் கணக்கைச் செலவிடுவார்கள். பலமுறை நீங்களே இந்தச் சட்டமன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இன்னும் சொல்லப்போனால், எதிர்க்கட்சியாக இருக்கின்றபோதுகூட இந்த மூலதனத்தைப்பற்றி அழுத்தமாகப் பேசுபவர் நீங்கள். அந்தக்

குறிப்பையும் நான் வைத்திருக்கிறேன். மேலும், வருவாய் தரக்கூடிய அல்லது தொடர் செலவை தவிர்க்கின்ற முறையில் ஒரு நிலையான சொத்தினை உருவாக்குவதுதான் வளர்ச்சிப் பணிகளுக்குச் செய்யப்படும் மூலதனச் செலவு ஆகும்.

கடந்த நான்கு ஆண்டுகளாக மூலதனப் பணிகளுக்காக ஒதுக்கப்படும் நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. கணக்கிடப்பட்ட நிதியில் 74 சதவிகிதம் மட்டும் (குறுக்கீடு) இதை நான் சொன்னால் நீங்கள் பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா விளக்கமும் நிதிநிலை அறிக்கையில் விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. திரும்பத் திரும்ப, (குறுக்கீடு) நான் பேசுவதைக் கேளுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறுக்கிட்டுப் பேசுவதை நீங்கள் தடுக்க முடியுமா? (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** வருவாய்ப் பற்றாக்குறை, நிதிப் பற்றாக்குறையைப்பற்றி நீங்கள் கடந்த காலத்தில், நாங்கள் சொன்ன பதிலை திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது தொடருவதற்குரிய காரணத்தை நான் சொல்கிறேன். (குறுக்கீடு) தயவு செய்து உட்காருங்கள், நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, சொல்லுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து கணக்கிட்டுப் பார்க்கின்றபோது, இந்த நான்காண்டு காலத்தையும் கூட்டிப் பார்க்கின்றபோது 74% மட்டுமே செலவு செய்துள்ளீர்கள். 2006-2011-ல் நாங்கள் ஆட்சி நடத்துகின்றபோது 104.85% மூலதனத்திற்காகச் செலவு செய்திருக்கின்றோம். மூலதனத்தைப்பற்றி நிதியமைச்சர் அவர்கள் அடிக்கடி பேசுகிறவர். அதனால் சொல்கிறேன். வேறு ஒன்றுமில்லை. ஆனால், சென்ற ஐந்தாண்டுகளில். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் வருவாய்ப் பற்றாக்குறை பற்றியும், நிதிப் பற்றாக்குறை பற்றியும் இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள். வருவாய்ப் பற்றாக்குறை பற்றியும், நிதிப் பற்றாக்குறை பற்றியும் சில விளக்கங்களை அனைத்து உறுப்பினர்களுக்கும் சொல்லியாக வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கின்றேன்.*

*வருவாய்ப் பற்றாக்குறை என்பது, மாநிலத்தின் மொத்த வருவாய் வரவிற்கும், வருவாய் செலவினங்களுக்குமிடையே உள்ள வித்தியாசமாகும். ஒரு மாநில அரசின் வரி வருவாயின் போக்கு, மாநில பொருளாதார சூழ்நிலையைப் பொறுத்தே அமைகிறது. மாநில பொருளாதார வளர்ச்சி நிலை சிறப்பாக இருந்தால், வரி வருவாயும் அதிகரிக்கும். வருவாய்ப் பற்றாக்குறை என்பது, ஆண்டுதோறும் ஒரே சீராக வளர்ச்சியடைவதில்லை. ஆனால், வருவாய் செலவினங்கள், குறிப்பாக, சம்பளங்கள், ஓய்வூதியம், நிருவாகச் செலவுகள் தொடர்ந்து உயர்ந்துகொண்டே வரும். இதை திடீரென கட்டுப்படுத்த முடியாது. இதன் காரணமாக, வருவாய்ப் பற்றாக்குறையும், உபரி வருவாயும் ஒரு சுழற்சி முறையில்தான் இருக்கும். இது ஒரு நீண்ட கால அளவில், சராசரியாக கணக்கிடும்போது, (குறுக்கீடு) காரண காரியத்தை நான் சொல்லித்தானே ஆக வேண்டும்? (குறுக்கீடுகள்) காரண காரியத்தைச் சொல்லித்தானே ஆக வேண்டும்?*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள். அவையில் உறுப்பினர்கள் தொடர்ந்து இதுகுறித்துப் பேசக்கூடாது என்பதற்கு நிதி அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள். (குறுக்கீடுகள்) அந்த விளக்கம் எல்லா உறுப்பினர்களுக்கும் பொருந்தும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நீங்கள் அவருடைய நேரத்தை வீணாக்காதீர்கள், உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேசி முடித்தபிறகு, எதுவானாலும் அவர் பேசட்டும். (குறுக்கீடு) நான் பேசி முடித்தபிறகு, எனது பதிலில் ஏதாவது தவறு இருந்தால், அவர் பேசட்டும். அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. (குறுக்கீடு) இது என்ன வம்பாக இருக்கிறது? நீங்கள் கேட்கிற கேள்விக்கு விளக்கம் சொல்லித்தானே ஆகவேண்டும்? (குறுக்கீடு) இது சப்ஜெக்ட்தான். (குறுக்கீடு) நீங்கள் பொறுமையாக இருங்கள். நீங்கள் சொன்னதை நியாயப்படுத்துவதிலேயே குறிக்கோளாக இருக்காதீர்கள். உங்கள் கேள்விக்கு நாங்கள் பதில் சொல்கிறோம். நீங்கள் கேளுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். நிதி அமைச்சர் அவர்களிடம் நீங்கள் நேரடியாகப் பேசக்கூடாது. அவர் பதில் சொல்லட்டும், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** திரு. துரைமுருகன், நீங்கள் பொறுமையாக இருங்கள். இவ்வளவு நேரம் பொறுமையாகத்தானே இருந்தீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஆகவே, ஒரு நீண்டகால அளவில் சராசரியாகக் கணக்கிடும்போது வருவாய் உபரியும், பற்றாக்குறையும் சமன் செய்யும் நிலையில் சீராக இருக்கும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற 2011 ஆம் ஆண்டில், மாநிலத்தில் உபரி வருவாய் 1,364.10 கோடி ரூபாயாகவும், 2012-2013 ஆம் ஆண்டில் உபரி 1,760.27 கோடி ரூபாயாகவும் இருந்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அப்போது உபரி வருவாய் வந்திருக்கிறது. காலச் சக்கரம் எதனால் மாறியது என்பதை நான் சொல்கிறேன். அதற்காகத்தான் நான் உங்களோடு போராடிக்கொண்டிருக்கிறேன். அதற்குப்பிறகு, அதாவது, 2013-2014 முதல் மூன்று ஆண்டுகளாக வருவாய்ப் பற்றாக்குறை நிலவி வருகிறது. 2013-2014, 2014-2015 மற்றும் 2015-2016 ஆண்டுகளில் முறையே ரூ.1,788 கோடி, ரூ.6,407 கோடி, ரூ.9,481.04 கோடி ரூபாய் என உயர்ந்து வந்துள்ளது. பொருளாதார வளர்ச்சியில் மூன்றாவது ஆண்டாக மந்தநிலை தொடர்வதால், இந்த ஆண்டும் மந்தநிலை தொடர்வதால், 2013-2014, 2014-2015

மற்றும் 2015-2016-ல் இம்மாநிலத்தின் சொந்த வரி வருவாய் வளர்ச்சி முறையே, 3.46 சதவீதம், 6.70 சதவீதம் மற்றும் 2.35 சதவீதமாக இருந்தது. மாநில வரி வருவாய், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 2006-2007 முதல் 2010-2011 வரை 104 சதவீதம் உயர்ந்தது. ஆனால், இந்த மந்த நிலையிலும் 2011-2012 முதல் 2015-2016 வரை 107 சதவீதம் உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

2006-2007 முதல் 2010-2011 வரையிலான காலத்திலும் இரு ஆண்டுகளில் வருவாய்ப் பற்றாக்குறை நிலவியது அனைவரும் அறிந்ததே. உங்கள் ஆட்சிக் காலத்திலும் வருவாய்ப் பற்றாக்குறை இருந்தது. உலகளவிலும், தேசிய அளவிலும் தொடர்ந்துவரும் பொருளாதார மந்த நிலையே இதற்கு முக்கிய காரணமாகும். இந்நிலை எல்லா மாநிலங்களிலும் ஏற்பட்டுள்ளது. இந்தியாவிலுள்ள முக்கிய மாநிலங்களான மகாராஷ்ட்ரா, ஆந்திரப் பிரதேசம், மேற்கு வங்காளம், கேரளா உள்ளிட்ட மாநிலங்களில்கூட கடந்த சில ஆண்டுகளாகவே வருவாய்ப் பற்றாக்குறை நிலையே நிலவி வருகிறது. வருவாய் செலவினங்களில் முக்கியமானவை சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள். இவை இரண்டும் வருவாய்ச் செலவினத்தில் சராசரியாக 40 சதவீதம் ஆகும். ஓய்வூதிய செலவினம் என்பதைக் குறைக்க இயலாது; சம்பளங்களையும் திடீரென குறைக்க இயலாது. பள்ளிக் கல்வி, வருவாய்த் துறை, காவல் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறைகள் போன்ற அடிப்படைச் சேவைகளைத் தொடர்ந்து செம்மையாக அரசு வழங்க, அரசு அலுவலர்களும், ஊழியர்களும் அவசியம். ஆயினும், தேவையான, மிகவும் இன்றியமையாத இடங்களில்தான், புதிய ஆள் சேர்ப்பு மற்றும் நியமன ஒப்பளிப்பு செய்யப்பட்டு வருகிறது.

முற்பகல் 11-00

இவை இரண்டும் தவிர, மக்களுக்காகச் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களுக்கான செலவினங்களும் வருவாய்ச் செலவினங்களில் அடங்கும். நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சிகளுக்கு அளிக்கக்கூடிய நிதிப் பகிர்வுகள், மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், வீட்டு வசதித் திட்டம், வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள், கல்வி உதவித் தொகை திட்டங்கள், சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், உணவுப் பாதுகாப்புத் திட்டங்கள், இலவச மின்சாரத்திற்கு மானியம் மற்றும் போக்குவரத்துக் கழகங்களுக்கான மானியங்கள் மற்றும் ஏழையெளிய மக்கள்

சமுதாயத்தில் நலிவடைந்தவர்கள் பாதுகாப்பான வாழ்க்கை வாழ்வதற்கான திட்டங்களைச் செயல்படுத்துவதற்குமான செலவுகள்தான். இவற்றைக் குறைப்பதற்குச் சாத்தியமில்லை. (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள். ஆனால், இதை ஈடுசெய்ய கூடுதல் வரிச் சுமையை மக்கள்மீது திணிக்கவும் அரசு விரும்பவில்லை. (குறுக்கீடுகள்) இப்படி குறுக்கிடுவது தவறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கேள்வி கேட்டதற்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விளக்கம் சொல்வதை நீங்கள் தடுக்க முடியுமா? உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி மேம்படும் என எதிர்பார்க்கின்றோம். விரைவில் அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டால் வரி வருவாய் அதிகரிக்கும். அதனால் வருவாய்ப் பற்றாக்குறையும் குறைய வாய்ப்பு ஏற்படும். எனினும், தற்போதுள்ள சூழலில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வருவாய்ப் பற்றாக்குறை நிலையைத் தவிர்க்கவே விரும்புகிறது. வருவாய் வரவுகளை அதிகரிப்பதற்கு, வரி வசூலில் நிருவாகத்தைப் பலப்படுத்தும் முயற்சிகளையும், வருவாய்ச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கு, நலத் திட்டங்கள் சரியான நபர்களைச் சென்றடைவதை உறுதி செய்ய, பல்வேறு துறைகளில் கணினிமயமாக்கும் திட்டங்களைச் செயல்படுத்தும் முயற்சிகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது. இதனால் கணிக்கப்பட்ட அளவைவிட வருவாய்ப் பற்றாக்குறை குறைய வாய்ப்புள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொல்ல வந்தேன். நிதிநிலை அறிக்கையில் deficit போடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வரி வருவாய்க்கு வழியே சொல்லவில்லையே. அதோடு, நீங்கள் கொடுத்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையின் கடைசி பக்கத்தில் அடுத்த ஆண்டு 3.34 சதவிகிதம் எட்டும் என்று நீங்களே குறிப்பிட்டிருக்கிறீர்கள். நீங்களே சொல்கிறீர்கள், GDP பிரகாரம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை நிருவாகம் பொறுப்புடைமைச் சட்டம் 2003-ன்படி, வரும் இரண்டு ஆண்டுகளுக்கு கணிக்க வேண்டும். அந்தக் கணிப்பை விட்டுவிட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2017-2018-க்குப் போய்விட்டார். நீங்கள் பொறுமையாக இருங்கள். என்ன நடக்கிறது என்பதைப் பார்த்துவிட்டு, அதன்பிறகு முடிவு செய்யலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொடுத்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையின் கடைசி பக்கத்திலே 2017-2018 ஆம் ஆண்டு 3.34 சதவிகிதம் போய்விடும் என்று நீங்கள்தான் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதைத்தான் நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு 3 சதவிகிதத்திற்குள் இருக்க வேண்டும் என்பதற்காக, 2.96 சதவிகிதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு இருக்கின்ற நிதி நிலைமையைக் கணித்து, 2017-2018 மார்ச்சுக்கு, நீங்கள் சொன்ன 3.34 சதவிகிதம் வரும்; திரும்ப 2018-2019-க்கு மறுபடியும் 3 சதவிகிதத்திற்கு வந்துவிடும்; அதை நீங்கள் சொல்லமாட்டேன் என்கிறீர்களே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில், வரி வருவாய் இப்படியெல்லாம் வரும் என்று அதைமட்டும் சொல்லிவிட்டு நிறுத்தியிருக்கலாம். அடுத்த ஆண்டு 3.34 சதவிகிதம் வரும் என்று சொன்னால், GDP-ல் 3 சதவிகிதத்திற்குள் இருக்கவேண்டும் என்று சொல்லும்போது, அடுத்த ஆண்டு 3.34 சதவிகிதம் என்றால், Government திவாலாகிவிடுமே?

2016 ஜூலை 25]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற நிதி நிலையை, சட்டத்தின் வரையறைக்கு உட்பட்டு, புள்ளி விவரங்களைச் சொல்லவேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. அதைத்தான் நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், வரி வருவாய் குறித்து சொல்லாத காரணத்தால், பின்னர் வரியைப் போடுவீர்களோ என்ற அச்சம் பொது மக்களிடையே இருக்கிறது என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

முற்பகல் 11-05

பாரத ரிசர்வ் வங்கியின் இணையதள முகவரி rbi.org.in. ரிசர்வ் வங்கியில், மாநில வாரியாகக் கடன் வாங்கியவர்களின் விவரங்களை அதிலே தெரிவித்திருக்கிறார்கள். அதை கம்ப்யூட்டரில் open செய்தால் தெரியும். ** நீங்கள் அந்த இணையதளத்தினை open செய்து தெரிந்துகொள்ளலாம்.

நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடத்தில் தெரிவித்துக்கொள்வது, கடந்த ஐந்து ஆண்டுகளில் விதி 110-ன்கீழ் மக்களுக்குரிய பல திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே குறிப்பிட்டார்கள். தொடர்ந்து நீங்கள்தான் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். 30-4-2013-ல் சென்னையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக வண்டலூரில் ஒரு புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்கப்படும் என்று கூறியுள்ளீர்கள். 8-9-2011-ல் திருமழிசையில் 311 ஏக்கர் நிலப்பரப்பில், 2,160 கோடி ரூபாயில் ஒரு துணைக்கோள் நகரம் அமைக்கப்படும் என்று.....

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்ற தவறான கருத்தை இங்கே பதிய வைத்திருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்) ஆதாரத்தைக் கொண்டுவந்து கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, நீங்கள் முன்பே அதைக் கொண்டுவந்து என்னுடைய அறையில் கொடுத்திருக்க வேண்டும். (குறுக்கீடு) இப்போது கொண்டு வந்து கொடுத்தால் என்ன பிரயோஜனம்? (குறுக்கீடு) இந்த ஆதாரத்தை நீங்கள் என்னிடம் கொடுத்து, என்னுடைய அனுமதியை வாங்கித்தான் பேசி இருக்க வேண்டும். (குறுக்கீடுகள்) ஆகவே, இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு நிதி அமைச்சர், அதை நான் நீக்கிவிட்டேன். (குறுக்கீடுகள்) நான் அதை நீக்கிவிட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் வேறு பொருள் குறித்துப் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) தவறான கருத்தை அவர் பதிய வைக்கும்போது, அதற்குரிய பதிலை தர வேண்டிய கட்டாயம் எனக்கு இருக்கிறது. (குறுக்கீடுகள்) திரு. ஆஸ்டின், நீங்கள் கேளுங்கள். ஏன் அவசரப்படுகின்றீர்கள்? அதாவது தவறான கருத்தை அவர் சொன்னால், அதை மறுக்க வேண்டிய கட்டாயம் எனக்கு இருக்கின்றது. அதை நீங்கள் தயவுசெய்து பொறுமையாகத்தான் கேட்க வேண்டும். உட்காருங்கள். கொஞ்சம் பொறுமையாக இருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய அனுமதியை வாங்கிக்கொண்டுதான் பேச வேண்டும். அனுமதி இல்லாமல் பேசினால் அது பதிவாகாது. (குறுக்கீடுகள்) அதை நான் நீக்கிவிட்டேன். நீங்கள் வேறு பொருள் குறித்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே பொதுக் கடன் பற்றிய சில விவரங்களை நான் இந்த மாமன்றத்திற்கு கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்) நீங்கள் தவறான கருத்தைப் பதியவைக்கும்போது அதற்கு நான் பதில் சொல்லித்தானே ஆக வேண்டும்? (குறுக்கீடுகள்) மாண்புமிகு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் 2006-2011-ல் அமைச்சராக இருந்தபோது, எத்தனை முறை குறுக்கிட்டு எங்களைப் பேசவிடாமல் எழுந்து பேசினார் என்பதை சபைக் குறிப்பைப் பார்த்தாலே தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசியதை நீக்கிவிட்டேன். இப்போது அவர் வேறு பேசுகின்றார். அவர் ஒரு புள்ளிவிவரம் சொன்னார், அதை நான் நீக்கிவிட்டேன். மாண்புமிகு நிதி அமைச்சர், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. எ.வ. வேலு, நீங்கள் பேசுங்கள். வேறு சப்ஜெக்ட் குறித்து பேசுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** நான் வேறு சப்ஜெக்ட் குறித்துப் பேசுகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ் திருமழிசையில் 311 ஏக்கர் நிலப்பரப்பில் 2,160 கோடி ரூபாயில் ஒரு துணை நகரம் அமைக்கப்படும் என்று குறிப்பிட்டீர்கள். (குறுக்கீடுகள்) 4-4-2013-ல் மதுரை அருகில் தொப்பூர், உச்சம்பட்டி கிராமத்திலே 586.86 ஏக்கர் பரப்பளவில் ஒரு துணைக்கோள் நகரம் அமைக்கப்படும் என்று குறிப்பிட்டீர்கள். (குறுக்கீடு) 4-4-2012-ல் 1,560 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவேரி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, நீங்கள் ஒரு நிமிடம் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், என்னவென்று சொல்லுங்கள்.

***திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இந்த revenue deficit வந்தால், அதனால் தமிழக அரசாங்கம் திவால் ஆகிவிடும் என்ற திரு. எ.வ. வேலு அவர்கள் கூறிய கருத்திற்கு நான் பதில் சொல்லியே ஆக வேண்டும். அவர் சொன்ன விஷயம். . .

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு நிதி அமைச்சர். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள், நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், நான் பேசுகின்றேன். (குறுக்கீடுகள்) நீங்கள்

உட்காருங்கள், திரு. சாமி. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், நான் பேசுகின்றேன். (குறுக்கீடுகள்) திரு. ராஜா, நீங்கள் உட்காருங்கள். உங்களை நான் உட்காரச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) உங்களை நான் உட்காரச் சொன்னேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்; நான் நிற்கின்றேன். நான் பேசுகின்றேன்.(குறுக்கீடுகள்)

முற்பகல் 11-10

அதாவது, இதனை நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். 31-7-2006 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக திருத்திய வரவு-செலவுத் திட்டத்தின்மீதான விவாதத்தில் பேசியபோது, தி.மு.க. அமைச்சர்கள் 66 முறை குறுக்கிட்டார்கள். அதுமட்டுமல்ல; (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். அன்றைக்கு கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் திரு. வை. சிவபுண்ணியம் அவர்களும், திரு. கோவிந்தசாமி அவர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களும் குறுக்கிட்டுப் பேசினார்கள். ஆனால், இங்கே ஆளும்கட்சி உறுப்பினர்தான் குறுக்கிட்டுப் பேசுகிறார். (குறுக்கீடுகள்) திரு. பொன்முடி, உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எனக்குத் தெரியும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நான் பேசுகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நான் பேசுகிறேன்.

ஏற்கெனவே இதே பொருள் குறித்து இங்கே நான் பேசியிருக்கிறேன். மீண்டும் ஒரு முறை வற்புறுத்திச் சொல்கிறேன். அவையில் எந்த உறுப்பினரைப் பேச அழைப்பது என்பது பேரவைத் தலைவருடைய உரிமை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) அந்த உரிமையின்படி, clarification என்று எந்த உறுப்பினர் கேட்டாலும், (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். Clarification என்று எந்த உறுப்பினர் கேட்டாலும், (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அமைதியாக இருங்கள். Clarification என்று எந்த உறுப்பினர் கேட்டாலும், (குறுக்கீடுகள்) அது சரியென்று எனக்குத் தோன்றினால், சரியென்று பேரவைத் தலைவருக்குத் தோன்றினால், நான் அவரைப் பேச அழைப்பது என்னுடைய உரிமை. அதில் யாரும் குறுக்கிட முடியாது

(மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலேதான் நான் இப்போது அவரைப் பேச அழைத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) Clarification அவர் சொல்வார்; உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரும்பத் திரும்ப நான் சொல்கிறேன், நீங்கள் இதுபோன்று பேசினால். . .

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) திரு. எ.வ. வேலு அவர்கள், சபையில் ஒரு கருத்தினைப் பதிய வைத்திருக்கிறார். அந்தக் கருத்துக்கு. . . (குறுக்கீடுகள்)

(எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. துரைமுருகன் அவர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகே வந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்கள் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். ஒரு மந்திரியாக இருந்தவர் இப்படியா வருவது? (குறுக்கீடு) ஒரு மந்திரியாக பதவியிலிருந்தவர் இப்படியா வருவது? (குறுக்கீடுகள்) உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** அவர் இந்த சபையில் கேட்ட கேள்வி, நிதி பொறுப்புடைமைச் சட்டத்தைச் சார்ந்தது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபோன்று உங்கள் உறுப்பினர்கள் எழுந்து நின்று பேசினால் என்ன அர்த்தம்?

**திரு. க. பாண்டியராஜன்:** Fiscal Responsibility and Budget Management சட்டத்திற்கு இணங்க, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் பேசியபோது, அன்றைக்குக் குறுக்கிட்ட உறுப்பினர்கள் மந்திரிகளா? திரு. சிவபுண்ணியம் மந்திரியா? திரு. பீட்டர் அல்போன்ஸ் மந்திரியா?

**திரு. க. பாண்டியராஜன்:** 3.34% அடுத்த வருடம் நமது நிதிப் பற்றாக்குறை உயரும் என்ற கருத்தைப் பதிய வைத்தார். (குறுக்கீடுகள்) அந்தக் கருத்திற்கு நான் சொல்ல விரும்பும் பதில்,

திரு. எ.வ. வேலு அவர்கள் சொல்லிய அந்த Fiscal Responsibility and Budget Management Act-க்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாண்டியராஜன், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்) திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், காலையிலிருந்து நான் அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புக் கொடுக்காமல், இப்படி குறுக்கீடு செய்வது முறையற்றது. இந்த முறையற்ற செயலை நான் பலமுறை எச்சரித்தும், நீங்கள் மீண்டும் மீண்டும் என்னை அவையை நடத்த விடாமல், அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்துக் கொண்டேயிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவையில் உறுப்பினர்களைப் பேச அழைப்பது என்னுடைய உரிமை. (குறுக்கீடுகள்) அந்த உரிமையில் நீங்கள் குறுக்கிட முடியாது. நான் உறுப்பினர் ஒருவரைப் பேச அழைத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) அமைச்சரைப் பேச அழைப்பதா அல்லது உறுப்பினரைப் பேச அழைப்பதா என்பதை சூழ்நிலைக்கேற்ப முடிவு செய்ய வேண்டியது பேரவைத் தலைவராகிய என்னுடைய உரிமை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த உரிமையிலே நீங்கள் யாரும் தலையிட முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் எவ்வளவுதான் குறுக்கிட்டுப் பேசினாலும் சரி, எவ்வளவுதான் நீங்கள் அவையை நடத்தவிடாமல் குந்தகம் விளைவித்தாலும் சரி, என்னுடைய முடிவுகள் மாறாது. அவையை நடத்துவது என்னுடைய பொறுப்பு. அந்தப் பொறுப்பின்படி நான் அவரைப் பேச அழைத்திருக்கிறேன். திரு. எ.வ. வேலு அவர்கள் பேசியதற்கு திரு. பாண்டியராஜன் அவர்கள் பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். இடையில் நீங்கள் எல்லாம் எழுந்திருப்பது என்ன நியாயம்? இது முறையே இல்லை. (குறுக்கீடு) திரு. வேலு பேசினார். (குறுக்கீடு) திரு. க.பாண்டியராஜன், அதற்கு clarification கேட்கப் போகிறார்; அதற்கு அவர் பதில் சொல்லப் போகிறார். (குறுக்கீடு) அதன் பின்னர் திரு. எ.வ. வேலு அவர்கள் அதற்குப் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசுகிறார், உட்காருங்கள்.

முற்பகல் 11-15

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடுகள்) திரு. எ.வ. வேலு அவர்கள் பேசிய... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாண்டியராஜன் பேசுகிறார், உட்காருங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** 2017-2018-ல் வரவிருக்கின்ற நிதி நிலைமை பொறுப்புடைமைச் சட்டத்தை... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், பேசுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) திரு. எ.வ. வேலு அவர்கள் சொல்லிய Fiscal Responsibility and Budget Management Act-ஐ இதுவரை தி.மு.க. உள்ளடங்கிய மத்திய அரசாங்கம் (குறுக்கீடுகள்) இந்தச் சட்டம் இயற்றிய 2003-ல் இருந்து, ஒவ்வொரு வருடமும் அந்தச் சட்டத்தை மீறியிருக்கிறது. (குறுக்கீடுகள்) தி.மு.க. உள்ளடங்கிய மத்திய அரசாங்கம். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாண்டியராஜன், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள், உறுப்பினர் யாருடைய பெயரையாவது குறிப்பிட்டுப் பேசினால், point of order எழுப்ப அனுமதி தருவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, துறையின் சார்பில் பேசுகிறபொழுது, அந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்வதுதான் மரபு. (குறுக்கீடுகள்) ஆனால், இதை நாங்கள் சொல்கிறபோதெல்லாம், கடந்த கால வரலாற்று நிகழ்ச்சி ஒன்றை நீங்கள் தொடர்ந்து சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அன்றைக்கு ஆளும் கட்சியாக இருந்த தி.மு.க.-வின் சார்பில் யாரும் குறுக்கிட்டுப் பேசுவதற்கு சபாநாயகர் அவர்கள் அனுமதி தரவில்லை; அத்தகைய சூழ்நிலையும் வரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) முன்வரிசையில் இருந்த தோழமைக் கட்சியினுடைய தலைவர்கள்தான் பேசியிருக்கிறார்கள். எனவே, அதையும் தயவுகூர்ந்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நினைவிலே கொண்டு, அதற்குரிய வகையிலே இந்த அவையை நடத்தித் தர வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதிலே எனக்கு மாற்றுக் கருத்து இல்லை; நான் சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடுகள்) என்னவென்று கேட்டுக்கொள்ளுங்கள். அதாவது, ஓர் உறுப்பினர் பேசுகிறபோது, மாண்புமிகு அமைச்சர்கள்தான் குறுக்கிட்டுப் பேச வேண்டுமென்பது இல்லை. Clarification என்ற முறையில் ஓர் உறுப்பினர் கேட்டால்—அந்த அடிப்படையிலேதான், அன்றைய பேரவைத் தலைவர் அவர்கள், திரு. சிவபுண்ணியம் அவர்களை அனுமதித்திருக்கிறார். (குறுக்கீடுகள்) திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களை அனுமதித்திருக்கிறார். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் யார் பேசுவதாக இருந்தாலும் நான் அனுமதிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்காமல் நீங்கள் எழுந்து பேச முடியாது. நான் இப்போது திரு. க. பாண்டியராஜன் அவர்களைப் பேச அழைத்திருக்கிறேன். அவர் பேசியபிறகு திரு. எ.வ. வேலு அவர்கள் பேசுவார். (குறுக்கீடுகள்)

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் பேசிய கருத்துக்கு மாற்றுக் கருத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) இந்த நிதி நிலைமை பொறுப்புடைமைச் சட்டத்தையே தி.மு.க. உள்ளடங்கிய மத்திய அரசாங்கம், அந்தச் சட்டத்தை இயற்றிய 2003-ல் இருந்து ஒவ்வொரு வருடமும் மீறியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) FRBM Act-ஐ ஒவ்வொரு வருடமும் தி.மு.க. அரசு மீறியிருக்கிறது. (குறுக்கீடுகள்) மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையை எடுத்துக்கொண்டால், 2003-2004-லிருந்து 3.5 சதவிகிதம் பற்றாக்குறை; (குறுக்கீடுகள்) 2004-2005-லிருந்து 2.4 சதவிகிதம் பற்றாக்குறை; (குறுக்கீடுகள்) 2005-2006-லிருந்து 2.5 சதவிகிதம் பற்றாக்குறை; (குறுக்கீடுகள்) கடைசியில் 2013-2014 வரைக்கும் 3.45 சதவிகிதம் பற்றாக்குறை இருந்ததனால்தான், நிதி நிலைமை பொறுப்புடைமைச் சட்டத்தை மீண்டும் reconsider செய்வதற்காக மத்திய அரசாங்கம் திரு. நாயக் அவர்கள் தலைமையில் குழு ஒன்றை அமைத்திருக்கிறது. (குறுக்கீடுகள்) தமிழக அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், கடந்த 5 வருடங்களாக எல்லாப் பற்றாக்குறைகளும் 3 சதவிகிதத்திற்குள் இருந்தது. (குறுக்கீடுகள்) இந்த முறையும் பற்றாக்குறை 2.96 சதவிகிதம் வந்திருக்கிறது. (குறுக்கீடுகள்) அடுத்த முறை மத்திய அரசாங்கத்தினுடைய நிதிக் குழு பரிந்துரைக்கிணங்க, தமிழக அரசு ஊழியர்களுக்கு 30

சதவிகிதம் சம்பள உயர்வு; அதேபோல, ஓய்வூதியதாரர்களுக்கு 35 சதவிகிதம் சம்பள உயர்வு. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, இவையெல்லாம் இருப்பதால்தான் நிதி நிலைமை பொறுப்புடைமைச் சட்டத்தை மீண்டும் reconsider செய்வதற்கு மத்திய அரசாங்கம் அமைத்திருக்கிற குழுவின் நெறிமுறைப்படி, (குறுக்கீடுகள்) மாநில அரசாங்கம் செய்யவிருக்கிறது என்பதை மட்டும் நான் தெளிவுப்படுத்த விரும்புகிறேன். (கூச்சல்-குழப்பம்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து நின்று கொண்டிருந்தனர்)*

*முற்பகல் 11-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் அனுமதி கொடுத்தால் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவதற்கு நான் அனுமதி கொடுக்கவில்லை; உங்கள் இருக்கைகளில் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவற்றையெல்லாம் நீங்கள் சொல்லாதீர்கள் (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். திரும்பத் திரும்ப நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்; (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக உட்காருங்கள். நான் நிற்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன். (குறுக்கீடுகள்) நான் நிற்கிறேன். உட்காருங்கள் நீங்கள். அவை விதிகளை மதியுங்கள். அவையை முதலில் மதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். பேரவைத் தலைவருடைய கட்டளைக்குக் கட்டுப்படுங்கள். உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) திரு. எ.வ. வேலு, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இப்போது பேசுகிறீர்களா இல்லையா? திரு. எ.வ. வேலு இப்போது பேசுகிறீர்களா இல்லையா? வேறு உறுப்பினரை நான் அழைக்க வேண்டியதிருக்கும். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்கள் உங்களைப் பேசவிடாமல் தடுக்கிறார்கள், நான் என்ன செய்வது? அவர்கள் யாருக்கும் கட்டுப்பட மாட்டேன் என்கிறார்களே? (குறுக்கீடுகள்) அது என் உரிமை. அதையெல்லாம் நீங்கள் கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) அதையெல்லாம் நீங்கள் கேட்க முடியாது. என்னுடைய உரிமை அது. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரினுடைய உரிமை. அதை நீங்கள் கேட்க முடியாது. என்னை நீங்கள் கட்டுப்படுத்த முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. எ.வ. வேலு (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது

எதுவும் அவைக் குறிப்பிற்கு வராது. உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) திரு. எ.வ. வேலு, பேசுகிறீர்களா இல்லையா? (குறுக்கீடுகள்) திரு. எ.வ. வேலு பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். நீங்கள் என்ன எனக்கு உத்தரவு போடுகிறீர்கள்? நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன். திரு. எ.வ. வேலு, ஒரு நிமிடம் இருங்கள். திரும்பத் திரும்பச் சொல்கிறேன்; நீங்கள் யாரும் எனக்கு உத்தரவு போடமுடியாது. பேரவைத் தலைவருக்கென்று தனி உரிமை உண்டு. நான் யாரைப் பேச அழைக்கின்றேனோ, அவர்கள்தான் பேச வேண்டும். நீங்கள் எத்தனை தடவை, என்ன கூச்சலிட்டாலும் சரி; என்ன கூக்குரலிட்டாலும் சரி, அதற்கு நான் ஒன்றும் செய்யமுடியாது. என்னுடைய உத்தரவுப்படிதான் இந்த சபையை நான் நடத்த முடியும். உங்களுடைய உத்தரவுக்கு நான் கட்டுப்பட முடியாது. திரு. எ.வ. வேலு, நீங்கள் பேசுங்கள்; (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் உட்காருங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 110 விதியின்கீழ் இந்த மாமன்றத்திலே பல்வேறு அறிவிப்புகள் எல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த அறிவிப்புகளெல்லாம் தொடர்ந்து திட்டமாக வருவதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதற்கு நிதி ஒதுக்கி இருக்கிறாரா? மிக்சி, கிரைண்டர் மற்றும் ஃபேன் போன்றவற்றை இலவசமாக ஏற்கெனவே அளித்தீர்கள்; பாதி இடங்களில் கொடுக்கப்படாத நிலை இருக்கிறது. அந்தத் திட்டத்தையும் தொடர்ந்து இந்த அரசு நிறைவேற்ற இருக்கிறதா என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட மொத்த அறிவிப்புகள் எத்தனை? செயல்படுத்திவிட்ட அறிவிப்புகள் எத்தனை? நடவடிக்கைகளில் இருக்கின்ற அறிவிப்புகள் எத்தனை? அரசாணை பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிற அறிவிப்புகள் எத்தனை என்பதுபற்றி எல்லாம் நான் சென்ற கவர்னர் உரையின் போதே விளக்கமாகப்

பேசியிருக்கிறேன். திரும்பத் திரும்ப அதைக் கேட்டு ஏன் நேரத்தை வீணாக்குகிறீர்கள்? பிறகு நான் பதில் சொல்ல ஆரம்பித்தால், ஏன் பதில் சொல்கிறீர்கள் என்று கேட்கிறீர்கள். அது தவறுதானே? விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் நிலை பற்றி விளக்கமாகச் சொல்லியாகிவிட்டது. இந்த அவையின் பழைய குறிப்புகளை எடுத்துப் பாருங்கள். திரும்ப நீங்கள் கேட்டீர்கள் என்றால், நான் பதில் சொல்ல வேண்டுமா? சொல்லுங்கள்; நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசி பெறுகிற குடும்ப அட்டை வைத்திருக்கிற அனைவரையும் இலக்காக வைத்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இத்திட்டத்தைச் செயல்படுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையிலே, அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி போன்றவை இன்றைக்கு அவர்களுடைய இல்லங்களிலே சேர்க்கப்பட்டு, தாய்மார்களுடைய பணிச்சுமையைக் குறைத்து, தாய்மார்களுடைய ஏகோபித்த வரவேற்பைப் பெற்றிருக்கிற திட்டம் இந்தத் திட்டம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 70, பத்தி 143. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒரு நிமிடம் இருங்கள்.

**திரு. எ.வ. வேலு:** நான் உள்ளாட்சித் துறை குறித்துப் பேச ஆரம்பிக்கவே இல்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் நீங்கள் பேசுங்கள்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அற்புதமான திட்டமான, விலையில்லா மிக்ஸி, ஃபேன், கிரைண்டர் வழங்குகிற திட்டம் தாய்மார்கள், மகளிர்களுக்கு முழுமையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல்; அவர்களுடைய தொகுதியிலேகூட சென்று கேட்டால் தெரியும். அனைவருக்கும் கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; கடந்த தி.மு.க. ஆட்சியில் இரண்டு ஏக்கர் நிலம், டி.வி., போன்றவையெல்லாம் என் தொகுதியிலேயே கொடுக்கவில்லை; இப்படி அறிவிக்கப்பட்ட பல திட்டங்கள் எதையுமே கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்த விலையில்லா மிக்ஸி, ஃபேன், கிரைண்டர் ஆகியவை முழுமையாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் பற்றிப் பேசினார். விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தத் திட்டத்தை அறிவித்திருந்தாலும் முழுமையாகச் செயல்படுத்துவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய ஊரக வளர்ச்சித் துறையிலே விதி 110-ன்கீழ் அறிவித்த அத்தனைத் திட்டங்களுக்கும் G.O. போடப்பட்டு இன்றைக்குச் செயல்பாட்டிற்கு வந்துள்ளன. அதேபோல், நகராட்சித் துறையிலே 95 சதவிகிதம் அறிவிப்புகளுக்கு G.O. போடப்பட்டிருக்கிறது. ஒன்றிரண்டு திட்டங்கள் நில எடுப்பு, நீதிமன்ற வழக்கு போன்ற நிலைகளில்தான் நிலுவையாக இருக்கின்றன. முழுமையாகச் செயல்படுத்தியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அறிவித்த திட்டங்கள் மட்டுமல்லாமல், அறிவிக்காத அத்தனை மக்கள் நலத் திட்டங்களைக்கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விதி 110-ன்கீழான அறிவிப்புகள் பற்றி ஒரேயொரு கருத்தைச் சொல்கிறேன். கடந்த தி.மு.க. ஆட்சியில் உள்ளாட்சித் துறை அமைச்சராக எதிர்க்கட்சித் தலைவர்தான் இருந்தார். ஆனால்,

மகளிர் சுய உதவிக் குழுவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவித்து செயல்படுத்தியிருக்கிறார்கள். கடந்த தி.மு.க. ஆட்சியிலே, ஐந்து வருடங்களில் இந்தக் குழுக்களுக்கு 9 ஆயிரத்து 838 கோடி ரூபாய் கொடுத்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2011-2012 ஆம் வருடத்தில் விதி 110-ன்கீழ் ரூபாய் 4 ஆயிரம் கோடி அறிவித்தார்கள்; அடுத்த வருடம் ரூபாய் 4 ஆயிரம் கோடி, அதற்கடுத்த வருடம் ரூபாய் 6 ஆயிரம் கோடி, அதற்கடுத்த வருடம் ரூபாய் 6 ஆயிரம் கோடி, அதற்கடுத்த வருடமும் ரூபாய் 6 ஆயிரம் கோடி என முழுமையாகக் கிட்டத்தட்ட 26,460 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விதி 110-ன்கீழ் அறிவித்தது ரூபாய் 26,000 கோடி. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்தது ரூபாய் 26,460 கோடி. அதை முழுமையாகக் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் விதி 110-ன்கீழ் அறிவித்ததுதான். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எந்தத் திட்டத்தை அறிவித்தாலும், முழுமையாகக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதைச் சொல்கிறபொழுது, குற்றச்சாட்டாகவே சொல்லவில்லை என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விதி 110-ன்கீழ் இந்த மாமன்றத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அதிலே, நடைபெறாத திட்டங்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்பதுதான் என்னுடைய கேள்வியாக இருந்தது. மிக்ஸி, கிரைண்டர் எதுவுமே கொடுக்கப்படவில்லை என்று நான் சொல்லவில்லை. கொடுக்காதவர்களுக்கு மீண்டும் தொடர்ந்து கொடுப்பீர்களா? கொடுப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றுதான் நான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு அவர்களைத்தான் பேசுவதற்கு அழைத்திருக்கிறேன்; நீங்கள்

உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசிக்கொண்டிருக்கிறார்; உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு நான் வாய்ப்புக் கொடுக்கவில்லை. (குறுக்கீடு) இப்பொழுது உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை. திரு. எ.வ. வேலு அவர்களுக்குத்தான் வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். இப்போது உங்களை நான் அழைக்கவில்லை. உங்களுக்கு வாய்ப்புத் தரும்பொழுது நீங்கள் பேசலாம், உட்காருங்கள்.

**திரு. எ.வ. வேலு:** திருத்திய நிதிநிலை அறிக்கை பக்கம் 70, பத்தி 143-ல் "மத்திய அரசு ஏழாவது ஊதிய கமிஷன் பரிந்துரைகளைச் செயல்படுத்த உள்ள நிலையில், தமிழக அரசு ஊழியர்களுக்குப் புதிய ஊதிய விகிதத்தை நடைமுறைபடுத்துவது குறித்து தகுந்த பரிந்துரைகளை அளிப்பதற்காக இந்த அரசு உயர் அலுவலர் குழுவினை அமைக்கும்" என்று நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புவது, தமிழக அரசு இதற்கான குழுவினை எப்பொழுது அமைக்கும்? குழுவின் பரிந்துரைகள் எப்பொழுது வரும்? பரிந்துரைகள் எப்பொழுது நிறைவேற்றப்படும்? நிதிநிலை அறிக்கையில் இதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா? இதை நான் கேட்க விரும்புவதற்குக் காரணம், ஏற்கெனவே ஓய்வூதியம் சம்பந்தப்பட்ட ஒரு போராட்டம் நடைபெற்றபொழுது, அரசு சொன்னது, அரசாணை 65, தேதி. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை ஆராய்ந்து அறிக்கை அளிக்க குழு அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம். குழு அமைக்கப்படும்போது, அதன் கால அளவு வரையறை நிர்ணயம் செய்யப்படும். 3 மாதங்களோ, 4 மாதங்களோ, அதற்குள் ஏன் அவசரப்படுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) அதற்குள் எப்பொழுது கிடைக்கும்? எப்பொழுது தருவீர்கள்? என்று கேட்கிறீர்கள். இதெல்லாம் என்ன கேள்வி? குழு அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம். குழு அமைக்கும்பொழுதுதான், அந்தக் குழு பரிந்துரைகளை அளிக்க கால அளவு அரசால் நிர்ணயம் செய்யப்படும். அது 3 மாதங்களா, 6 மாதங்களா என்பது பின்னர் நிர்ணயம் செய்யப்படும்.

மத்திய அரசு அறிவிப்பு வந்தபிறகு, அதனடிப்படையில்தான் குழு அமைக்கமுடியும். அதுவரையில் பொறுமையாக இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கியிருக்கிறீர்களா என்றுதான் நான் கேட்கிறேன்; அந்தக் குழு பரிந்துரை செய்தால், பணம் கொடுக்க நிதியை ஒதுக்கியிருக்கிறீர்களா என்றுதான் மாண்புமிகு நிதியமைச்சரைக் கேட்டிருக்கிறேன். இது ஒன்று. இதை நான் சொல்வதற்கு என்ன காரணம் என்று சொன்னால், ஓய்வூதியதாரர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று அரசாணை 65, 26-2-2016-ல் வல்லுநர் குழு ஒன்றை நீங்கள்தான் அமைத்தீர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு முழுமையாக ஒப்புதல் அளித்த பின்னர், அதை ஆய்வு செய்ய நாம் குழு அமைக்கப் போகிறோம். அந்தக் குழுவினுடைய முடிவு, மத்திய அரசு முழு விவரமும் அளித்த பின்னர் அறிவிக்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறோம். குழுவே இன்னும் அமைக்கவில்லை; அதற்குள் எப்படி நிதி ஒதுக்க முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) குழு என்ன பரிந்துரை செய்கிறதோ, அதன் அடிப்படையில்தானே நிதி ஒதுக்கப்படும்? இது என்ன தேவையில்லாத கேள்வி.

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் பேச ஆரம்பித்து 40 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடு) அதற்கு நான் என்ன செய்வது? நாற்பது நிமிடங்கள் ஆகிவிட்டன. ஒரு நிமிடத்தில் உங்கள் உரையைப் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர்கள் குறுக்கிட்டுப் பேசியிருக்கிறார்கள். நான் இன்னும் பேசவேயில்லை. அரசாணை எண் 65, 26-2-2016-ல் ஒரு

வல்லுநர் குழுவை அமைத்து ஆணை வெளியிடப்பட்டது. ஓய்வூதியம் குறித்து ஒரு பரிந்துரையைப் பெற்று, அது நிறைவேற்றப்படும் என்று இதே மாமன்றத்திலே தெரிவிக்கப்பட்டது. ஆனால், நீங்கள் 26-2-2016-ல் வெளியிட்ட ஆணையின்படி, அந்தக் குழுவின் வரையறுக்கப்பட்ட time முடிந்துவிட்டது. இந்நிலையில், அந்தக் குழுவின் பரிந்துரை பெறப்பட்டதா; மீண்டும் பழைய முறையில் ஓய்வூதியம் வழங்கப்படுமா என அரசு அலுவலர்கள் எதிர்பார்த்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பக்கம் 5, பத்தி 38-ல் மாநகரப் பேருந்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய contribution ஓய்வூதியத் திட்டத்தை மத்திய அரசு அறிவித்தது. அதனுடைய சாதக பாதகங்களை ஆராய்வதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு குழுவினை இங்கே நியமித்திருக்கிறார்கள். அதனுடைய காலவரையறை மூன்று மாதங்கள் என நிர்ணயம் செய்யப்பட்டது. அந்தக் காலக்கெடு முடிவடைந்துவிட்டதால், அந்தக் குழுவின் கால அளவினை மீண்டும் மூன்று மாதங்கள் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** சீக்கிரம் முடிப்பதற்கு mike-ஐக் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். Mike-கூட ஓரவஞ்சனை செய்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டு வருவது தொடர்பாக ஒரு கமிட்டியைப் போட்டிருக்கிறார்கள். அந்தக் குழுவில் மூன்று நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இரண்டு உறுப்பினர்கள் வரவேயில்லை; தற்போது ஓர் உறுப்பினர்தான் உள்ளார். கமிட்டி

எப்படிக் கூடும்? கமிட்டியில் மூன்று உறுப்பினர்களைப் போட்டீர்கள். "முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டினேன்; இரண்டு குளம் பாழ்; ஒண்ணுல தண்ணியே இல்லை" என்ற பழமொழிபோல் இருக்கிறது. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 24, பத்தி 42; "கிராமப்புற பொருளாதாரத்தில், குறிப்பாக ஏழைகளின் வாழ்வாதாரத்தில், ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்த, இந்த ஆண்டில் 12,000 ஏழைப் பெண்களுக்கு 12,000 கறவைப் பசுக்கள் வழங்கப்படும்" என்று நீங்கள் தெரிவித்துள்ளீர்கள். அப்படி வழங்கப்பட்டால், தமிழகத்தில் தற்போது உற்பத்தியாகும் பாலைவிட, மேலும் 60,000 லிட்டர் பால் அதிகமாக உற்பத்தியாக வாய்ப்பிருக்கிறது. தற்போது தமிழ்நாட்டில் சுமார் 70 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தியாவதாக 2015-ல் புள்ளிவிவரங்களை நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, இந்த சப்ஜெக்ட்டோடு, உங்கள் உரையை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) நேரமாகிவிட்டது. மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், கறவைப் பசுக்களைத் தாய்மார்களுக்கு விலையில்லாமல் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். 2011-ல் தி.மு.க. ஆட்சியின் இறுதியில், பால் கொள்முதல் 21 இலட்சம் லிட்டராக இருந்தது. இப்போது மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில், கறவைப் பசுக்களை தாய்மார்களுக்கு விலையில்லாமல் கொடுத்ததன் அடிப்படையில், பால் உற்பத்தி வருடத்திற்கு 27 இலட்சம் லிட்டராக உயர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச கறவைப் பசுக்கள் கொடுத்ததைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. பால் உற்பத்தி அதிகமாகிறது; இப்போது 70 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆவின் நிறுவனம் 28 இலட்சம் லிட்டர் பாலைத்தான் கொள்முதல்

*செய்கிறது. மீதியிருக்கிற பாலை, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பாலை* collect *செய்ய* route *போடுகிறார்கள். ** விவசாயிகள் பாலைக் கீழே கொட்டுகின்ற செய்திகள் எல்லோருக்கும் தெரியும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. எ.வ. வேலு, நீங்கள் ஆதாரத்தோடு பேசுங்கள். ஆதாரமில்லாமல், போகிற போக்கில் பொத்தாம் பொதுவாக நீங்கள் ஏதேதோ பேசிக்கொண்டு போகிறீர்கள். ** என்பதை ஆதாரத்தோடு சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அந்த வார்த்தைகள் எல்லாம் நீக்கப்படுகின்றன. நீங்கள் பேசி முடியுங்கள்.*

**திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 5, பத்தி 38-ல், மாநகரப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணிப்பதற்காக, மூத்த குடிமக்களுக்கு பேருந்துப் பயண, . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. எ.வ. வேலு, நீங்கள் பேசியது போதும்; நிறைய பேசிவிட்டீர்கள்; உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்த வாய்ப்பில் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன்.*

**திரு. பி.எம். நரசிம்மன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுத்துக்களில் அகரமாய், சொற்களில் பிரணவமாய், நதிகளில் கங்கையாய். . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, பேச ஆரம்பித்து 44 நிமிடங்களாகிவிட்டன. (குறுக்கீடுகள்) நான் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) நான் என்ன செய்வது? நான் சபையை நடத்த வேண்டுமல்லவா? (குறுக்கீடுகள்) நாற்பது நிமிடங்கள் ஆகிவிட்டன, நான் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) நீங்கள் ஒத்துழைக்க வேண்டும் அல்லவா? எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் துணைத் தலைவர்தான், உறுப்பினர் பேசுவதற்கு நேரம் கேட்கிறார்; இத்தனை பேர் எழுந்து நின்றால் எப்படி? இந்தப் பழக்கத்தை கொஞ்சம் மாற்றுங்கள். (குறுக்கீடுகள்) திரு. நரசிம்மன், கொஞ்சம் உட்காருங்கள்; ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) முன்வரிசையில் அமர்ந்திருக்கும் யாராவது ஒருவர் எழுந்து* time

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கேட்பது என்பது ஒரு முறை; எல்லோரும் எழுந்து நின்று கேட்டால் எப்படி? நான் என்ன செய்ய முடியும்? இப்படி எழுந்து நின்றால் நான் சபையை எப்படி நடத்துவது? (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், இன்று காலையிலிருந்து உங்கள் உறுப்பினர்கள் நடந்துகொள்ளும் முறை நியாயமா என்பதை மனசாட்சியோடு எண்ணிப் பாருங்கள் (குறுக்கீடுகள்) நியாயமா என்று எண்ணிப் பாருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இப்படித்தான் அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புக் கொடுப்பீர்களா? (குறுக்கீடு) நீங்கள் இவ்வாறெல்லாம் நடந்துகொள்வது முறையல்ல. மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் உரையை முடியுங்கள்.

முற்பகல் 11-35

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் கட்டணமின்றிப் பயணிப்பதற்காக 'மூத்த குடிமக்களுக்கான பேருந்துப் பயண அட்டைத் திட்டத்தின்கீழ், இதுவரை 2.49 இலட்சம் அடையாள அட்டைகள் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் வழங்கப்பட்டுள்ளன' என நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம், ஏனைய மாநகராட்சிப் பகுதிகளில், ஏனைய போக்குவரத்துக் கழகங்களின்மூலம் 31 வருவாய் மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்படுமா என்பதை இந்த நேரத்தில் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கை பக்கம் 2-ல். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் உரையாற்றியது போதும், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்றுதான். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் உரையாற்றியது போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேச ஆரம்பித்து 55 நிமிடங்கள் ஆகிவிட்டன. நீங்கள் உரையாற்றியது போதும்; உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உரையாற்றியது போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசியது போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒரு நிமிடத்தில் நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை பக்கம் 2-ல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 22-3-2012 அன்று தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023-க்கான ஆவணத்தை வெளியிட்டு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான பாதையை வடிவமைத்து வழிகாட்டியுள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளதோடு, "அமெரிக்காவைப் பற்றிய ஒரு மாபெரும் கனவைக் கண்ட மார்டின் லூதர் கிங்கைப் போல், தமிழ்நாட்டிற்காக நானும் ஒரு தொலைநோக்குப் பார்வை, கனவு கொண்டுள்ளேன்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியுள்ளதாக ஒரு கருத்தும் நினைவுகூரப்பட்டுள்ளது. அதற்கான இலக்குகளை வரையறுத்து, அந்த இலக்குகளை அடைய, அந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள திட்டங்கள் எடுத்துரைக்கப் பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனவுத் திட்டமான, தொலைநோக்குத் திட்டம், பகுதி-2-ல், மின்சாரம், போக்குவரத்து, தொழில், நகர்ப்புறம், விவசாயம், மருத்துவம், பொது மற்றும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான மொத்த மூலதனம், 2013 ஆம் ஆண்டிலிருந்து எனக் கணக்கெடுக்கும்பொழுது, 11 ஆண்டுகளுக்கு 15 இலட்சம் கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆக, 15 இலட்சம் கோடி ரூபாய். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, நீங்கள் உரையாற்றியது போதும், உட்காருங்கள்; நேரமில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, நீங்கள் எவ்வளவு நேரம் பேசி, உரையை முடிப்பீர்கள்? (குறுக்கீடு) நீங்கள் எவ்வளவு நேரம் பேசி உரையை முடிப்பீர்கள்? (குறுக்கீடு) நான் மற்ற உறுப்பினர்களுக்கும் பேச அனுமதியளிக்க வேண்டுமல்லவா? (குறுக்கீடு) திரு. எ.வ. வேலு அவர்கள் 57 நிமிடங்கள் பேசிவிட்டார். இன்னும் எவ்வளவு நேரம் பேசுவார்? உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. எ.வ. வேலு, நீங்கள் உரையாற்றியது போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பேச அனுமதியுங்கள். தி.மு.க. உறுப்பினர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, நீங்கள் உரையாற்றியது போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான். அதற்கு மேல் பேச அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு)

**திரு. பி.எம் நரசிம்மன்:** எழுத்துக்களில் அகரமாய், சொற்களில் பிரணவமாய், நதிகளில் கங்கையாய், புனிதத்தில் காற்றாய், மலைகளில் மேருவாய், விண்மீன்களில் வெண்ணிலவாய்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு அவர்கள் பேசுவதற்கு 57 நிமிடங்கள் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடு) இதற்கு மேல் எவ்வளவு நேரம் கொடுப்பது? (குறுக்கீடு) அதெல்லாம் முடியாது; நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்களெல்லாம் எனக்குச் சொல்லாதீர்கள். (குறுக்கீடு) நீங்களெல்லாம் எனக்குச் சொல்லாதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் recommend செய்யாதீர்கள். (குறுக்கீடு) திரு. எ.வ. வேலு அவர்களே நன்றாகப் பேசுவார்; நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** வேதத்தில் சாமமாய் விளங்கும் தமிழினத்தின் விழியே, தமிழகத்தின் வழியே, எங்கள் அம்மாவே! (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) அயராத உழைப்பால், அர்ப்பணிப்புக் குணத்தால், பேரறிவுத் திறத்தால், இவ்வுலகை சுழல வைக்கும் திறமை தங்களுக்கு உண்டு. (குறுக்கீடுகள்) 'அம்மா' என்கிறது உலகெங்கும் வாழும் தமிழினம்; (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) தங்கள் பெயரில் சத்தியம் இருக்கிறது. அந்தச் சத்தியத்தை வணங்கி. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன், கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடுகள்) தி.மு.க. உறுப்பினர்கள், முதலில்

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர், நான் நிற்கிறேன் அல்லவா? நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இத்தனை பேர் எழுந்து நின்று, திரு. எ.வ. வேலு அவர்களுக்கு recommend செய்ய வேண்டிய அவசியமே இல்லை. ஏனென்றால், திரு. எ.வ. வேலு அவர்கள் பேசுவதற்கு நான் 57 நிமிடங்கள் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடுகள்) அவர் பேசுவதற்கு 57 நிமிடங்கள் அனுமதியளித்துவிட்டேன். (குறுக்கீடுகள்) நான் என்ன செய்வது? (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள், முதலில் அவரவர் இருக்கைக்குச் சென்று அமருங்கள். (குறுக்கீடு)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய இருக்கைக்கு அருகில் சென்று, அவருடன் வாதம் செய்ய முற்பட்டார்)

திரு. எ.வ. வேலு, இதுபோன்று நடந்துகொள்வது தவறு. இந்தப் பழக்கம் தவறு. (குறுக்கீடு) இந்தப் பழக்கம் தவறு. (குறுக்கீடு) இந்தப் பழக்கமே தவறு. (குறுக்கீடு) திரு. எ.வ. வேலு, முதலில் உங்களுடைய இருக்கைக்குச் சென்று அமருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு, உங்களுக்கு 57 நிமிடங்கள் பேச அனுமதியளித்துவிட்டேன். (குறுக்கீடு) நீங்கள் பேசுவது பற்றியோ, மற்றவை பற்றியோ எனக்குக் கவலை இல்லை. (குறுக்கீடு) நீங்கள் 57 நிமிடங்கள் பேச அனுமதியளித்துவிட்டேன். (குறுக்கீடு) இந்த list-ஐ எப்பொழுது முடிப்பீர்கள்? சாயங்காலம் 6 மணிக்கா? ஒவ்வோர் உறுப்பினரும் இவ்வளவு நேரம் பேசினால், நான் அவையை எப்போது முடிப்பது? மாலை ஆறு மணி வரையா அவையை நடத்துவது? இப்படிப் பேசினால் எப்படி அவையை நடத்துவது? என்னை மாலை 6 மணி வரை அவையை நடத்தச் சொல்கிறீர்களா? (குறுக்கீடுகள்) அதெல்லாம் முடியாது. (குறுக்கீடுகள்) அவர் பேசுவதற்கும், அமைச்சர்கள் பதில் சொல்வதற்கும் நான் பெருந்தன்மையோடு அனுமதி அளித்தேன்; 57 நிமிடங்கள் அனுமதியளித்திருக்கிறேன். அதற்குப் பின்னாலும் என்னை நீங்கள் இப்படி வற்புறுத்துவது முறையல்ல. கடைசி முறையாக உங்களை எச்சரிக்கிறேன். உங்களுடைய கட்சி உறுப்பினர்கள் நான் மணியடித்தால் உடனே உரையை முடிக்க வேண்டும். இனி யாருக்கும் நான் extension-னே கொடுக்கமாட்டேன். திரு. எ.வ. வேலு, ஒரே நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

முற்பகல் 11-40

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 11 ஆண்டுகளை நாம் கணக்கிட்டுப் பார்க்கின்றபோது, ஆண்டுக்கு மூலதனச் செலவு என்பது 1.36 இலட்சம் கோடி ரூபாய் ஒதுக்கினால்தான் 2023-ல் திட்டங்கள் போய்ச் சேர முடியும். ஆனால், இந்தத் திட்டம் அறிவித்த பின்பு, தொடர்ந்து 4 ஆண்டுகளாகப் பார்க்கின்றபோது, ஆண்டிற்கு 43,690 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் முழுமையடையவேண்டுமென்று சொன்னால், 1,36,000 கோடி ரூபாய் ஒரு ஆண்டிற்கு இருந்தால்தான் முழுமையடையும். ஆனால், முழுமையடையவில்லை. தொலைநோக்குத் திட்டம் என்பது உங்களுடைய கனவுத் திட்டமாக இருக்கலாமேயொழிய நனவுத் திட்டமாக வருவதற்குரிய வாய்ப்புகள் இந்த நிதிநிலை அறிக்கையிலே இடம்பெறவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதோடு மட்டுமல்ல; . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, போதும்; அதோடு நிறுத்திக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) நன்றி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். மைக்கிற்கு சற்று தள்ளி நின்று பேசுங்கள். (குறுக்கீடுகள்) நானே அவருக்கு நன்றி சொல்லிவிட்டேன்; நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிவுத் திறத்தால் இவ்வுலகை சுழலவைக்கும் திறமை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) 'அம்மா' என்கிறது உலகெங்கும் வாழும் தமிழினம்; தங்கள் பெயரில் சத்தியம் இருக்கிறது. அந்தச் சத்தியத்தை வணங்கி, நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் எனது உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்மீது சில கருத்துகளைப் பேச அனுமதி தந்த, நான் நித்தம் நித்தம் வணங்கும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாத கமலங்களுக்கு எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன். சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்த என்னை, முதன்முதலில் மாவட்டக் கழகச்

செயலாளராக்கி, சேவல் சின்னத்தில் சட்டமன்றத்திற்குப் போட்டியிடச் செய்து, அரசு தலைமைக் கொறடா மற்றும் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஆகிய பொறுப்புகளைத் தந்து, திருத்தணி சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக அறிவித்து, என்னை வெற்றி பெறச்செய்து, அவையில் பேசுவதற்கு நல்வாய்ப்பினையும் தந்த, நான் அன்றாடம், நித்தம் நித்தம் வணங்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். திருத்தணி தொகுதி வாக்காளர்களுக்கு எனது மனமார்ந்த வணக்கத்தையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருத்தணி தொகுதி வாக்காளர்களுக்கு நீண்ட நாட்களாக கோரிக்கைகள் பல இருந்தாலும், இதனை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் நிறைவேற்ற மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். திருத்தணி நகருக்குப் புறவழிச் சாலை வேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட நெடுநாட்களாக பொது மக்கள் கோரி வருகிறார்கள். திருத்தணி வளர்ந்து வரும் நகரமாகும். அன்றாடம் வெளி மாநிலங்களிலிருந்து சுமார் 10,000-க்கும் மேற்பட்டவர்கள் வந்துசெல்கின்ற ஒரு நகரமாகும். நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே, திருத்தணி நகருக்குப் புறவழிச் சாலையை அமைத்துக் கொடுக்கும்படி மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திருத்தணி நகருக்குப் பாலாற்றிலிருந்து கூடுதல் குடிநீர்த் திட்டத்தையும் நிறைவேற்றித்தர அன்போடு கேட்டுக்கொள்கிறேன். திருத்தணி அரசு பொது மருத்துவமனையை, மாவட்ட தலைமையிட மருத்துவமனைக்குச் சமமாக தரம் உயர்த்திக்கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

ஆர்.கே. பேட்டை மற்றும் பள்ளிப்பட்டு பகுதியில் ஓர் அரசு கலைக் கல்லூரி உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதட்டூர்பேட்டையில் ஜவுளிப் பூங்கா அமைத்துக்கொடுக்க வேண்டுமென்கின்ற கோரிக்கையையும் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆர்.கே. பேட்டையில் புதிய வட்டம் தொடங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை எதிர்த்தவர்கள் இன்று காரற்ற வயல்போல, தாரற்ற வாழைபோல,

பேறற்ற சிலைபோல, நீரற்ற மீன்போல, வேரற்ற மரம்போல, அந்தோ! பரிதாபமாக உள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நடைபெற்ற தேர்தலில் நமக்கு எதிராக பத்திரிகைகள், ஊடகங்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் எத்தகைய விமர்சனங்களை, எதிரான கருத்துகளை எடுத்துரைத்தாலும், தமிழ்நாட்டு மக்கள் நாடு போற்றும் நல்ல தீர்ப்பினைத் தந்து, ஆட்சி அதிகாரத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் கரங்களிலே ஒப்படைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சிலர் முதலமைச்சர் ஆகவேண்டுமென்று ஒத்திகை பார்த்தார்கள். அந்தக் கனவு சுக்குநூறாகிப் போனது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டை ஆளுகின்ற தகுதி படைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவர் மட்டும்தான் என்று (மேசையைத் தட்டும் ஒலி) நல்ல தீர்ப்பினை தமிழ்நாட்டு மக்கள் வழங்கியிருக்கிறார்கள். தமிழ்நாட்டு அரசியலில் ஆளுகின்ற கட்சிக்கே தொடர்ந்து மீண்டும் ஆட்சி அதிகாரம் என்ற வரலாற்றை (மேசையைத் தட்டும் ஒலி) 32 ஆண்டுகள் கழித்துப்பெற்ற பெருமை தங்கத் தாரகை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்! (மேசையைத் தட்டும் ஒலி) தொடர் ஆட்சி என்பது சாதாரண விஷயம் அல்ல; இதனை ஓர் ஆங்கிலப் பத்திரிகை, "மாண்புமிகு அம்மா அவர்களால் நிறைவேற்றப்பட்ட நலத் திட்டங்களாலே பலப்படுத்தப்பட்டதுதான் அம்மா அவர்களின் அரசு" என்று குறிப்பிட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

நடைபெற்ற பொதுத் தேர்தலில் மாண்புமிகு அம்மா அவர்களுக்குக் கிடைத்த தொடர் வெற்றி இமாலய வெற்றியாகும்; வரலாற்றில் குறிப்பிடும் வெற்றி ஆகும். இந்த மகத்தான வெற்றிக்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் சில முக்கியமான காரணங்கள்; விலையில்லா மடிக்கணினி வழங்கி சாதனை படைத்தது; ஒவ்வொரு குடும்பத்திற்கும் விலையில்லா இருபது கிலோ அரிசி வழங்கியது; மானிய விலையில் உணவுப் பொருட்கள் வழங்குவது; மதுவிலக்கு படிப்படியாக அமல்படுத்தப்பட்டு பூரண மதுவிலக்கு என்ற நிலை எய்தப்படும் என்று தேர்தல் அறிக்கை அறிவித்தது; தேர்தலில் எந்தக் கட்சியோடும் கூட்டணி வைத்துக்கொள்ளாமல், தன்னந்தனியாக 234 தொகுதிகளிலும் இரட்டை இலைச் சின்னத்தில் போட்டியிடச் செய்த மாண்புமிகு

இதய தெய்வம் அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) ராஜ தந்திரம் மற்றும் தன்னம்பிக்கை; பெண்கள் முன்னேற்றத்திற்கான திட்டங்களை தேர்தல் அறிக்கையில் வெளியிட்டது; மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஒரே அரசியல் வாரிசு, மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டுமே என்கின்ற நிலைப்பாடு. (மேசையைத் தட்டும் ஒலி) பெண்களுக்குத் திருமண உதவித் திட்டம் நடைமுறைப்படுத்துவது; ஏழைகளுக்கு முதியோர் உதவித் தொகை ரூபாய் ஆயிரமாக வழங்குவது போன்றவை ஆகும்.

மேலும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சி தொடரவும், நிலைத்து நிற்கவும், மணிமகுடமாகத் திகழ்வது இரண்டு விஷயங்கள். அதிலே ஒன்று. மாண்புமிகு அம்மா அவர்களின் விடாமுயற்சியால் காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்தது. மற்றொன்று; உச்ச நீதிமன்றத்தின்மூலம் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்தியது பெருமைக்குரியதாகவும், பாராட்டுக்குரியதாகவும் வரலாற்றில் இடம் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட தமிழ்நாட்டினுடைய ஜீவாதார உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, எந்த முதலமைச்சரும், எந்த அரசியல் கட்சித் தலைவரும் நிறைவேற்றமுடியாத அற்புதமான திட்டத்தை தமிழ்நாட்டு மக்களுக்காக, தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிறைவேற்றினார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், பல அற்புதமான திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் நிறைவேற்ற, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றத்திலே, இந்த நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோருடைய கொள்கைகள், திட்டங்களையெல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திட்டங்களாக மலரச் செய்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-50*

ஒரு நாடு முன்னேற வேண்டுமானால், பல அடிப்படை விஷயங்களைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். அப்படிப் பார்க்கிறபோது, கல்வித் துறையிலே அற்புதமான திட்டங்களையும், சுகாதாரத் துறையிலே அற்புதமான திட்டங்களையும்,

வேளாண்மைத் துறையிலே அற்புதமான திட்டங்களையும், தினந்தினம் மாண்புமிகு அம்மா அவர்கள் புது புது திட்டங்களையும் புரட்சிகரமான திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறார்கள். எனவேதான், இந்தத் திருத்திய வரவு-செலவுத் திட்டத்தை அற்புதமாக, இதற்கு முன்பு எப்போதும் இல்லாத அளவிற்குச் சிறப்பான முறையிலே, பல்வேறு திட்டங்களை உள்ளடக்கி, தமிழ்நாடு சட்டமன்றத்திலே தாக்கல் செய்திருக்கிறார்கள்.

அவற்றுள், நடப்பாண்டில் ரூபாய் 6,000 கோடிக்கு புதிய பயிர்க் கடன்கள்; விவசாயிகளுக்கான பயிர்க் கடன்களைத் தள்ளுபடி செய்யும் நோக்கில், நடப்பாண்டில் ரூ.1,680.73 கோடி நிதியொதுக்கீடு; விலையில்லா கறவைப் பசுக்களுக்கான அலகுத் தொகை ரூ.30,000/-லிருந்து ரூ.35,000/- ஆக உயர்த்துதல்; விலையில்லாத் திட்டத்தின்கீழ் 12,000 ஏழைப் பெண்களுக்கு கறவைப் பசுக்கள் வழங்குதல்; ஒரு இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு நான்கு இலட்சம் வெள்ளாடுகள்/செம்மறி ஆடுகள் வழங்குதல்; நகர்ப்புறங்களில் வாழும் ஏழைக் குடும்பங்களை மறுகுடியமர்த்த ஒரு சிறப்பு நிதியமாக ‘வீட்டு வசதி நிதியம்’ உருவாக்கம்; அடுத்த ஐந்தாண்டுகளில் ஏழைகளுக்கு 10 இலட்சம் வீடுகள்; நடப்பாண்டு இறுதிக்குள் ஸ்மார்ட் ரேஷன் அட்டை வழங்க ஏற்பாடு; விலையில்லா வேட்டி-சேலைத் திட்டத்திற்கு ரூபாய் 487.45 கோடியும், தள்ளுபடி மானியத்திற்கு ரூபாய் 78 கோடியும் நிதியொதுக்கம்; மாணவர்களுக்கு 5.35 இலட்சம் மடிக்கணினிகள் வழங்க ரூபாய் 890 கோடி நிதியொதுக்கம்; மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூபாய் 9,073 கோடி நிதியொதுக்கம்; நடப்பு நிதியாண்டில் 37 ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிதாகத் துவக்கம்; மாநில நெடுஞ்சாலைகளை நான்கு வழிச் சாலைகளாகத் தரமுயர்த்த ரூபாய் 1,541 கோடி நிதியொதுக்கம்; மதுரையில் பால் பொருள்கள் தயாரிக்க ரூபாய் 45 கோடியில் புதிய தொழிற்சாலை; பள்ளிக் கல்வித் துறைக்கு ரூபாய் 24,130 கோடி நிதியொதுக்கம்; மாற்றுத் திறனாளிகளுக்கு விலையில்லா 1,000 பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்குதல்; நடப்பு நிதியாண்டில் 3.5 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல்; தமிழகம் முழுவதும் 2,000 பேருந்துகள் வாங்க ரூபாய் 205 கோடி நிதியொதுக்கம்; மீன்பிடித் தடைக்கால நிவாரணமாக ரூ.5,000/- உயர்த்துதல்; தமிழ்நாடு தொழில் கூட்டமைப்பு நிதியத்திற்கு ரூபாய் 2,000 கோடி நிதியொதுக்கம்; தென் தமிழகத்தில் அதிக வேலைவாய்ப்புகள் ஏற்படுத்த, தொழில் துறைக்கு ரூபாய் 2,105 கோடி நிதியொதுக்கம்; பசுமை வீடுகள்

திட்டத்தின்கீழ் ரூபாய் 420 கோடியில் 20,000 வீடுகள் கட்டுதல்; ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் 1,000 கோயில்களைப் பழுது நீக்கி புதுப்பிக்க ரூபாய் 10 கோடி நிதியொதுக்கம்; உலமாக்கள் உதவித் தொகையை ரூ.1,500/- ஆக உயர்த்துதல்; அக்டோபரில் உள்ளாட்சித் தேர்தல் நடத்துதல்; கடந்த ஐந்தாண்டுகளில் 18,500 மெகா வாட் கூடுதல் மின் உற்பத்தித் திட்டம்; மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படவுள்ள ஏழாவது ஊதியக் குழு பரிந்துரையை மாநில அரசு ஊழியர்களுக்கும் வழங்குவது தொடர்பாக ஆய்வு செய்ய உயர் நிலைக் குழு அமைத்தல்; அரசு அலுவலர்களுக்கு மருத்துவச் சிகிச்சை வழங்க புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்; குறிப்பிட்ட சிகிச்சைகளுக்கு மட்டும் உச்சவரம்புத் தொகையாக ரூ.7.5 இலட்சம் உயர்த்துதல் என பல்வேறு திட்டங்களோடு புதிய வரிகளே இல்லாத அற்புதமான நிதிநிலை அறிக்கையை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக தாக்கல் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-55

இங்கே பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள் கிட்டத்தட்ட 45 நிமிடங்கள் பேசினார். அவர் பேசுவதற்கு ஒன்றுமில்லை என்பதை நம்மாலே உணர முடிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் நடைபெற்று 60 நாட்கள் ஆகின்றன. இதிலே எதிர்க்கட்சிக்குப் பேச என்ன இருக்கிறது? மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டை ஆளத் தகுதி படைத்தவர் என்று தீர்க்கமாகச் சிந்தித்து, இந்த நாட்டு மக்கள் ஆட்சி அதிகாரத்தை மாண்புமிகு அம்மா அவர்களின் கரங்களிலே ஒப்படைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியிருக்கிறபோது சம்பிரதாயத்திற்காக, ஏதோ பேச வேண்டும் என்பதற்காக, பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர் பேசியிருக்கிறாரே தவிர, அதிலே ஒன்றுமில்லை என்பதைத்தான் நம்மாலே உணரமுடிகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பிரதான எதிர்க்கட்சியினர், நிதிநிலை அறிக்கையை 'வெற்று அறிக்கை' என்று விமர்சித்துள்ளனர். ஆனால், இதற்கு (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன். I am not yielding sir. (குறுக்கீடுகள்). ஆனால், இதற்குப் பதில் அளிக்கிற விதத்திலே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் தி.மு.க. தலைவர், 'அம்மா பட்ஜெட்' என்றே அழைக்கலாம் என்று கூறியுள்ளார்.

நிதிநிலை அறிக்கையின் இறுதியில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. “அளவற்ற மதிநுட்பமும், அறிவுக் கூர்மையும் வாய்ந்த மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ள ஒவ்வொரு நுட்பமான விவரத்தையும் ஒருங்கிணைத்து தயாரிக்க வழிகாட்டினார்கள்” என்று குறிப்பிடுகிறபோது, இது மாண்புமிகு அம்மா அவர்களது அரசின் பட்ஜெட். எனவே, ‘அம்மா பட்ஜெட்’ என்று சொல்வதிலே (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வித தவறும் இல்லை. இதை இந்த நாட்டு மக்கள் வரவேற்கிறார்கள். ‘வெற்றறிக்கை’, ‘காகிதப் பூ’, ‘கானல் நீர்’ என்று விமர்சனங்கள். இதைப் பார்க்கிறபோது, ‘வெற்று வேட்டு’ போன்ற ‘ஓலைப் பட்டாசாக’ இருக்கிறது அந்த விமர்சனங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எதிர்க்கட்சியின் இந்த விமர்சனங்கள் ஆரோக்கியமானதாகவோ, ஆலோசனைகளை வழங்குவதாகவோ இல்லை. ஏதோ ‘பாட்டுக்குப் பாட்டு’ நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, எதிர்ப்பாட்டு பாடுவதாகவே உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் காரணத்திற்காகவே கண்டுபிடித்து சொல்லப்பட்டவை என்றே பொது மக்கள் எண்ணுகிறார்கள். மாண்புமிகு தி.மு.க. தலைவர் அவர்கள் சொன்ன ‘காகிதப் பூ’ என்ற விமர்சனம், கேட்டுக் கேட்டு, சலித்துப்போன பழைய பஞ்சாங்கமே தவிர, அதிலே எள் முனையளவும் உண்மையில்லை; பொருத்தமும் இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், இதே மாமன்றத்தில் முதலமைச்சராக அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்த காங்கிரஸைப் பார்த்துச் சொன்ன வார்த்தைகளை எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன வார்த்தை, ‘நாங்கள் இறுதியில் அந்தக் காரியங்களில் எதையுமே நிறைவேற்றவில்லையென்றால், நீங்கள் கொடுத்த வாக்குறுதி என்ன? உங்களாலே நிறைவேற்றப்பட்டிருக்கிற சாதனைகள் என்ன? என்று அந்த நேரத்தில் கணக்குப் பார்க்க வேண்டும். ஆனால், நீங்கள் கணக்குப் பார்த்தது மார்ச் 7-ம் தேதி, மார்ச் 6-ம் தேதி நாங்கள் பொறுப்பேற்றுக்கொண்டோம். இப்படியா கணக்குப் பார்ப்பது? இது கணக்குப் பார்க்கும் முறையும் அல்ல; கணக்குப் பார்க்கிற காலமும் அல்ல’. (குறுக்கீடுகள்) உண்மையான கணக்கு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்; அவர் பேசி முடித்தபிறகு நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.எம். நரசிம்மன்:** உண்மையான கணக்கு. Sir, I am not yielding. நான் பேசி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) "இது கணக்குப் பார்க்கும் முறையும் அல்ல; கணக்குப் பார்க்கிற காலமும் அல்ல; கணக்குப் பார்க்கிற தன்மையே இது ஆகாது" என்று சொன்னார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், Point of order இல்லை; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சிக்குச் சொன்ன பதில், இங்கேயுள்ள எதிர்க்கட்சிக்கும் பொருந்தும் எனக் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசுவதை முழுமையாகக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசுவதை முதலில் முழுமையாகக் கேளுங்கள்; உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.எம். நரசிம்மன்:** "தொடர்ந்து இரண்டாம் முறை ஆட்சிப் பொறுப்பை அளித்த தமிழக மக்களுக்கு என்றென்றும் நான் நன்றிக்கடன்பட்டவராக இருப்பேன்" என்றும், "இந்த நன்றியை செயல்மூலம் காட்டுவேன்" என்றும், "தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவேன்" என்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் தெரிவித்து... (குறுக்கீடுகள்)

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் ஒன்றும் தவறாகப் பேசவில்லை; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் தவறாகப் பேசவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, உங்கள் கட்சி உறுப்பினரை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** Sir, I am not yielding. மாண்புமிகு அம்மா அவர்கள், “இந்த நன்றியை செயல்மூலம் காட்டுவேன்” என்றும், “தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவேன்” என்றும் தெரிவித்து, ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 5 முக்கிய அரசு ஆணைகளை வெளியிட்டு, அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றியுள்ளார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள், அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்; பேசி முடிக்கட்டும்; பார்க்கலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர், ஆட்சியினுடைய சாதனைகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.எம். நரசிம்மன்:** சிறு, குறு விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்த வேண்டிய விவசாயக் கடன் தள்ளுபடி; (குறுக்கீடுகள்) அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் வரை இலவச மின்சாரம்; திருமண உதவித் திட்டத்தின்கீழ் திருமாங்கல்யத்திற்கு வழங்கப்பட்ட தங்கம் 4 கிராமிலிருந்து 8 கிராமாக உயர்வு, (மேசையைத் தட்டும் ஒலி) கைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் இலவச மின்சாரம்; (மேசையைத் தட்டும் ஒலி) டாஸ்மாக் மதுபானக் கடைகள் நேரம் குறைப்பு மற்றும் 500 கடைகள் மூடல், இப்படிப்பட்ட ஆணைகளை எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நாட்டு மக்களுக்காக நிறைவேற்றியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் ஆட்சியினுடைய சாதனைகள் குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறார். தயவு செய்து உட்காருங்கள் (குறுக்கீடுகள்) Please, உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** தேர்தல் அறிக்கையில் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் குறித்தும், சென்னை வண்ணாரப்பேட்டையில் இருந்து, திருவொற்றியூர் விம்கோ நகர் வரையில் நீட்டிப்புக்கான பணிகள் குறித்தும் தெரிவிக்கப்பட்டது. இதனை நிறைவேற்றுகிறவிதத்தில், விரிவாக்கத் திட்டப் பணிகளுக்கு சனிக்கிழமையன்று மாண்புமிகு அம்மா அவர்கள் அடிக்கல் நாட்டி கட்டுமானப் பணிகளைத் தொடங்கி வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் கலந்துகொண்ட மாண்புமிகு மத்திய நகர்ப்புற

வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு பொருளாதார நிலையில் குறிப்பிடத்தக்க மாநிலமாக உள்ளது என்று வெகுவாகப் பாராட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லரசு கொண்டு வந்திருக்கிற நிதிநிலை அறிக்கையில் புதுமை மற்றும் புரட்சி இருக்கிறது. காரணம், 2016-ல் நடைபெற்ற தேர்தலின்போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படுகின்றன. மேலும், 2011-ல் நடைபெற்ற தேர்தலின்போது அளிக்கப்பட்ட வாக்குறுதிகளும் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன; இவற்றிற்கு நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், ஒவ்வொரு நபருக்கும், ஒவ்வொரு குடும்பத்திற்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் நன்மைகள் கிடைக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உருவாக்கிய புதுமையும், புரட்சியும் கலந்த உயர்வான பட்ஜெட் இது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆக, மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்ற அன்றே தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அதிக அளவு ஈடுபாடு வைத்திருக்கிறார் என்பதை எதிர்க்கட்சியினர் உற்று கவனித்திருப்பார்களேயானால், "இதுவல்ல அரசை விமர்சிக்கிற காலம்; இன்னும் அதற்குக் காலம் வரவில்லை" என்று கருதியிருப்பார்கள்; அதற்காகக் காத்துக் கொண்டிருந்திருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எதிர்க்கட்சியினருக்கு அந்த அளவுக்குப் பொறுத்துக்கொள்கிற தன்மை இல்லை. எதிர்க்கட்சியினருக்கு அவசரம் இருக்கிறது. அந்த அவசரத்திற்கு என்ன காரணம் என்று நமக்குப் புரிகிறது; தோற்றுவிட்டோம் என எரிச்சல். "ஆத்திரமும், அருவருப்பும் இருந்தாலும், பேச்சில் பொருத்தம் இருக்க வேண்டும்." இது அண்ணா சொன்னது. (மேசையைத் தட்டும் ஒலி) 'ஆத்திரமும், அருவருப்பும் இருந்தாலும் பேச்சில் பொருத்தம் இருக்க வேண்டும்' என அண்ணா அவர்கள் சொன்னதை எதிர்க்கட்சியினர் பின்பற்றுவார்களா எனக் கேட்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

2006-ல் தி.மு.க.-வின் தேர்தல் அறிக்கையில் நிலமற்ற ஏழைகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் தருவேன் என்று சொன்னீர்கள். ஐந்தாண்டு தி.மு.க. ஆட்சியில் அதை நிறைவேற்றினீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் பேரறிஞர் அண்ணா அவர்கள் எதிர்க்கட்சியினருக்கு பதிலாகச் சொன்னதையே இங்கே உங்களுக்கு

ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 'நீங்கள் வரம் கொடுப்பதில் வல்லவர்கள்; கொடுத்த வரத்தை கைவிடுவதில் அதைவிட வல்லவர்கள்.' (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, உங்கள் வரத்தை நம்பி பொது மக்கள் ஏற்கெனவே ஏமாந்து இருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் எதைச் சொன்னாலும், மறுபடியும் ஏமாற வேண்டாம் என்று எண்ணியிருப்பார்கள். அதனால்தான் உங்களை மக்கள் புறக்கணித்தார்கள். மற்றும் சிலரையும் அறவே புறக்கணித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வரலாற்றில் இமாலய வெற்றியைத் தேடித் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டின் அமைதி மிகவும் முக்கியமானதாகும். சட்டம்-ஒழுங்கைப் பற்றி எதிர்க்கட்சியினர் தவறான கருத்தைப் பரப்பி வருகிறார்கள். 2010 ஆம் ஆண்டு minority தி.மு.க. ஆட்சியின் (குறுக்கீடுகள்) இறுதி ஆண்டில் கொலைகளின் எண்ணிக்கை...

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் ஒன்றுமில்லை. உட்காருங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** கொலைகளின் எண்ணிக்கை 1,715. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைப்பற்றியெல்லாம் பேசியாகிவிட்டது. உட்காருங்கள் நீங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** 2015 ஆம் ஆண்டில் கொலைகளின் எண்ணிக்கை 1,642 எனக் குறைந்துள்ளது. (குறுக்கீடுகள்) ஆதாயக் கொலை வழக்குகள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேசி முடிக்கட்டும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.எம். நரசிம்மன்:** ஆதாயக் கொலை வழக்குகள் 30.07 சதவீதமும், கொள்ளை வழக்குகள் 2.75 சதவீதமும், களவு வழக்குகள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள் இப்படிப் பேசுவது எனக்குப் பேராச்சரியமாக இருக்கிறது. இருந்தாலும் நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களது அரசை minority அரசாங்கம் என்று சொன்னார். நான் அதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால், நாங்கள் அப்படி இருந்தபொழுதும் majority போல் ஆட்சியை நடத்தினோம். அது வேறு பிரச்சினை. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், இப்படி ஆட்சியைப்பற்றி விமர்சனம் செய்வது சரியல்ல; நன்றாக இல்லை. (குறுக்கீடு) ஏற்கெனவே இதுகுறித்துப் பேசி, நீங்களே பலமுறை ஒப்புக்கொண்டதுதான். (குறுக்கீடுகள்) நீங்களே ஒப்புக்கொண்டதுதான். (குறுக்கீடுகள்) அதனால் இப்படியெல்லாம் ஆட்சியைப்பற்றி நீங்கள் விமர்சனம் செய்யக்கூடாது; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன் அவர்கள் பேசிய அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி, வெற்றிதான். தோல்வி, தோல்விதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே நீங்களே ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.எம். நரசிம்மன்:** நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாபெரும் வெற்றி கிடைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி).

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்து நின்று கொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் இவ்வாறு செய்வது சரியல்ல. (குறுக்கீடுகள்) ஒரு majority அரசாங்கத்தைப்பற்றி இப்படியெல்லாம் பேசுவது சரியல்ல; உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.எம். நரசிம்மன்:** கொள்ளை வழக்குகள் 2.75 சதவீதமும், களவு வழக்குகள் 23.22 சதவீதமும், கொலை வழக்குகள் உள்ளிட்ட

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

சொத்து சம்பந்தமான வழக்குகள் 13.57 சதவீதமும் குறைந்துள்ளன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தி.மு.க. உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.எம். நரசிம்மன்:** எனவே குற்றங்களின் எண்ணிக்கை. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) நீங்களே சொன்ன வார்த்தைதான். ஏற்கெனவே நீங்கள் ஒப்புக்கொண்டதைத்தான் உறுப்பினர் சொல்லியிருக்கிறார். அதையே ஏன் திரும்பத் திரும்ப பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) அதைப்பற்றிப் பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒரு majority அரசாங்கத்தை நீங்கள் அப்படி விமர்சனம் செய்யக்கூடாது. (குறுக்கீடுகள்) அப்படியெல்லாம் விமர்சனம் செய்யக்கூடாது. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இன்று காலையிலிருந்து நீங்கள் இந்த அவையை நடத்தவிடாமல் இப்படி செய்துகொண்டிருந்தால் எப்படி? ஒவ்வொரு வார்த்தைக்கும் நீங்கள் எழுந்து குறுக்கிட்டு இப்படிப் பேசிக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முழு majority-யோடு இருக்கும் ஒரு அரசாங்கத்தைப்பற்றி நீங்கள் இப்படி விமர்சனம் செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) அதையெல்லாம் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் அவைக்கு வெளியில் பேசுங்கள். அவைக்குள் ஒரு majority அரசாங்கத்தைக் குறை சொல்லி இப்படியெல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) வேறு பொருள்பற்றிப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்கள் இதைப்பற்றிப் பேசுவதாக இருந்தால் நான் அனுமதிக்கமாட்டேன். வேறு ஏதாவது பேசுவதாக இருந்தால், நான் அனுமதிக்கிறேன். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சியின் துணைத் தலைவரைக்கூட பேச விடமாட்டீர்களா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மெத்த வருத்தத்தோடு சபாநாயகரிடம் இந்தக் குறையைச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஒரு கருத்துக்கு எதிர் கருத்தைத்தான் நான் சொன்னேன். (குறுக்கீடு) கொஞ்ச நேரம் நீங்கள் பொறுமையாக இருங்கள். தாங்கள், அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்தது நியாயமா என்பதை நீங்கள் சொல்ல வேண்டும். (குறுக்கீடுகள்) நான் அவரோடு பேசிக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) தாங்கள் ஆளுங்கட்சியிலிருந்து எம்.எல்.ஏ., ஆகி, இன்றைக்கு இங்கு சபாநாயகராக அமர்ந்திருந்தாலும், நீங்கள் கட்சிக்கு அப்பாற்பட்டவர். (குறுக்கீடுகள்) **

*பிற்பகல் 12-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சபாநாயகர் குறித்து விமர்சித்ததை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) சபாநாயகரை நீங்கள் அப்படியெல்லாம் விமர்சித்துப் பேச முடியாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவைத் தலைவரைப்பற்றி விமர்சனம் செய்து பேசுவதற்கு யாருக்கும் சபையில் உரிமை இல்லை. அதை முதலில் உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மெஜாரிட்டி அரசாங்கத்தை நீங்கள் அப்படிப் பேசலாமா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், சபாநாயகரைப் பற்றி, அவையில் பேசுவதற்கு யாருக்கும் உரிமையில்லை என்று சொன்னார். சபாநாயகர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானமே கொண்டுவந்து பேசுவதற்கு உரிமை உண்டு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது வேறு. என்னைப்பற்றி சபையிலே விமர்சிப்பது என்பது வேறு. என்னை விமர்சித்ததைத்தான் நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பரவாயில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும்போது பார்த்துக்கொள்ளலாம், உட்காருங்கள். அதுபற்றி இப்போது ஏன் பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேசுவதற்கு நிறைய வாய்ப்புகள் உங்களுக்குத் தருகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களைக் குறை சொல்ல வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு இல்லை. காரணம், நீண்ட நாட்கள் இங்கேயிருக்கிறீர்கள். இன்னும் சொல்லப்போனால் எவ்வளவு கஷ்டப்பட்டு அந்த இடத்தில் உட்கார்ந்திருக்கிறீர்கள்; எப்படி கஷ்டப்படுகிறீர்கள் என்பதும் எனக்குத் தெரிகின்றது. நித்தம் உங்களுக்கு pressure ஏறும்; தெரிகிறது. இருந்தாலும் உங்களுடைய பணியை நான் பாராட்டுகிறேன். ஆனால், சில நேரங்களில்தான் இப்படிப்பட்ட நிலைமை வந்துவிடுகிறது. I have the highest respect for the Chair.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் கடந்த ஆண்டுகளிலும் சரி, இந்த முறையும் சரி; ஏற்கெனவே வகுத்துக் கொடுத்திருக்கின்ற விதிமுறைகளின்படிதான் இந்தச் சபையை நடத்திக் கொண்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் எந்த பாரபட்சமும் காட்டுவது இல்லை. இது மனசாட்சியுள்ள உங்களுக்கே புரியும். நான் எதிர்க்கட்சிகளுக்கு எவ்வளவு வாய்ப்புகள் கொடுத்துக் கொண்டிருக்கிறேன் என்பது உங்களுக்கே தெரியும். இவ்வளவு வாய்ப்புகள் கொடுத்ததற்குப் பின்பும், நீங்கள்தான் விமர்சனம் செய்கிறீர்கள். எனவே, நீங்கள்தான் ஒருதலைபட்சமாக விமர்சிக்கிறீர்களேயொழிய, என்னுடைய நடவடிக்கை, இந்த சபையில் இருக்கின்ற அனைவரையும் பாதுகாக்க வேண்டுமென்கின்ற நோக்கத்தோடுதான் இருக்கின்றது. நான் விதிகளின்படிதான் அவையை நடத்திக்கொண்டிருக்கிறேன் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் கட்சியினுடைய நோக்கத்தைச் சொல்கிறீர்கள். நான் எல்லாக் கட்சிகளையும் பார்க்க வேண்டும். (குறுக்கீடுகள்) சபாநாயகராக இருப்பதால்தான், நீங்கள் என்னை விமர்சனம் செய்வதையும் நான் தாங்கிக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நான் விமர்சனத்தை தாங்கிக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நான் சபாநாயகராக இருப்பதால்தான், இதுபோன்ற விமர்சனங்களைத் தாங்கிக்கொள்கிறேன். இல்லையென்றால் வாதத்திற்கு வாதம் வரும்.

அதனால் விமர்சனங்களை இதோடு நிறுத்திக்கொள்ளுங்கள். சபாநாயகரை இனி நீங்கள் தேவையில்லாமல் விமர்சிக்காதீர்கள். அதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். அது அவைக் குறிப்பிற்கு வராது. திரு. நரசிம்மன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, குற்றங்களின் எண்ணிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில் குறைந்துள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எப்பொழுதெல்லாம் வெற்றி பெற்று, தமிழ்நாட்டின் முதலமைச்சராக வருகின்றார்களோ, அப்பொழுதெல்லாம் சட்டத்தின் ஆட்சிதான் தமிழ்நாட்டிலே நடைபெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் நிம்மதியாக வாழ்கிறார்கள். எனவேதான், காவல் துறையை மேலும் மேம்படுத்த வேண்டும் என்பதற்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் காவல் துறைக்கு மொத்தமாக ரூ.6,102.95 கோடி ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய ஆட்சிக் காலத்திலே முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு கருணாநிதி ஆளுகின்றபோது, (குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர் மரியாதையாகத்தானே பேசினார்? (குறுக்கீடுகள்) அவர் மரியாதையாகத்தானே பேசினார்? (குறுக்கீடுகள்) 'மாண்புமிகு' என்று சொல்லிவிட்டுத்தானே சொல்கிறார்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (கூச்சல்-குழப்பம்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்புக்கு வராது. (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்புக்கு வராது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்; நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையின் மையப் பகுதிக்கு வந்தனர்.)*

*நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப் போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குப் போய்*

உட்காருங்கள். நான் நிற்கிறேன் அல்லவா? (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் நிற்கும்போது, உறுப்பினர்கள் உட்கார வேண்டுமென்ற மரபைப் பின்பற்றி உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் நடந்துகொண்டால் நான் நடவடிக்கை எடுக்க மாட்டேன் என்று நினைக்காதீர்கள். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள்; இது முறையல்ல. (குறுக்கீடுகள்) இன்று காலையிலிருந்து நானும் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் இந்த அவையை நடத்துவதற்கு ஒத்துழைப்புக் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் வேண்டுமென்றே இந்த அவையை நடத்த விடாமல், அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள்; நான் நிற்கிறேன் அல்லவா? (குறுக்கீடுகள்) முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்; (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்; நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் இப்படியெல்லாம் என்னை வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) என்னை வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள் என்று நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. நரசிம்மன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) குறுக்கிட்டு நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்புக்கு வராது. (குறுக்கீடுகள்)

**திரு. பி.எம். நரசிம்மன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது முறையல்ல; உட்காருங்கள் என்று சொன்னபிறகும் உட்காரமாட்டேன் என்கிறார்களே. (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்களும் எதுவும் கேட்கமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.எம். நரசிம்மன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் நில அபகரிப்பு செய்யப்பட்டு, சுமார் 3,200 நில அபகரிப்பு வழக்குகள்

*பதிவு செய்யப்பட்டு, 3,500 கோடி ரூபாய் மதிப்பிலான (மேசையைத் தட்டும் ஒலி) 5,000 ஏக்கர் நிலம் மற்றும் 38 இலட்சம் சதுர அடிகள் கொண்ட வீடுகளும் உரிமையாளர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் திருப்பி வழங்கப்பட்டன. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் கட்சி உறுப்பினர்களிடமிருந்து கொஞ்சம்கூட ஒத்துழைப்பே இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? (குறுக்கீடுகள்)

**திரு. பி.எம். நரசிம்மன்**: *மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில், நில அபகரிப்பாளர்களிடமிருந்து நிலங்களை மீட்டு நில உரிமையாளர்களிடம் தந்ததை எண்ணி பொது மக்கள் பாராட்டுகிறார்கள்; நிம்மதியடைகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) எனவே, யார் ஆட்சியில் சட்டம்-ஒழுங்கு சீர்கெட்டதென்பதை ஒருகணம் எதிர்க்கட்சிகள் எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன். (குறுக்கீடுகள்) வரலாற்று ஆசிரியர்கள், மன்னர் ஆட்சியில் ஹர்ஷர்கள் ஆண்ட காலத்தைப் பொற்காலம் என்று . . .*

*பிற்பகல் 12-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுசம்பந்தமாக நிறைய முறை பேசி, நான் ஏற்கெனவே அதற்காக ஒரு ruling கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்) ஏன் திரும்பத் திரும்ப அதையே பேசுகிறீர்கள்? (குறுக்கீடுகள்) உறுப்பினர் திரு. நரசிம்மன் இன்று மரியாதையோடுதான் பேசினார். மரியாதை இல்லாத வார்த்தையைப் பேசவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் அப்படியெல்லாம் பேச முடியாது. (குறுக்கீடுகள்) ஒரு முதலமைச்சரைப் பேசுவது வேறு; ஓர் உறுப்பினரைப் பேசுவது வேறு. (குறுக்கீடுகள்) அவர் உறுப்பினரின் பெயரை 'மாண்புமிகு' என்று குறிப்பிட்டுத்தான் பேசியிருக்கிறார். (குறுக்கீடுகள்) அதில் மாற்றுக் கருத்து இல்லை. அதனால், அதையெல்லாம் ஒன்றும் செய்ய முடியாது; நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) 'மாண்புமிகு' என்று சொல்லித்தான் அவர் பேசியிருக்கிறார். எனவே, அதை நீக்கவேண்டிய அவசியம் இல்லை. அதேசமயத்தில், மாண்புமிகு முதலமைச்சரை எப்படி அழைக்க வேண்டுமென்று ஏற்கெனவே நான் ஒரு ruling கொடுத்திருக்கிறேன். ஆகவே, அதைப்பற்றி நீங்கள்

பேச முடியாது. நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்களோ, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பெயரைச் சொல்லக்கூடாது.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் உறுப்பினராக ஆனபிறகுதான் அமைச்சர்களாக ஆகிறார்கள். எனவே, இந்த மன்றத்திலிருக்கிற உறுப்பினர்களை 'மாண்புமிகு உறுப்பினர்' என்று சொல்லி, பெயரைச் சொல்வதிலே தவறு இல்லை. அதில் எனக்கு ஆட்சேபணையும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களுடைய தலைவருடைய பெயரை, 'மாண்புமிகு' என்று குறிப்பிட்டுத்தான் சொன்னார். இல்லையென்று நான் சொல்லவில்லை. 'மாண்புமிகு கருணாநிதி' என்று அவர் சொன்னார். அவருடைய பெயரை மரியாதையாகத்தான் சொன்னார்; நான் இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், அதே உரிமை மாண்புமிகு முதலமைச்சர் ** என்று சொல்வதற்கு எங்களுக்கு உண்டா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுங்கட்சி உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் துரைமுருகன் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ஒரு ** அழைக்கக்கூடாது என்று ஏற்கெனவே நான் சொல்லியிருக்கிறேன். அதுதான் மரபு. அந்த மரபைப் பின்பற்றுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் ** குறிப்பிடுவதற்கு நான் அனுமதிக்க முடியாது. உறுப்பினர்களை 'மாண்புமிகு' என்று குறிப்பிட்டு, பெயரைச் சொல்லித்தான் அழைப்பார்கள். மாண்புமிகு முதலமைச்சரை அப்படி அழைக்க முடியாது. 'முதலமைச்சர்' என்றுதான் சொல்லவேண்டும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் எவ்வளவுதான் இதுபோன்று குறுக்கிட்டு சபையை நடத்தவிடாமல் செய்தாலும்கூட, இதுதான் என்னுடைய தீர்ப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சரை, 'முதலமைச்சர்' என்றுதான் அழைக்கவேண்டும். ** சொல்வது சரியில்லை; அது மரபும் அல்ல. அதை நான் அனுமதிக்கமாட்டேன். மாண்புமிகு உறுப்பினர்களை நான் அழைக்கிறபோதுகூட, "மாண்புமிகு உறுப்பினர் சக்கரபாணி" என்றுதான் அழைக்கமுடியும். அந்த உறுப்பினர் ஏதாவது பொறுப்பில் இருந்தால், நான் அந்தப் பொறுப்பைக் குறிப்பிட்டு. அதாவது, 'எதிர்க்கட்சித் தலைவர்', 'எதிர்க்கட்சித் துணைத் தலைவர்' என்று சொல்லி அழைக்கலாம். எந்தப் பொறுப்பிலும் இல்லாத ஓர் உறுப்பினரை, 'மாண்புமிகு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உறுப்பினர்' என்று குறிப்பிட்டு, பெயரைச் சொல்லித்தான் அழைப்பார்கள். (குறுக்கீடுகள்) அதனால் இதில் எந்த மாற்றமும் இல்லை. (குறுக்கீடுகள்) இதுதான் பேரவைத் தலைவருடைய தீர்ப்பு. என்னுடைய தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** விளிக்கக்கூடாது என்று எந்த விதிமுறையில் இருக்கிறது? இருந்தால் சொல்லுங்கள். உங்களுடைய ஆணைக்கு நாங்கள் கட்டுப்படுகிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். உட்காருங்கள். நீங்கள் ஏற்கெனவே ஆட்சியிலே இருந்தபோது, உங்களுடைய முதலமைச்சரை எப்படி அழைத்தீர்களோ, அதேபோலத்தான் ** முதலமைச்சரை அழைக்கக்கூடாது; அழைப்பது மரபும் அல்ல; அது மரியாதையும் அல்ல. அதனால் அதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். நான் அவையை நடத்துகிறபோது, ** மரபு காரணமாக "முதலமைச்சர்" என்றுதான் அழைக்கவேண்டும். வேறு ** அழைப்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. இதுதான் என்னுடைய ruling. அதற்குமேல் இதில் விவாதம் இல்லை. இந்தப் பிரச்சினையை இதோடு விடுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்று ஆசிரியர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆட்சியிலிருந்தபோது உங்களுடைய சபாநாயகர்கள் என்ன ruling கொடுத்தார்களோ, அந்த ruling-ஐத்தான் நானும் கொடுத்திருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) நிறைய வாய்ப்பு கொடுத்துவிட்டேன். இது சப்ஜெக்ட் இல்லை. இதற்குமேலே இதில் பேசமுடியாது. (குறுக்கீடுகள்) நான் தீர்ப்பு வழங்கிவிட்டேன். இதற்குமேல், இந்த ruling மீது நீங்கள் பேசமுடியாது. (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு ruling கொடுக்க உரிமை உண்டு. அதற்குக் கட்டுப்படுவதற்கு எங்களுக்கும் கடமை உண்டு. நாங்கள் உங்களுக்குக் கட்டுப்படுகின்றோம். ஆனால், விதிமுறைகளை மீறி சபாநாயகரும் இந்த மன்றத்தை நடத்திவிட முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதிகளின்படிதான் நான் சபையை நடத்துகிறேன். (குறுக்கீடுகள்) விதிகளின்படிதான் நான் சபையை நடத்துகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** நாங்களும் விதிமுறைகளை மீறி எங்கள் உரிமையை நிலைநாட்ட முடியாது. ஏற்கெனவே ஒருநாள், மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் எங்களுடைய தலைவருடைய பெயரைச் சொன்னதால், அன்று தகராறு வந்து நின்றுவிட்டது. அப்போது, நீங்கள், 'முன்னாள் முதல்வர்' என்று சொன்னால் போதும் என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை; இல்லை. (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** 'கலைஞர்' என்று சொல்லிவிட்டுப் போங்கள்; (குறுக்கீடுகள்) நாங்கள் திருப்பிச் சொன்னால், "நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது" என்று சொல்கிறீர்கள். Even பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களையே பாராளுமன்றத்தில் Mr. Nehru என்றுதான் சொல்வார்கள். இதே அவையில் திரு. ஹண்டே அவர்கள் பேசுகின்றபோது, "முதலமைச்சர் கருணாநிதி" என்றுதான் பேசியிருக்கிறார். நான் இந்தச் சபையில் இருந்திருக்கிறேன். ஆகையினால், அவர்களைக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல; முதலமைச்சர் அவர்களை, பெயரைச் சொல்லி சொல்லவேண்டுமென்ற ஆசையும் எங்களுக்கு இல்லை. அவர்களுடைய மரியாதையைக் குறைக்க வேண்டுமென்ற

எண்ணமும் எங்களுக்கு இல்லை. ஆனால், உங்களுடைய தலைவருடைய பெயரைச் சொல்கின்றபோது, உங்களுக்கு எப்படி வலிக்கின்றதோ, அப்படித்தான் எங்களுடைய தலைவருடைய பெயரைச் சொல்கின்றபோது எங்களுக்கு வலிக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையினால், எங்களுடைய உணர்வுக்கு நீங்கள் பாதுகாப்புத் தர வேண்டுமென்றுதான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு முதலமைச்சரை மதிப்பதற்கும், ஒரு சட்டமன்ற உறுப்பினரை மதிப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) அதனால் நீங்கள் அதெல்லாம் பேச முடியாது; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. நரசிம்மன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்று ஆசிரியர்கள், மன்னராட்சி. . . (குறுக்கீடுகள்)

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து, பேரவைத் தலைவரின் இருக்கை அருகே உள்ள வாயில் வழியாக ஏதோ பேசிக் கொண்டு அவையிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் அவைக் குறிப்பில் வராது. (குறுக்கீடுகள்) அதெல்லாம் அவைக் குறிப்புக்கு வராது;

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சிலர் வெளியேறும்போது பேரவைத் தலைவர் இருக்கையை முற்றுகையிட்டனர்.)*

நீங்கள் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் அவைக் குறிப்பில் வராது. இப்படியெல்லாம் நீங்கள் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) நான் வேறு மாதிரி நடவடிக்கை எடுப்பேன். நீங்கள் அவைத் தலைவரை இப்படி முற்றுகையிடுவது தவறு. (குறுக்கீடுகள்) அவைத் தலைவரை முற்றுகையிடுவது தவறு. நீங்கள் போய்விட்டு வாருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வெளிநடப்பு செய்துவிட்டீர்கள் அல்லவா? செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் அவைக் குறிப்புக்கு வராது; நீங்கள் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் அவைக் குறிப்பில் வராது; நீங்கள் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவைக் குறிப்புக்கு வராது; நீங்கள் செல்லுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு உறுப்பினர் திரு. நரசிம்மன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. நரசிம்மன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள்; உங்கள் தலைவர் வெளிநடப்பு செய்துவிட்டு போய்விட்டார். நீங்கள் வெளிநடப்பு செய்வதென்றால் தாராளமாகச் செய்யுங்கள். நீங்கள் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. எ.வ. வேலு, நீங்கள் போங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வெளிநடப்பு செய்திருக்கிறீர்கள் அல்லவா? (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வெளிநடப்பு செய்துவிட்டீர்கள் அல்லவா? வெளிநடப்பு செய்வதென்றால் செல்லுங்கள்; நீங்கள் போங்கள். என்னை சபையை நடத்த விடுங்கள். (குறுக்கீடுகள்) நான் சபையை நடத்த வேண்டும். நீங்கள் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. நரசிம்மன்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேறினர்.)*

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்று ஆசிரியர்கள், மன்னராட்சி. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கரி. இராமசாமி, நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. நரசிம்மன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கரி. இராமசாமி, என்னவென்று சொல்லுங்கள்?

பிற்பகல் 12-30

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய நபர்களை எவ்வாறு அழைப்பது என்பதற்கு மரபுகள் பல இருந்தாலும், சரியான விதியைப் பின்பற்ற வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், இப்பொழுது இருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர், இன்னும் முன்னாள் முதலமைச்சராக இருந்த நம்முடைய நிதி அமைச்சர் அவர்களிடமெல்லாம் எவ்வாறு மரியாதையாக நடந்துகொள்ள வேண்டுமென்று இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். (குறுக்கீடுகள்) நான் தவறாகப் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி (குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். நீங்கள்

உட்காருங்கள். (குறுக்கீடு) சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர், கொஞ்சம் பொறுமையாக இருங்கள். நான் ஏற்கெனவே ஒரு ruling கொடுத்துவிட்டேன். அது சம்பந்தமாக தயவு செய்து நீங்கள் எதுவும் பேச வேண்டாம். ஏனென்றால், காலையிலிருந்து இந்த அவையில் நடந்த நிகழ்வுகள் முழுவதையும் நீங்களும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறீர்கள். இங்கு வந்து வேண்டுமென்றே திட்டமிட்டு, அவையை நடத்த விடாமல் எவ்வளவு குழப்பம் செய்தார்கள் என்பதையும் நீங்கள் பார்த்துக்கொண்டுதான் இருந்தீர்கள். இதற்குப் பின்னாலும், அவர்கள் வேண்டுமென்றே இதுபோன்று செய்வதை தயவு செய்து நீங்கள் ஆதரிக்க வேண்டாம். இந்தச் சபையை நடத்துவதற்கு நீங்கள் ஒத்துழைப்பு தரும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) ஒரு ruling கொடுத்ததற்குப் பிறகு, நீங்கள் மேற்கொண்டு பேசவேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடு) நான் ruling கொடுத்ததில், நீங்கள் பேசவேண்டாம். (குறுக்கீடு) நான் ruling கொடுத்ததில் நீங்கள் பேசவேண்டாம்.

**திரு. கரி. இராமசாமி:** தங்கள் உத்தரவுக்கு மறுப்பு சொல்லவில்லை. தெளிவாகத் தெரிந்துகொள்ளுங்கள். ஆனால், தொடர்ந்து இந்தச் சபை அமைதியாக நடக்க வேண்டுமென்று நாங்கள் எல்லோரும் விரும்புகிறோம். (குறுக்கீடுகள்) அதற்கு சரியான ஒரு முடிவை சபாநாயகர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். முன்னாள் முதலமைச்சர்களை எவ்வாறு அழைப்பது, (குறுக்கீடுகள்) தற்பொழுது நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை எவ்வாறு அழைப்பது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி, என்னுடைய ruling-ல் நான் தெளிவாகச் சொல்லிவிட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, 'முதலமைச்சர்' என்று அழைப்பதுதான் மரபு. ஓர் உறுப்பினரை, இந்தச் சபையிலே இருக்கிற ஓர் உறுப்பினரை, "மாண்புமிகு உறுப்பினர்" என்று சொல்லி, அவர் பெயரைச் சொல்வதுதான் வழக்கமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே மாற்றுக் கருத்து எதுவுமில்லை. இதுதான் என்னுடைய ruling. பல முதலமைச்சர்கள் வருவார்கள்; போவார்கள். முன்னாள் முதலமைச்சர்கள் இருப்பார்கள். இப்பொழுது இருக்கிற உறுப்பினரை, அவருடைய பெயரைச் சொல்லி அழைப்பதுதான் மரபு; வேறு வழியில்லை, உட்காருங்கள். தயவு செய்து உட்காருங்கள். என்னுடைய ruling மேல் பேசவேண்டாம்.

திரு. நரசிம்மன், நீங்கள் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) திரு. இராமசாமி, உட்காருங்கள். இதற்குமேல் பேசவேண்டாம். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. கரி. இராமசாமி:** இதற்கு முன்பு இரண்டு முறை அவர்கள் முதலமைச்சராக இருக்கும்பொழுது நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். ஆனால், அவர்களுக்கு உரிய மரியாதையைக் கொடுத்தோம். மரியாதை தவறி அவர்களிடம் நடந்ததே கிடையாது. இந்தச் சபை ஒழுங்காக நடக்க வேண்டும். இதுபோன்ற நிகழ்வுகளுக்காக நாங்கள் வருத்தப்படுகிறோம். அதற்கு உரிய நடவடிக்கைகளை சபாநாயகர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சபையை நடத்துவதற்கு நான் படுகிற அவஸ்தையை காலையிலிருந்து நீங்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறீர்கள். அவைக்கு வந்து, ஒத்துழைப்புக் கொடுக்காமல், திட்டமிட்டு குழப்பம் விளைவிக்கிறபோது, நான் என்ன செய்ய முடியும்? அவை விதிகளின்படிதான் நான் சபையை நடத்துகிறேன். இருக்கின்ற எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் எல்லோருக்கும் சமமாகத்தான் அவை விதிகளின்படி, நான் அவையை நடத்த முடியும். அப்படி இருக்கும்பொழுது, அவர்கள் ஒரு சார்பாக, தங்களுக்கு ஏற்றபடி மட்டுமே நான் நடந்துகொள்ள வேண்டும் என்று சொன்னால், அது என்னால் முடியாது. அதுதான் என்னுடைய ruling. தயவு செய்து மேற்கொண்டு இதுபற்றி எதுவும் பேசவேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. நரசிம்மன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

**திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பதிவு செய்துகொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, அதற்கு மேலே பேசவேண்டாம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, அதற்கு மேலே பேசவேண்டாம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான், உட்காருங்கள். திரு. நரசிம்மன், நீங்கள் பேசுங்கள்.

(இந்திய தேசிய காங்கிரஸ் மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

பிற்பகல் 12-35

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னர் ஆட்சியில் ஹர்ஷர்கள் ஆண்ட காலத்தை, 'பொற்காலம்' என்று வரலாற்று ஆசிரியர்கள் வர்ணிக்கிறார்கள். காரணம், ஹர்ஷர்கள் ஆண்ட காலத்தில் நாட்டில் அமைதியும், வளர்ச்சியும் தழைத்தோடின. அதேபோன்று, மக்களாட்சியில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், "அமைதி, வளம், வளர்ச்சி" என்ற அரசின் மும்முனைக் கொள்கையில், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் அமைதிச் சூழல் நிலவச் செய்வதுதான் முதன்மைக் கொள்கையாக உள்ளது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தைப் பொற்காலம் எனப் பொது மக்கள் பாராட்டுகிறார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) நிம்மதி அடைகிறார்கள்.

சென்னை மாநகரத்திற்குக் குடிநீர் வழங்குவதற்கான நீர்த்தேக்கத்தின் மொத்த கொள்ளளவு 1,474 மில்லியன் கன அடியிலிருந்து 2,542 மில்லியன் கன அடியாக உயர்த்தப்படும் என்கின்ற அரசின் நடவடிக்கை பாராட்டுக்குரிய ஒன்றாக இருக்கிறது. சென்னைக்குக் குடிநீர் என்று சொல்கிறபோது, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வீராணம் திட்டம் எப்படி படுதோல்வி அடைந்தது என்பதை யாரும் மறக்க முடியாது. அது ஒரு கரும்புள்ளி. ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மதிநுட்பத்தோடு, 235 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவர விவசாயிகள், அரசியல் கட்சியினர் மற்றும் நீர் ஆதார நிபுணர்கள் எதிர்மாறான கருத்துகளைச் சொன்னபோதும், சுமார் 710 கோடி ரூபாய் செலவில் புதிய வீராணம் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதே அவையில் பிரதான எதிர்க்கட்சி, காங்கிரஸ் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் எதிர்த்தார்கள். 'இத்திட்டத்தை நிறைவேற்ற முடியாது' என்று எச்சரித்தார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏப்ரல் 2003-ல் "That the Veeranam Scheme will be implemented and Chennai will get water" என்று ஆணித்தரமாக எடுத்துரைத்தார்கள். இச்சிறப்பான புதிய வீராணம் திட்டத்தை அனைவரும் பாராட்டுகிறார்கள். முடியாததையும் தன்னம்பிக்கையோடு முடித்து வைப்பவர்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தேர்தல் அறிக்கையில் சொன்ன எண்ணற்ற திட்டங்களை, அற்புதமான திட்டங்களை எல்லாம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையிலே சேர்த்திருக்கிறார்கள். இன்றைக்கு மெத்தப் படித்தவர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல் விமர்சகர்கள் அத்துணைபேரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகிறார்கள், போற்றுகிறார்கள்.

தமிழக மக்களுக்குத் தொடர்ந்து சாதனைகளைச் செய்ததால்தான், மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தொடர்ந்து வெற்றி கிடைக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* 2011 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி; அதற்குப்பிறகு உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடைபெற்றபோது வெற்றி; கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் நடைபெற்றபோது வெற்றி; மக்களவைக்குத் தேர்தல் நடைபெற்றபோது, எப்போதுமே இல்லாத அளவிற்கு, *(மேசையைத் தட்டும் ஒலி)* 39 பாராளுமன்ற உறுப்பினர்களில், 37 பாராளுமன்ற உறுப்பினர்கள் அமோகமான முறையிலே வெற்றிபெற்று, இன்றைக்குப் பாராளுமன்றத்தில் மூன்றாவது கட்சியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினை உயர்த்திய பெருமை *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு அம்மா அவர்களுக்கு உண்டு. இப்படி வெற்றிமேல் வெற்றி பெறுகிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நல்ல திட்டங்களை நாட்டு மக்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய கருணைத் திருவுருவை, காலப் பெருமழையை, அருள்மாரிப் பொழிகின்ற அற்புதத்தை, மீண்டும் ஒருமுறை பணிந்து வணங்கி, நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

*பிற்பகல் 12-40*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இரண்டாவது முறையாக சட்டமன்றப் பேரவை உறுப்பினராகப் பணியாற்ற எனக்கு வாய்ப்பு

அளித்தமைக்கு, என் அன்புக்குரிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவி எங்கள் அன்புத் தாய் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், அன்புக்குரிய இளந்தலைவர், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியினுடைய துணைத் தலைவர், அன்புத் தலைவர், எதிர்கால பாரதத்தினுடைய பிரதமர் திரு. ராகுல் காந்தி அவர்களுக்கும், எங்களுடைய கூட்டணிக் கட்சியின் தலைவரான திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், தமிழகத்தினுடைய முன்னாள் முதல்வர், அன்புக்குரிய டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எனது வெற்றிக்காகப் பிரச்சாரம் செய்ய வந்த அன்பிற்கும், பாசத்திற்கும் உரிய தி.மு.க பொருளாளர், சட்டப் பேரவையின் ஆற்றல்மிக்க, அன்புக்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாவற்றிற்கும் மேலாக என்னைப் பெற்றெடுத்த என் தாய் தந்தையருக்கும், குளச்சல் சட்டப் பேரவையிலே எனக்கு அமோகமான வாக்குகளைத் தந்து வெற்றி பெறச் செய்த குளச்சல் சட்டப் பேரவைத் தொகுதி மக்களுக்கும் நான் நன்றி கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்லாமல், எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எதிர் வரிசையில் எங்களோடு பணியாற்ற வந்திருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் அனைவருக்கும் வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தச் சட்டமன்றம் நல்ல அற்புதமான திட்டங்களைக் கொடுத்து, எதிர்காலத்திலே தமிழகத்தை வளர்ச்சிப் பாதையிலே கொண்டு செல்லவேண்டும் என்பதுதான் தமிழக மக்களுடைய எதிர்பார்ப்பு. ஆனால், சென்ற ஆண்டு நீங்கள் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையில் இருந்த திட்டங்களைப் போல, இந்த ஆண்டு தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையிலே ஒட்டுமொத்தமாக ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டங்கள் இல்லை என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். சென்ற ஆண்டு எத்தனையோ திட்டங்களை நீங்கள் கொடுத்தீர்கள். ஆனால், திட்டங்கள் அனைத்தையும் நீங்கள் சரியாகப் பயன்படுத்தவில்லை என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். சட்டமன்ற உறுப்பினர் மோசமாகப் பேசுகின்றார்; ஆதரவாகப் பேசவில்லை என்று நீங்கள் ஒருவேளை என்மீது வருத்தப்படலாம். ஆளுகின்ற கட்சி, எதிர்க்கட்சியை மதித்து, நாங்கள் சொல்கின்ற

கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இதை நான் சொல்கின்றேன்.

வறுமை ஒழிப்பு குறித்து இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லி இருக்கின்றீர்கள். எப்படி வறுமையை ஒழிக்க முடியும் என்றால், ஆக்கபூர்வமான நடவடிக்கையின்மூலம்தான் செய்ய முடியும் என்பதையும் இந்த அவை யோசித்துக்கொள்ள வேண்டும். இங்கே வறுமை ஒழிப்பின் முக்கிய ஷரத்து; முக்கியமான பணி என்று சொன்னால், இந்த அரசுக்கு முதியோர் பென்ஷன் வழங்குவது என்பது முக்கியமான ஒன்றாக இருக்கின்றது. அடித்தள மக்களுக்கு, உண்மையான பயனாளிகளுக்கு முதியோர் பென்ஷன் கிடைக்கவில்லை என்ற என்னுடைய வருத்தத்தை நான் இங்கே சொல்லிக்கொள்கிறேன். அதில் பாரபட்சம் இருக்கின்றது. ‘அம்மா திட்டம்’ என்று சொல்லி, கூட்டங்களைக் கூட்டி, அங்கே இந்த உதவித் தொகை கோரி விண்ணப்பங்கள் கொடுக்கின்ற அனைவருக்கும் முதியோர் பென்ஷன் கொடுக்கவில்லை என்பதை இங்கே நான் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதிலே சில தடைகள் இருக்கின்றன. குறிப்பாக, முதியோர் பென்ஷன் வழங்குவதிலே சில கோட்பாடுகளை வைத்திருக்கின்றீர்கள். ஆண் மகன் இருந்தால், முதியோர் பென்ஷன் இல்லை என்றும் அவர்கள் தகுதியானவர்களாக இருந்தாலும், சில நேரங்களில் முதியோர் பென்ஷன் இல்லை என்ற நிலைமையும் இருக்கின்றது. ஆனால், அதிகாரிகளைக் கேட்கின்றபோது, அதற்குரிய வசதி அரசுக்கு இல்லை, ஆகையால்தான் முதியோர் பென்ஷன் கேட்பவர்களுக்கெல்லாம் பெறுவதற்கு தகுதியிருந்தும், கொடுப்பதற்கு வசதி இல்லை என்று சொல்கின்றார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் ஓய்வூதியத்தைப்பற்றி இந்த அவையிலே பலமுறை நாம் விவாதித்திருக்கின்றோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவல்களை சொல்கின்றார்கள். இந்தச் சமுதாயத்திலே நலிவுற்றவர்கள், ஆதரவற்றவர்கள், அனைவராலும் கைவிடப்பட்டவர்கள் என்று ஒருவர்கூட இருக்கக்கூடாது; இந்த நாட்டிலே எல்லோராலும் கைவிடப்பட்டாலும், கைவிடப்பட்ட அனைவருக்கும், ஆயுள்

முழுவதும் ஆயிரம் ரூபாய் தருகின்றேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அடிப்படையிலேதான், இந்தியாவில் உள்ள 29 மாநிலங்களில், எந்த மாநிலங்களிலும் இல்லாத வகையில், நலிவுற்றோர்களுக்காக, ஆதரவற்றோர்களுக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மிக உயர்ந்த தொகையாக ஆயிரம் ரூபாயை வழங்குகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-45*

இந்த உதவித் தொகை 9 வகையான பிரிவினர்களுக்கு வழங்கப்படுகின்றது. 9 வகையான பிரிவினருக்குக் கொடுக்கும் இத்திட்டத்தில், 3 திட்டங்களின்மூலம் மத்திய அரசு ரூ.200, ரூ.300 மற்றும் ரூ.500 கொடுக்கின்றது. இவற்றில் 80 வயதிற்கு மேல் உயிரோடு இருப்பவர்களுக்குத்தான் ரூ.500/- தருகிறோம் என்று அறிவித்து, அதிலும் அவர்கள் உச்சவரம்பு வைத்திருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்குகின்ற 3 திட்டங்களுக்கும் சேர்த்து, 9 பிரிவினர்களுக்கும் ரூ.1000/-ஐ (மேசையைத் தட்டும் ஒலி) தாயுள்ளத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்குகிறார்கள். ஆகவே, இவற்றில் விதிமுறைகள் இருக்கின்றன. நலிவுற்றவர்களாக இருக்க வேண்டும், ஆதரவற்றவர்களாக இருக்க வேண்டும், கைவிடப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்ற விதிமுறைகள் இருக்கின்றன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணங்களை வெளிப்படுத்தும்விதமாகத்தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இந்த விதிமுறைகளைத் தளர்த்தி, காலத்திற்கேற்ற வகையில், அனைவருக்கும் இத்திட்டத்தின் பயன் கிடைக்க வேண்டும் என்ற வகையில்தான், ரூ.5,000/-க்கு மேல் சொத்து மதிப்பு இருப்பவர்களுக்கு இந்த உதவித் தொகை தர முடியாது என்ற நிலையில், அந்த விதிமுறையைத் தளர்த்தி ரூ.50,000/- வரை சொத்து மதிப்பு இருப்பவர்களுக்கு இதை வழங்கலாம் என்று அறிவித்து, வழங்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், ஆண் மகன் இருந்தால், அவர்களுக்கு உதவித் தொகை தருவதில்லை என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார். அது உண்மைதான். ஆண் மகனோ, பெண் மகளோ இருக்கிறபோது, உதவித் தொகை கோருபவர் வறுமைக்

கோட்டிற்குக்கீழ் இருக்க வேண்டும் என்ற ஒரு விதிமுறை இருக்கிறது. ஆனால், அதைக் காரணம்காட்டி மனுக்கள் எதையும் தள்ளுபடி செய்வது இல்லை. அவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இல்லையென்றாலும்கூட, கிராம சபை கூட்டத்தினைக் கூட்டி, அதிலே வைத்து, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் பட்டியலில் அவர்களைச் சேர்த்து, அவர்களுக்கும் உதவித் தொகை வழங்க வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். மாவட்ட வாரியாக எங்களிடத்தில் புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. இதனை மிகப் பெரிய பயனுள்ள திட்டமாகச் செயல்படுத்த வேண்டுமென்பதற்காக மிக அதிக நிதி ஒதுக்கீட்டை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கிவருகிறார்கள். ஆக, மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் நலிவுற்றவர்களுக்கு, ஆதரவற்றவர்களுக்கு, கைவிடப்பட்டவர்களுக்கு, தகுதியுள்ள அனைவருக்குமே தொடர்ந்து வழங்கிவருகிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, தவறான தகவலை இந்த மாமன்றத்திலே பதிய வைத்து, மக்களிடத்திலே தவறான பிரச்சாரங்களைச் செய்ய வேண்டாம்; எத்தனை** பிரச்சாரங்களை நீங்கள் செய்தாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களை. . . (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர், 'உண்மைக்கு மாறாக' என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மைக்கு மாறான அவதூறுப் பிரச்சாரங்களை செய்தாலும், மக்கள் அதை நம்பத் தயாராக இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய நம்பிக்கையைப் பெற்ற ஒரே தலைவர், நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில், அதிக ஒதுக்கீட்டை இதற்காக வழங்கி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தேவைப்பட்டால், அவர்களுடைய மாவட்டத்தில் எவ்வளவு பயனாளிகள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றும்—அதற்கு இன்னும் ஒரு படி மேலே சென்று, இவற்றில் எந்தவித தவறுகளும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நடைபெறக்கூடாது என்ற அடிப்படையில், அனைவருக்கும் வங்கிக் கணக்குகள் மூலமாக வழங்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் Smart Card திட்டத்தில் இன்றைக்கு வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றில் 85 சதவீதம் பேர்களுக்கு Smart Card வழங்கப்பட்டுள்ளன. அதேபோல், ஆதார் அட்டையுடன் இணைக்கின்ற பணியும் ஏறத்தாழ 85 சதவீதம் முடிவடைந்துள்ளது. தவறுகள் எங்கும் நடைபெறவில்லை. அதேபோல், "அரசாங்கத்திடம் பணம் இல்லை; அதனால் வழங்கவில்லை" என்ற ஒரு தவறான தகவலையும் சொல்லிக்கொண்டிருக்கிறார். மத்திய அரசு கைவிட்டபோதும், யார் கைவிட்டாலும், கைவிடப்பட்ட அனைவரையும் காப்பாற்றுகிற ஒரே தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் என்பதை பலமுறை நிரூபித்து, (மேசையைத் தட்டும் ஒலி) அது வறட்சி நிவாரணமாக இருக்கட்டும், வெள்ள நிவாரணமாக இருக்கட்டும், முதியோர் ஓய்வூதியத் திட்டமாக இருக்கட்டும், உலகத்திற்கு வழிகாட்டுகிற வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், சொல்லுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகையைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் பேச, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது, 10 நாட்களுக்கு முன்புகூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொகுதியில் ஒரே நாளில் ஆயிரத்து சில்லறைப் பயனாளிகளுக்கு ஓய்வூதியப் பயன் ஆணை வழங்கப்பட்டு, அந்த நிகழ்ச்சி ஊடகங்களில், பத்திரிகைகளில் செய்திகளாக வந்திருக்கின்றன. அதுபோல, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், எந்தக் கட்சி

என்று பார்க்காமல், அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும், இதுபோன்ற நிகழ்ச்சியை நடத்தி, ஓய்வூதியம் வழங்கக்கூடிய அந்தப் பணியை விரைவுபடுத்தக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும். கடந்த முறை உங்களுடைய ஆட்சியிலே, கொளத்தூர் தொகுதியில் ஓய்வூதியம் பல இடங்களில் கிடைக்கவில்லையென்று ஆதாரங்களோடு குறிப்பிட்டு, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அதை நான் அனுப்பிவைத்திருந்தேன். அது மட்டுமல்ல; நீதிமன்றத்தில்கூட நான் வழக்கு போட்டிருக்கிறேன். அந்த வழக்கு இன்னமும் நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருக்கிறது. எனவே, வழக்கு ஒரு பக்கத்தில் இருந்தாலும், இப்பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தப் பாகுபாடும் இல்லாமல், முறையோடு இருந்தால் வழங்கப்படுகிறது என்ற உறுதியைத் தந்திருக்கிறார்கள். எனவே, பத்து நாட்களுக்கு முன்பு, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சிபோல், அனைத்துத் தொகுதிகளிலும் நிகழ்ச்சிகளை நடத்தி, ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை விரைவுபடுத்த இந்த அரசு முன்வருமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொகுதியில் வழங்கியதைப்போல், அனைத்துத் தொகுதிகளிலும் ஓய்வூதியம் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அவருக்கு இந்த நாட்டிலே நடைபெறுகின்ற நிகழ்வு தெரிகிறதோ, இல்லையோ, தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன்; தெரிந்து கொண்டு கேளுங்கள். நான் சொல்கிறேன்; பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)

பிற்பகல் 12-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசட்டும்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவரே கேட்டுக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) அவரே அமைதியாகத்தான் கேட்டுக்கொண்டிருக்கிறார், பிறகென்ன? உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக்கொண்டுதானே இருக்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித அரசுதான், ஒவ்வொரு வருவாய்க் கிராமமும் 'மக்களைத் தேடி அரசு' என்கின்ற வகையில், புரட்சிகரமான 'அம்மா' திட்டத்தை செயல்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) 16,671 வருவாய்க் கிராமங்களும் பயனடையும் வகையில் வட்டாட்சியர் அலுவலகங்களை அமைத்துக் கொடுத்து, நிருவாகத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சியைச் செய்திருக்கிறார். ஏதோ இவர்கள் புதிய கண்டுபிடிப்பை கண்டுபிடித்ததைப்போல, இங்கே கருத்தினை எடுத்து வைத்து, இதைப்போல எல்லோருக்கும் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார். எல்லோருக்கும் வழங்கியதால்தான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடர்ந்து அன்னைத் தமிழகத்திலே முதலமைச்சராக, அனைவருடைய ஆதரவையும் பெற்றிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் தொகுதியிலே முதியோர் உதவித் தொகை கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கின்றார்; இதுதொடர்பாக நீதிமன்றத்திற்கும் சென்றிருக்கிறார்; ஆகவே, வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. மாவட்ட வாரியாக எங்களிடத்திலே. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) எதற்கெடுத்தாலும் எழுந்து நிற்கிறீர்கள்; உட்காருங்கள் நீங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாவட்ட வாரியாக எங்களிடத்திலே புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்; நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படியெல்லாம் குறுக்கிடக் கூடாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே முதியோர் உதவித் தொகையாக 500 ரூபாய் வழங்கினார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னர்தான், அதை ரூ.1,000 ஆக உயர்த்தி வழங்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய ஆட்சிக் காலத்தின் இறுதியாண்டிலேதான் முதியோர் உதவித் தொகை பெறுபவர்களின் எண்ணிக்கை 16 இலட்சம் என்று இருந்ததை, 21 இலட்சம் அளவிற்கு உயர்த்தி, வந்தவர்கள், போனவர்கள், பெயர் இல்லாதவர்கள், இருப்பவர்கள் என்று எல்லோருக்கும் கொடுத்தார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, படிப்படியாக முதியோர் ஓய்வூதியத்தை தகுதியுள்ளவர்களுக்கு வழங்குவதற்கு ஆணையிட்டார்கள். அதனடிப்படையிலே சீராய்வு செய்து, மத்திய அரசு உச்சவரம்பை விதித்தாலும்கூட, உச்சவரம்பு எதையும் விதிக்காமல் தகுதியுள்ள அனைவருக்கும் முதியோர் உதவித் தொகையை வழங்கிக் கொண்டிருக்கிற ஒரே அரசு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் வெறும் 1,200 கோடி ரூபாய்தான் நலிவுற்றவர்களுக்காக ஒதுக்கீடு செய்தார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மிக உயர்ந்த ஒதுக்கீடாக 4,200 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, 3,000 கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கி, நலிவுற்றவர்களுக்கு, ஆதரவற்றவர்களுக்கு, முதியோர்களுக்கு வாரி வழங்கிய முதலமைச்சர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த மாமன்றத்திலே எடுத்துச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், பேசுங்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ், பேசுங்கள்.

(குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டார்; வாய்ப்புக் கொடுத்தேன். அதற்குப் பதில் மாண்புமிகு அமைச்சரிடமிருந்து வந்துவிட்டது. எல்லோரும் பேச வேண்டுமென்றால் எப்படி? (குறுக்கீடுகள்) எல்லோருக்கும் எப்படி வாய்ப்புத் தர முடியும்? உங்களுடைய உறுப்பினர்கள் எல்லோரும் ஆர்வமாகப் பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டால், எப்படி நான் வாய்ப்புத் தருவது? மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், பேசுங்கள். (குறுக்கீடு) யாராவது ஒருவருக்குத்தான் பேசுவதற்கு வாய்ப்புத் தரலாம்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்புக்குரிய அமைச்சர் அவர்களுடைய பதில் (குறுக்கீடு) நான் குற்றம் சொல்லவில்லை. முன்பு இருந்ததைவிட இப்போது பரவாயில்லை. ஆனால், ஒரு விஷயத்தை மட்டும் கேட்க விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் விண்ணப்பதாரர்களுக்கு சிபாரிசு செய்து கொடுத்தால், நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா என்றுதான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு) சட்டமன்ற உறுப்பினர்களை நீங்கள் நம்புவீர்களா? சட்டமன்ற உறுப்பினர்கள், தகுதியுடையவர்களை சிபாரிசு செய்கின்றபொழுது இந்த அரசு அதை ஏற்றுக்கொள்ளுமா? அந்தப் பயனாளிகளுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படுமா என்ற கேள்வியை முன்வைக்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல; வயதான, வசதியுடைய பெற்றோர்கள், (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், உட்காருங்கள், அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அவர்தான் கேட்டுவிட்டார்; நீங்கள் உட்காருங்கள். நீங்கள் வேறு அதைக் கேட்க வேண்டாம். உட்காருங்கள். அவர் கேட்டுவிட்டார், அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லப் போகிறார்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் தலைவர் பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டார்; நானும் வாய்ப்புக் கொடுத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லிவிட்டார். துணைத் தலைவர் அவர்கள், இப்போது அவர் கேட்டதற்கு துணைக் கேள்வி கேட்கிற மாதிரி கேட்டால், (குறுக்கீடு) நீங்கள் கேட்கிறீர்கள்;

திரு. கருணாஸ் கேட்கிறார்; உங்கள் உறுப்பினர்கள் அனைவரும் கேட்கிறார்கள். எப்படி நான் சபையை நடத்துவது? (குறுக்கீடு) பேசாமல் இருங்கள். மாண்புமிகு அமைச்சர், பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிக்குள் செல்கிறபோது, அங்கே இருக்கக்கூடிய மக்கள் அவர்களிடத்திலே மனுக்களைக் கொடுப்பார்கள். அந்த மனுக்களை உரிய அதிகாரிகளிடம் கொடுப்பதுதான் வாடிக்கை. அதுதான் நடைமுறையில் இருக்கிறது. அதனடிப்படையில், தகுதியுள்ள நபர்கள் கண்டறியப்பட்டு, உரிய அதிகாரிகளுக்குப் பரிந்துரை செய்வார்களேயானால், தகுதியுள்ளவர்களுக்கு—மீண்டும் நான் சொல்கிறேன்—மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்குவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தகுதியில்லாதவர்களுக்கு நீங்கள் பரிந்துரை செய்தால், அதை வழங்குவதற்கு சட்டத்தில் இடமில்லை; விதியிலே இடம் இல்லை.

பிற்பகல் 12-55

இன்னொன்றும் நான் இந்த மாமன்றத்திலே எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாமன்ற உறுப்பினர்களாக இருக்கட்டும்; சாதாரண பொது மக்களாக இருக்கட்டும்; யார் கோரிக்கை மனுவைக் கொடுத்தாலும், அந்த மனுவை ஏற்றுக்கொள்வதற்கான காரணங்கள் அல்லது அந்த மனுவை நிராகரிப்பதற்கான காரணம் அதாவது, 'இந்த விதியின்கீழே உங்கள் கோரிக்கை முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை; இந்த விதியின்கீழே இந்த மனு நிராகரிக்கப்படுகிறது' என்று உரிய காரணத்தைக் குறிப்பிட்டு, உரிய பதிலையும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்குவதற்கு இங்கே தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ். (குறுக்கீடு) இதுபற்றி அதிகமாகப் பேசியாகிவிட்டது. இந்த சப்ஜெக்ட்டை விட்டு விடுங்கள். (குறுக்கீடு) மானியக் கோரிக்கை வரும்போது பேசலாம்; உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நேரம் ஆகிவிட்டது. ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரே ஒரு point-தான் பேசினேன். நீங்கள் மற்ற கட்சிகளுக்கு வாய்ப்புக் கொடுத்ததுபோல எங்களுக்குப் பேச வாய்ப்புத் தரவேண்டும். இல்லையென்றால், 'வாய்ப்பு தரமாட்டேன்' என்று சொல்லுங்கள். நாங்கள் ஒரு All India Party. நீங்கள் தரவில்லையென்றால், போதும் என்று நான் உட்கார்ந்து விடுகிறேன். ஒரு நிமிடத்தில் முடியாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நான் மெச்சி வேண்டுவது, நீங்கள் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவேண்டும். The Hon. Speaker has the right to give abundant time for any Member.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரிய நேரம் வழங்குவதற்காகத்தான் 12-39-க்கு ஆரம்பித்த உங்களுக்கு இப்பொழுது 12-56 வரை வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். உங்களுக்கு எவ்வளவு நேரம் கொடுக்கமுடியுமோ, அவ்வளவு நேரம் பேச வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். நீங்கள் ஒரு நிமிடத்தில் முடியுங்கள். இன்னும் நான்கு பேர் பேசி முடிக்க வேண்டும். இப்பொழுது 1 மணி ஆகிவிட்டது. பேசி முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு point கூடப் பேசவில்லை. நீங்கள் நினைத்துப் பாருங்கள். அப்படியென்றால் எங்களுக்கு நீங்கள் பேச வாய்ப்பே தரவேண்டாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய பிரச்சினைகளை எடுத்துச்சொல்வதற்காகத்தான் மக்கள் எங்களை தேர்வு செய்து அனுப்பியிருக்கிறார்கள். நீங்கள் அரசரைப் போல எங்களுக்கு தகுந்த நேரம் ஒதுக்கி நீதி வழங்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் உங்களுக்குப் போதிய வாய்ப்புத் தந்திருக்கிறேன். நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) அதெல்லாம் நீங்கள் பேச வேண்டாம். சப்ஜெக்ட்-ஐப் பேசி முடியுங்கள். ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** ஒரு நிமிடத்தில் முடிக்க வேண்டுமென்றால், எனக்கு வாய்ப்பே வேண்டாம். இதோடு பேசுவதை நிறுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படிப் பேசுகிற நேரத்தில் சப்ஜெக்ட்-ஐப் பேசி முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் பட்டியலை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதாவது, ரொம்ப செல்வாக்குடைய நபர்கள், அந்த Panchayat President recommend செய்து வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் பட்டியலைச் சரி செய்வார்கள். ஆதரவு இல்லாத மக்களுக்கு ஆதரவு கொடுப்பதற்காகத்தான் இந்த அரசு இருக்கிறது. அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் எனது உரையை சுருக்கிக்கொள்கிறேன். நீங்கள் நேரம் தரவில்லை. சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையைப்பற்றிச் சொன்னீர்கள். நீங்கள் வருத்தப்படக்கூடாது. சட்டம்-ஒழுங்கைப்பற்றி எதிர்க்கட்சியான நாங்கள் சொல்ல வேண்டும். அது சரியாக இல்லையென்பதைச் சொல்லுகின்றபோது, அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த பட்ஜெட்டிலே கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகத் திருவிழாவின்போது 50 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கூடினார்கள்; அங்கே, பக்தர்கள் புனித நீராடல் அமைதியாக நடந்ததற்கு காவல் துறையின் நடவடிக்கையே காரணம் என்று குறிப்பிட்டு, அதை ஒரு சாட்சி மாதிரி சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், இங்கே சட்டம்-ஒழுங்கு நிலை எப்படியிருக்கிறது? எப்படிப்பட்ட கொலை, கொள்ளை அக்கிரமங்கள் நடக்கின்றன. இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு. ஆகவே, துரித நடவடிக்கைமூலம் சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

போக்குவரத்துத் துறையை பொறுத்தமட்டில், கடந்த ஆட்சியிலே நீங்கள் 5 ஆண்டுகளில் 9,000 புதிய பேருந்துகள் வாங்கியதாகக் கூறினீர்கள். எனக்குத் தெரிந்த வகையில், எங்கள் மாவட்டத்திற்கு 15 புதிய பேருந்துகள் மட்டுமே வழங்கப்பட்டதாக அதிகாரிகளிடத்திலே நான் கேட்டுத் தெரிந்துகொண்டேன். இந்த முறை 2,000 புதிய பேருந்துகள் வாங்கப் போவதாகக் கூறுகிறீர்கள். எங்கள் கஷ்டத்தை நாங்கள் சொல்கிறோம். அதிகமாகப் பேருந்துகளை நீங்கள் வழங்குங்கள். குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 200 புதிய பேருந்துகளாவது தாருங்கள். பழைய பேருந்துகளைப் பார்த்தால், அந்தப் பேருந்துகள் எல்லாம் தஞ்சாவூரில் Registration-ஆகியிருக்கின்றன; மற்ற இடங்களில் Registration-ஆகியிருக்கின்றன. சிற்றுந்துகளைப்பற்றிச் சொன்னீர்கள்.

நகர்பகுதிகளில்தான் சிற்றுந்துகள் அதிகமாகப் பயன்படுத்த வேண்டும்; கொடுக்க வேண்டுமென்று சொன்னால் கிராமப் பகுதிகளில் வாழ்கிற மக்கள், படிக்கிற பிள்ளைகள், ஆசிரியப் பெருமக்கள், வேலை பார்க்கிறவர்களெல்லாம் கிராமத்திலிருந்து நகரத்திற்குச் செல்லும் போது, அவர்களுக்குச் சிற்றுந்துகள் தேவை. எனவே, சிற்றுந்துகளைக் கிராமப் பகுதிகளுக்குத் தரவேண்டும்; அதுகுறித்து, பட்ஜெட்டில் அறிவிக்கவில்லையென்றாலும், வருகின்ற காலத்திலே சரிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தமட்டில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களிடத்தில் அன்பு காட்டி, இரக்கம் செய்து, பணியைச் சொல்லித் தந்து, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் இன்றுதான் பேரவையில் முதன்முதலில் பேசுகிறார்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** உழைப்பையும், உண்மையையும் தினம் தினம் ஊட்டி, போக்குவரத்துத் துறையை உயர உயரப் பறக்கச் செய்த அன்னையே, மனித குலத்தின் மூல மந்திரமே, (மேசையைத் தட்டும் ஒலி) அறியாமை இருட்டில் இருந்த எனக்கு அறிவு தானம் செய்த ஸ்ரீரங்கத்து ரங்கநாயகி தாயே, மாண்புமிகு அம்மா அவர்களின் திருவடியை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு சில விளக்கங்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில புள்ளி விவரங்களைச் சொன்னார்கள்

பிற்பகல் 1-00

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே நாகர்கோவில் மண்டலத்திற்காக 231 புதிய பேருந்துகள் வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், மற்ற மண்டலங்களிலிருந்து 2 ஆண்டுகள் ஓடிய 150 பேருந்துகள் அந்த மண்டலத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், நல்லநிலையிலே இருக்கக்கூடிய பேருந்துகளுக்குப் புதியதாக கூண்டுகளைக் கட்டி, 40 பேருந்துகள்

*2016 ஜூலை 25]* [திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்]

*அந்த மண்டலத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, 2011-2016 வரை, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 31 புதிய வழித்தடங்களை அந்தப் பகுதி மக்களுக்காக வழங்கியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். மீண்டும் 40 புதிய பேருந்துகளுக்கு கூண்டுகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மிக விரைவிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் அவை தொடங்கிவைக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டிற்கு அளிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். இதே அவையிலே இதே கேள்வியைக் கேட்டார்; இதே அவையில் கேள்விக்குப் பதில் சொல்லி, அப்பொழுது அவர் சொன்னார்; "முதலில் இதுபோல் இருந்தது; இப்பொழுது ஓரளவிற்குத் தேவையான பஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன" என்று இந்தச் சட்டமன்றத்திலேயே அவர் பேசி பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், 15 பஸ்கள்தான் என்று எந்த அடிப்படையில் உறுப்பினர் சொன்னார்? அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். ஏன் என்று சொன்னால், அது அவைக் குறிப்பில் பதிந்து விடும். (குறுக்கீடு) தவறான கருத்து அவைக் குறிப்பில் பதிந்துவிடும் என்பதற்காகத்தான் அதைச் சொல்கிறேன். அதைத் திருத்திப் பதிவு செய்யுங்கள் என்றுதான் நான் சொல்கிறேன்; வேறொன்றும் சொல்லவில்லை. அதுமட்டுமல்லாமல். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அன்றையதினம் ஒரு கோரிக்கை வைத்ததன் வாயிலாக, மற்ற மாவட்டங்களிலிருந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, ஓராண்டு, இரண்டாண்டுக் காலம் ஓடிய*

பஸ்களெல்லாம் அந்த மாவட்டத்திலே விடப்பட்டிருக்கின்றன. அதிலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதிக்கு மட்டும், எவ்வளவு பேருந்துகள் தேவை என்று கேட்டார்களோ, அந்த அளவிற்கு பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடுகள்) பதில் சொல்லி முடித்துவிடுகிறேன்; நான் சொல்கிற வரையில் இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லி முடிக்கட்டும்; நீங்கள் பேசாமல் இருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் போன தடவை அவர் சொன்னாரா, இல்லையா என்பது இந்தச் சட்டமன்ற அவைக் குறிப்பில் இருக்கின்றது. இப்பொழுது 15 பஸ்களை மட்டும்தான் விட்டார்கள் என்று தவறான கருத்தைச் சொல்கிறார் என்றுதான் நான் சொல்கிறேனேயொழிய, வேறொன்றும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே 231 புதிய பேருந்துகள் வழங்கப்பட்டதற்குண்டான records கையிலே இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர் தவறான புள்ளிவிவரங்களைச் சொல்கிறார். அதுமட்டுமல்ல; அந்த மண்டலத்திற்கென்று புதியதாக உதிரிபாகங்கள் வாங்குவதற்காக 5.51 கோடி ரூபாய், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அந்த மண்டலத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் முடியுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** நான் 3 பாயின்ட் பேச வேண்டும். அவற்றைப் பேசி முடித்து விடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தப் பிரச்சினைகளைத் தெளிவாகச் சொல்ல வேண்டும். நான் இதுகுறித்த வெள்ளை அறிக்கையைத் தாக்கல் செய்யுங்கள் என்று உங்களை insist செய்யவில்லை. அதே நேரத்தில், 64 வழித்தடங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன; 34

பேருந்துகள் இப்பொழுது நீதிமன்றத்தில் இருக்கின்றன; இந்தப் பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன. இதையெல்லாம் சொன்னால், இன்னும் பெரிய பிரச்சினையாகும். லைட் இல்லை; இண்டிகேட்டர் இல்லை, பிரேக் இல்லை. இதுமாதிரியான அவதியைத் தொழிலாளர்கள் இன்றைக்கு அனுபவிக்கிறார்கள். இந்தப் பிரச்சினைகளையெல்லாம் நான் சொல்ல வேண்டும்.

அடுத்து, வழக்கறிஞர்களுடைய strike ஒரு முக்கியமான பிரச்சினை. நீண்டகாலமாக வழக்கறிஞர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நானும் ஒரு வழக்கறிஞர் என்ற வகையிலே ** பொறுப்பு இந்த அரசிற்கு உண்டு. நீண்டநாட்களாகப் பிரச்சினைக்குரியதாக இருக்கக்கூடிய வழக்கறிஞர்கள் போராட்டத்தை முடிவிற்குக் கொண்டுவந்து, தீர்ப்பதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அன்பாக வேண்டிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், மீன்வளத்தைப் பொறுத்தமட்டில், நிதிநிலை அறிக்கையின் பக்கம் 26-ல் மீனவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு வருகிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். மீனவர்களுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிரின்ஸ், முடியுங்கள். இன்னும் 4 பேர் பேச வேண்டும், முடியுங்கள்.

பிற்பகல் 1-05

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** என் உரையை முடிப்பதென்றால், நான் முடித்துக்கொள்கிறேன். எனக்கு ஒன்றுமில்லை. உங்கள் ஆட்சி, நீங்கள் தீர்மானிக்கிறீர்கள். It is not fruitful. நான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் நான்கு உறுப்பினர்கள் பேச வேண்டியுள்ளது. சீக்கிரம் உங்கள் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மீன் வளத் துறையைப் பொறுத்தவரையில், மீன்பிடித் தடைக் காலத்தில், மீனவர் குடும்பம் ஒன்றிற்கு நிவாரணத் தொகையாக ரூ.5,000 கொடுக்கப்படுவதை உள்ளபடியே நான் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் 11 கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவர்களின் உயிருக்கே பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஜூன், ஜூலை,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஆகஸ்ட் மாதங்களில் கடல் நீர் இரண்டு கிலோ மீட்டர் அளவிற்கு கரைக்குள்ளே போய் விடுகின்றது. இதனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்; உரிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டும். கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவர்களால் வசிக்க முடியவில்லை. அவர்களுடைய வீடுகள், உடைமைகள் எல்லாம் அடித்துச் செல்லப்படுகின்றன. குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான வீடுகள் நாசம் அடைந்துவிட்டன. இதுதொடர்பாக, மனுக்களை கலெக்டரிடம் கொடுத்தால், ரூ.500, ரூ.1,000 மற்றும் ரூ.2,000 வாங்கிக்கொள்ளுங்கள் என்பார்கள். ஆனால், மீனவர்களின் வீடு மற்றும் உடைமைகள் அழிந்து விடுகின்றன. ஆகவே, அந்தப் பகுதிகளில் தடுப்புச் சுவர்கள் கட்டவும், அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கேரளாவிலே அவர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள்; அடுக்குமாடி வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த அரசைப் பின்பற்றி இந்த அரசும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ், நீங்கள் அதிக நேரம் பேசியிருக்கிறீர்கள். அடுத்து நீங்கள் பேசுவதற்கு வாய்ப்பிருக்கிறது; உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ், தொகுதி கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களைப் பேச விடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். அமைச்சரைப் பேச விடுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள், கடற்கரை மாவட்டங்கள் 11 என்று குறிப்பிட்டார்கள். அது தவறு; மொத்தம் 13 மாவட்டங்கள் உள்ளன. இந்த 13 மாவட்டங்களில் மாண்புமிகு அம்மா அவர்கள், எந்தக் காலத்திலுமே இல்லாத அளவிற்கு, அதாவது முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்-ஏறக்குறைய 13 கோடி ரூபாய் அளவில் செய்த உள்கட்டமைப்பு வசதிகளுக்கு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 370 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்து ஒரு வரலாற்று சாதனையை ஏற்படுத்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல; மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மாவட்டத்திலே, குளச்சல்

துறைமுகத்திற்கு 76 கோடி ரூபாய்; தேங்காய்ப்பட்டிணம் துறைமுகத்திற்கு 72 கோடி ரூபாய்; (குறுக்கீடு) நீங்கள் பத்து கோடி ரூபாய்தான் நிதி ஒதுக்கினீர்கள். (குறுக்கீடு) சின்னமுட்டத்திற்கு 38 கோடி ரூபாய்; இறையன்புத்தன் துறைக்கு 2 கோடி ரூபாய்; சைமன்காலனிக்கு. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? காலையிலிருந்து உங்களுக்கு என்ன ஆயிற்று? (குறுக்கீடு) நீங்கள் எல்லோரும் இப்படி எதற்கெடுத்தாலும் எழுந்து நின்று கலாட்டா செய்து கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் பதில்தானே சொல்லிக்கொண்டிருக்கிறார். நீங்கள் எல்லோரும் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைமன்காலனிக்கு 2 கோடி ரூபாய்; குரும்பனைக்கு 1 கோடி ரூபாய்; சின்ன முட்டம், Ice plant-க்கு 50 இலட்சம் ரூபாய்; இறையன்புத்தன் துறைக்கு 7 கோடி ரூபாய்; (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் கொஞ்சம் கவனியுங்கள்; ஆக மொத்தம் உங்கள் மாவட்டத்திற்கு மட்டும் மாண்புமிகு அம்மா அவர்கள் 300 கோடி ரூபாய் அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஐந்தாண்டுக் காலத்திலே நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் குளச்சல் மீன்பிடித் துறைமுகம் அறிவித்தீர்கள்; ஆனால், 10 கோடி ரூபாய் மட்டும்தான் ஒதுக்கீடு செய்தீர்கள். அதுகூட, Break water-தான் போட்டீர்கள். நீங்கள் போட்ட கற்கள் எல்லாம் கடலில் அடித்துப் போய் விட்டன. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் அதற்கு revised estimate போட்டு, கிட்டத்தட்ட அந்தத் துறைமுகத்திற்கு மட்டும் 66 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அந்த துறைமுகம் கட்டும் பணிகள் இன்றைக்கு முடியும் தருவாயில் உள்ளன. ஆனால், பத்து கோடி ரூபாயை நீங்கள் ஒதுக்கி, போடப்பட்ட அந்த கற்களும் கடலில் அடித்துப் போய்விட்டன. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காக நிதி ஒதுக்கீடு செய்ததோடு, மீனவர்களின் நல்வாழ்வுக்கென எந்த ஆட்சியிலும் இல்லாத அளவில் மாண்புமிகு அம்மா அவர்கள், ஒவ்வொரு மீனவர் குடும்பமும் வருடத்திற்கு 15,400 ரூபாய் பெறுகின்ற அளவிற்குத் திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறார்கள். அதாவது, மீனவர் சேமிப்பு நிவாரணத் திட்டம், மீன்பிடித் தடைக்கால

நிவாரணம், "லீன் சீசன்" என்று ரூ.5,000, ரூ.5,000, 2,700, 2,700, என்று ரூ.15,400/- வழங்குகிறார்கள். நீங்களே, வீட்டிற்குப் போய் கணக்குப் போட்டுப் பாருங்கள்; 15,400 ரூபாய் வரும். இவ்வளவுத் தொகையை எந்த மாநிலமும் மீனவர்களுக்கு வழங்குவதில்லை. நம்முடைய தமிழ்நாட்டில் மீனவர்களின் கஷ்டத்தை அறிந்து, உதவி செய்கின்ற ஒரு மாபெரும் முதலமைச்சராக நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிரின்ஸ், சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இப்படி நீங்கள் குறுக்கீடு செய்து அடிக்கடி எழுந்து நின்றால், வாய்ப்புத் தர முடியாது. (குறுக்கீடுகள்) அமைச்சர் ஒன்றும் உங்களைச் சொல்லவில்லையே? (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிரின்ஸ் அவர்கள் கடல் அரிப்பைத் தடுப்பதற்காக தடுப்புச் சுவர் அமைக்க வேண்டுமென்று இங்கே ஒரு கோரிக்கை விடுத்திருக்கின்றார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கீழ்க்கண்ட இடங்களில் தடுப்புச் சுவர் அமைப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ள இருக்கின்றது. RMS Wall, லீபுரம் 525 மீட்டர், சின்னமுட்டம் 205 மீட்டர், சின்னத்துறை 50 மீட்டர், குளச்சல் 250 மீட்டர், கடியாபட்டினம் 100 மீட்டர், கூவத்துறை, தூத்தூர் 50 மீட்டர் என மேற்கூறிய இடங்களில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு தேசிய கடலோர மேலாண்மை ஆணையத்தின் முன்னனுமதி பெறுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், நான் குறிப்பிட்ட இந்தப் பகுதிகளில் கடலரிப்பைத் தடுப்பதற்கு, தடுப்புச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*2016 ஜூலை 25]*

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) அமைச்சர் உங்களை ஒன்றும் சொல்லவில்லை; ஆட்சியைப் பற்றித்தானே சொன்னார்; உட்காருங்கள். (குறுக்கீடு) முந்தைய ஆட்சியில் அந்த நிதியை ஒதுக்கினார்கள் என்றுதான் சொன்னார். அவர் தனியாக பெயரையெல்லாம் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அவர் பெயரையெல்லாம் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நீங்கள் உட்காருங்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் பேசியபோது, வழக்கறிஞர்கள் குறித்த உயர் நீதிமன்ற முழு அமர்வு பிறப்பித்துள்ள சட்டத்தை ** என்று சொன்னார். அவர் கூறிய கருத்து உயர் நீதிமன்றத்தை அவமதிப்பதாகும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் கூறியது, நான் கூறியது உட்பட அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் நீதிமன்றம் குறித்துப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. உட்காருங்கள், நீங்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் கடலோரத்தில் வசிக்கும் மக்களின் பாதுகாப்புத் தேவைகளைக் கருத்திற்கொண்டு—மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள், இங்கே ஒரு கோரிக்கையை வைத்தார். இந்தக் கோரிக்கை வைக்கப்படுவதற்கு முன்பாகவே, இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற வகையிலே, பிற மாநிலங்களுக்கு வழிகாட்டுகின்ற வகையிலே, தமிழகக் கடலோரத்தில் வசிக்கும் மக்களின் பாதுகாப்புத் தேவைகளைக் கருத்திற்கொண்டு, பேரிடர்களின் அபாயத்திலிருந்து மக்களைப் பாதுகாக்கும்விதமாக, உலக வங்கி நிதியுதவியுடன், முதன்முதலாக, சுதந்திரம் அடைந்த காலந்தொட்டு, எந்தத் தலைவரும் சிந்திக்காத வகையில், 1,481.80 கோடி ரூபாய் மதிப்பில் கடலோரப் பேரிடர்*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

அபாயக் குறைப்புத் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி) செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் திட்டங்களை அறிவித்து, அதற்கான நிதி ஆதாரங்களைப் பெற்று, தமிழகத்திலுள்ள 13 கடலோர மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின் அடிப்படையில், பேரிடர் அபாயக் குறைப்பு நடவடிக்கைகள், மீன் வளத் துறைப் பணிகள், பேரிடர்களை எதிர்கொள்வதற்கான முன்னேற்பாட்டுப் பணிகள், திட்டச் செலவினங்கள் என 1,481.80 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்கிற ஒரே முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் உரையை முடிக்கிறீர்களா, இல்லையா?

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு கருத்துகளைச் சொல்லி, என் உரையை முடித்துவிடுகிறேன். என்னுடைய தொகுதியிலுள்ள திங்கள் நகர், மாங்குளி, மணவாளக்குறிச்சி பகுதிகளிலுள்ள சாலைகள் இரண்டு ஆண்டுகளாக மக்களே நடந்து செல்ல முடியாமல், வண்டி ஓட்ட முடியாமல் இருக்கின்றன; மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த அவையில் அறிவிக்கப்பட்ட, 169 கோடி ரூபாய் மதிப்பிலான இரணியல்-காட்டாத்துறை கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை உடனடியாகத் துவக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இரணியல் அரண்மனை குறித்த அறிவிப்பு இந்த அவையில் அறிவிக்கப்பட்டது. ரூ.3¾ கோடிக்குப் புனரமைக்கப்பட்ட இந்தத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முளகுமூடு, கோழிப்போர்விளையில் போக்குவரத்து அலுவலகம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*2016 ஜூலை 25]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் தேசிய கல்விக் கொள்கை 2016 வரைவிலான சில உள்ளீடுகளை வெளியிட்டுள்ளது. இந்த ஆவணத்தை ஆங்கில மொழியில் மட்டும் வெளியிட்டுள்ளது. கடந்த ஜூன் 30 ஆம் தேதி வெளியிடப்பட்ட இந்த ஆவணத்தின்மீது, 2016 ஆம் ஆண்டு, ஜூலை 30 ஆம் தேதிக்குள் கருத்து தெரிவிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் கருத்துகளும் கேட்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தில் கூறப்பட்டுள்ள கொள்கை, முன்மொழிவுகள், சிறுபான்மை மக்களின் உரிமைகள். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஜே.ஜி. பிரின்ஸ், நீங்கள் உரையாற்றியது போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பிறகு பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள். (குறுக்கீடு) அப்படியென்றால் உரையை முடியுங்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மக்களின் உரிமை, தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிகளின் வளர்ச்சி, மாநில அரசுகளின் உரிமை, சிறுபான்மை மக்களை பாதிக்கக்கூடிய பிரச்சினை. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. ஜே.ஜி. பிரின்ஸ், புது சப்ஜெக்ட்டில் எல்லாம் பேச முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் நன்றி சொல்லி உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள். (குறுக்கீடு)*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *இது* important issue.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் உரையை முடியுங்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *இந்தப் பிரச்சினை சம்பந்தமாக, தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தி, அவர்களுடைய கொள்கைகளை மாற்ற வேண்டும்; தக்க கல்வியாளர்களை வைத்துத்தான் இந்தப் பிரச்சினையை முடிவு செய்ய வேண்டும்; தக்க கல்வியாளர்களைக் கொண்டுதான் இந்தக் கல்விக் கொள்கையைக் கொண்டு வர*

வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசும்போது பெயரைக் குறிப்பிட்டிருந்தால் வாய்ப்புக் கொடுத்திருப்பேன். அவர் பெயரைச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) பேசாமல் இருங்கள்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த, இரணியல் கூட்டுக் குடிநீர் திட்டத்தினை 169 கோடி ரூபாய்க்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இத்திட்டத்தினுடைய பயனாளியான பத்மநாபபுரம் நகராட்சிக் குடிநீர் திட்டப் பணிகளை ஜெர்மானிய நிதியுதவித் திட்டத்தின்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 24-11-2015-ல் 14.87 கோடி ரூபாய்க்கு நிதியாதாரம் இறுதிசெய்துள்ளார்கள். இத்திட்டத்தின் இதர பயனாளிகளான பேரூராட்சிகளுக்கும், ஊரகக் குடியிருப்புகளுக்கும் நிதியாதாரத்தை இறுதி செய்த பின்னர் இத்திட்டம் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, வறுமை ஒழிப்பு என்று ஆரம்பித்து, வேறு சப்ஜெக்ட்டிற்குப் போய்விட்டார். அந்த வறுமையொழிப்பை பொறுத்த அளவிற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக புதுவாழ்வுத் திட்டம், தமிழ்நாடு கிராமப்புறப் புது வாழ்வுத் திட்டம், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம், தேசிய வாழ்வாதார இயக்கம் என்று அற்புதமான திட்டங்களையெல்லாம் ஒருங்கிணைத்து, கிராமங்களில் வறுமையான குடும்பங்களிலுள்ள வறுமையை ஒழிப்பதற்காக இத்திட்டங்களைச் சிறப்பான முறையில் செயல்படுத்தி, கடந்த முறைகூட 7,436 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களை ஏற்படுத்தி, 262.26 கோடி ரூபாய்க்குக் கடனுதவியெல்லாம் வழங்கியிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலும்கூட

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 355.81 கோடி ரூபாயை அதற்கு ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது அற்புதமான திட்டம். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கிராமங்களில் இருக்கக்கூடிய குடும்பங்களில் வறுமையை ஒழிப்பதற்காகக் கொண்டுவந்துள்ளார்கள். அதேபோல, புதுவாழ்வுத் திட்டத்தையும்கூட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001-2006-லே முதலமைச்சராக இருக்கும்போதுதான் கொண்டுவந்தார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.

***திரு. சு. ரவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் வழியில் சமுதாய சீர்திருத்தத் தலைவராய், பேரறிஞர் அண்ணா வழியில் ஆளுமைப் பண்பாளராய், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். வழியில் மக்கள் பாதுகாவலராய், புதியதோர் சமுதாயம் காண புரட்சித் திட்டங்களை நிறைவேற்றி வருபவர் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகாயத்தில் உலாவும் ஆதவனும் சந்திரனும் அயர்ந்துபோய் தூங்கினாலும் தூங்கும். ஆனால், தமிழர் வாழ்வொன்றையே அல்லும் பகலும் எண்ணி, இமைப்பொழுதும் தூங்காது இருப்பவர் நம் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அரசருக்கு இலக்கணமாய், படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்ற வள்ளுவன் சொன்ன ஆறு பொருட்களுக்கும் பொருந்திய தலைமகள் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) "மக்களால் நான்; மக்களுக்காகவே நான்" என்று மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, தவ வாழ்க்கை வாழ்ந்துகொண்டு, தமிழக அரசியல் வரலாற்றிலே 32 ஆண்டுகளுக்குப் பிறகு தொடர் வெற்றி என்ற ஒரு சாதனையைச் செய்து, 6-வது முறையாக ஆட்சிபீடத்தை அலங்கரித்து நல்லாட்சி புரியும் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கோ ஒரு குக்கிராமத்தில் கடைக்கோடித் தொண்டனாக இருந்த எனக்கு, கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வழங்கி, 3

முறை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கி, தொடர்ந்து 2-வது முறையாக அரக்கோணம் சட்டமன்ற உறுப்பினராக வெற்றிபெறச் செய்த, நான் அனுதினமும் வணங்கும் அன்னையே! நானும் எனது குடும்பமும் உயிர் உள்ளவரையும் இந்த உலகம் உள்ளவரையும் தங்களுக்கு நன்றியோடு இருப்போம் தாயே!

மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியால் என்னைத் தொடர்ந்து இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுத்த அரக்கோணம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய கோடானுகோடி நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க 15-வது சட்டமன்றப் பேரவையில் திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவதற்கு உயர்ந்ததொரு வாய்ப்பை உருவாக்கித் தந்த ஈடு இணையற்ற எங்கள் தாயே! வேண்டியதையெல்லாம் சொல்வதற்கு முன்பே, கும்பிட்டு நன்றி சொல்லும் இலட்சக்கணக்கான கைகளின் நன்றிப் பெருக்கே! மனித நேயம் மிக்க தலைவியே! தமிழக மக்களின் விடிவெள்ளியே! மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரியில்லா இந்த நிதிநிலை அறிக்கையை அனைத்துத் தரப்பு மக்களும் பார்த்து வியக்கிறார்கள்; வரவேற்கிறார்கள்; பாராட்டுகிறார்கள்; புகழ்ந்துரைக்கிறார்கள். ஆனால், பாராட்டவோ, புகழவோ மனமில்லாதவர்கள், ஏன் இப்படிக்கூடச் சொல்லலாம், “மக்கள் மனதிலே இல்லாதவர்கள்”, “மக்கள் நலனிலே நாட்டம் இல்லாதவர்கள்” இந்த நிதிநிலை அறிக்கையைக் குறை கூறுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் காலங்களில் சில தலைவர்கள் எல்லாம் வாக்குறுதி கொடுப்பார்கள். ஆனால், வாக்குறுதிகளை நிறைவேற்றியதாக சரித்திரம் கிடையாது. ஆனால், இந்தியத் துணைக் கண்டத்திலே தேர்தல் வாக்குறுதிகளாகச் சொன்னதையும், ஏன் சொல்லாததையும் நிறைவேற்றுகிற ஒரே தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-20

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆறாவது முறையாக அரியணையிலே அமர்ந்தவுடனே முதல் கடமையாகத் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில், 5 கோப்புகளிலே கையொப்பமிட்டார்கள். அது என்னவென்று சொன்னால், சிறு குறு விவசாயிகளுக்குக் கூட்டுறவு வங்கிக் கடன் இரத்து; அனைத்து வீடுகளுக்கும் 100 யூனிட் மின்சாரம் இலவசம்; திருமண உதவித் திட்டத்தின்கீழ், தாலிக்குத் தங்கம் 4 கிராமிலிருந்து 8 கிராம் ஆக உயர்வு; கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கான கட்டணமில்லா மின்சாரம் முறையே 200 யூனிட்டுகள் மற்றும் 750 யூனிட்டுகளாக உயர்வு; 500 டாஸ்மாக் கடை மூடல் போன்ற அற்புதமான திட்டங்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கையொப்பமிட்டார்கள். இதன் விளைவாக அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டாலும்கூட, "என் தமிழக மக்களை, கண் இமைபோல் காப்பேன்" என வரியில்லா பட்ஜெட்டை மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த நாட்டு மக்களுக்குப் பரிசாக வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒவ்வொரு எழுத்தும், ஒவ்வொரு வரியும், வறுமையை விரட்டவும், தொலைநோக்குத் திட்டத்தின் இலக்கை எட்டவும், பல முக்கிய அம்சங்கள் இடம்பெற்று இருப்பதையும், பல சலுகைகள், பல அறிவிப்புகள் இடம் பெற்றிருப்பதையும் அறிந்து, அனைத்துத் தரப்பு மக்களும் மாண்புமிகு அம்மா அவர்களை மனதாரப் பாராட்டுகிறார்கள்; மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்குகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில அரசியல் தலைவர்கள் இருக்கிறார்கள். கடந்த கால தேர்தல் அறிக்கையை, அடுத்த தேர்தலுக்கு ஜெராக்ஸ் எடுத்து, அந்த வெற்று அறிக்கையை, 'இதுதான் தேர்தல் அறிக்கை' என்று சொல்வார்கள். ஆனால், ஒவ்வொரு தேர்தலிலும் மக்களை நேசித்து, மக்களைப் பற்றிச் சிந்தித்து, தேர்தல் அறிக்கையை வெளியிடுபவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை வெளியிடுவது மட்டுமல்லாமல், நூறு சதவிகிதம் நிறைவேற்றிக் காட்டுபவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடும்பத்தால் நான், குடும்பத்திற்காகவே நான்" என வாழ்ந்து வரும் தலைவர்களின் மத்தியில், "மக்களால் நான் மக்களுக்காகவே நான்" என வாழ்ந்து கொண்டு, 2023 தொலைநோக்குத் திட்டத்தை உலகுக்கு அறிவித்த உன்னதத் தாய் எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சில தலைவர்கள் தன் வாரிசுகள் முடிசூட வேண்டும் என்று கனவு காண்கிறார்கள். ஆனால், எங்கள் அம்மா அவர்களின் மாபெரும் கனவு என்னவென்றால், 2023 தொலைநோக்குத் திட்டத்தின் இலக்கை அடைய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இளைஞர்களிடையே வேலையில்லாமை என்ற நிலையை அறவே ஒழிக்கவேண்டும்; வறுமையை முற்றிலும் வேரோடு ஒழிக்க வேண்டும்; ஒவ்வொரு குடிமகனும் கல்வி, சுகாதாரம், குடிநீர், மருத்துவம் போன்ற அடிப்படை வசதிகளை எளிதிலே பெற்றிட வேண்டும் என்பதே. அதற்கும் மேலாக, பாதுகாப்பு, அமைதி, வளம் இம்மூன்றையும் அனைத்து மக்களும் பெறுகின்ற மாநிலமாகத் தமிழ்நாட்டை உருவாக்கிக் காண்பதே என் கனவு என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூறுகிறார்கள்.

இது இமயம் தொட்ட இமயவரம்பனும், கல்லணை கண்ட கரிகால்வளவனும், பழியோடு படரா பாண்டியனும், பார்த்தறியாத கனவு; கேட்டறியாத கனவு; யாரும் கண்டிராத கனவு; அப்படிப்பட்ட தொலைநோக்குத் திட்டத்தை அடைவதற்குத் தாக்கல் செய்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையை அனைத்து தரப்பு மக்களுமே மனமகிழ்ந்து வரவேற்கிறார்கள்; மனதாரப் பாராட்டுகிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களை இரு கரம் கூப்பி வணங்குகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரியில்லா நிதிநிலை அறிக்கையிலே உள்ள ஒவ்வொரு வரியிலும் தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கும், ஏழையெளிய மக்களுடைய மேன்மைக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

"அண்ணாந்து பார்க்கின்ற மாளிகை கட்டி
அதன் அருகினில் ஓலை குடிசை கட்டி
பொன்னான உலகென்று பெயருமிட்டால்
இந்த பூமி சிரிக்கும்; அந்த சாமி சிரிக்கும்"

என்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பொன்னான வரிகளுக்குப் பொலிவு தரும் வகையிலே, குடிசைகளே இல்லாத கிராமங்களை உருவாக்கிட, (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்து ஆண்டிலே, ஏழை எளியோர்க்கு 10 இலட்சம் வீடுகள் கட்டித்தரப்படும் என்ற அறிவிப்பு. அதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரத்திலிருந்து, ரூபாய் ஐம்பதாயிரம் கூடுதலாக வழங்கி, இன்றைக்கு ரூபாய் ஒரு இலட்சத்து எழுபது ஆயிரமாக உயர்த்தியுள்ளதற்கு மாண்புமிகு அம்மா அவர்களை ஏழையெளிய மக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள்.

ஆன்மிகம் வளர, அறநெறி தழைக்க, பக்தி பரவசம் பெருக, திருக்கோயில்களுக்குச் செல்லும் பக்தர்கள் வயிறார உணவு உண்ணுவதற்கு மேலும் 30 கோயில்களுக்கு அன்னதானம் விரிவுபடுத்தப்படும் என்ற திட்டத்தை அறிந்த பக்தர்கள் அனைவரும், மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டுகிறார்கள். வளமான வாழ்க்கைக்கு ஆதாரமாக இருக்கும் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூபாய் தொள்ளாயிரத்து எழுபத்து மூன்று கோடி நிதி ஒதுக்கீடு செய்து, அதிலே பெண்களுக்கு முக்கியமான திட்டமாக அம்மா மகப்பேறு சஞ்சீவி மற்றும் அம்மா ஆரோக்கியத் திட்டம்.

பிற்பகல் 1-25

அதுமட்டுமல்ல; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணக்கார வீட்டுக் குழந்தைகள் பெறும் சுகத்தையும், சுத்தத்தையும் ஏழை வீட்டுக் குழந்தைகளும் பிறக்கும்போதே பெற வேண்டும் என்பதற்காக, ‘அம்மா குழந்தைகள் நலப் பரிசுப் பெட்டகம் வழங்கும் திட்டம்’ என (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கென அடுக்கடுக்கான திட்டங்களை அள்ளித் தந்ததால், ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் மாண்புமிகு அம்மா அவர்களை கையெடுத்துக் கும்பிடுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘கல்லாமையை இல்லாமை ஆக்குவோம்’ என்ற பாரதி கண்ட கனவை இன்று நினைவாக்கி, இடைநிற்றல் இல்லாக் கல்வியை வழங்க, எப்போதும் இல்லாத அளவிற்கு, எந்த அரசும் செய்யாத அளவிற்குப் பள்ளிக் கல்வித் துறைக்கு 24,130 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம்

சிறப்பு; கற்றோருக்கும், கல்விக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலேதான் செழிப்பு. இது நாடறிந்த உண்மையாகும்.

கலை என்ற பெயரில் கல்வி நிலையம் காணாத களப்பிரரின் இருண்ட காலத்திற்குக் கல்லறை எழுப்பி, இன்றைக்கு ஒரு கல்விப் புரட்சியை மாண்புமிகு அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள்.

"வலிமையுள்ளவன் வச்சது எல்லாம் சட்டம் ஆகாது தம்பி;
பிறர் வாழ உழைப்பவன் சொல்லுவதெல்லாம் சட்டமாகணும் தம்பி"

என்ற பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய வைர வரிகளை மெய்ப்பிக்கின்ற வகையிலே, தனியார் பள்ளிகளை வெளியில் நின்று வேடிக்கை பார்த்த, சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த குழந்தைகளை, அந்தக் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி, இன்றைக்கு 2,31,404 குழந்தைகளை தனியார் பள்ளிகளில் சேர்த்தவர் நம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பாண்டிலே 86,199 குழந்தைகள் தனியார் பள்ளிகளிலே சேர்க்கப்பட்டு, அதற்காக 125 கோடி ரூபாய் இன்றைக்கு நிதி ஒதுக்கீடும் செய்திருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மாண்புமிகு அம்மா அவர்களைக் கற்றோரும், மற்ற எல்லோரும் இன்றைக்கு மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கின்றனர்.

'உழவர் சேற்றிலே கால் வைத்தால்தான், நாம் சோற்றிலே கை வைக்க முடியும்' என்னும் பெருமைக்குரிய முதன்மைத் துறையான வேளாண் துறைக்கு, ரூ.1,650 கோடி அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உழவர்கள் குறைந்த செலவிலே மிகுந்த இலாபத்தை அடைந்திட எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டம்; கலப்புப் பண்ணைய முறை திட்டம்; பயிர் உற்பத்தியில் சிறப்புத் திட்டம்; நுண்ணீர்ப் பாசனத்திற்கு மானியம் வழங்கும் திட்டம்; காய்கறி மற்றும் பழ வகைகள் சாகுபடி பெருக்குவதற்கான திட்டம்; கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் இயந்திரம் வாங்க மானியம் வழங்கும் திட்டம் என்று உழவர்களுக்கு உயர்வான திட்டங்களை, உன்னதமான திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள்

அளித்திருக்கிறார்கள். இயற்கைச் சீற்றங்களிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்க பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்திற்கு மாநில அரசின் பங்காக ரூ.239.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்க ரூ.6,000 கோடி என வேளாண் துறைக்கு அடுக்கடுக்கான திட்டங்களை அள்ளித்தந்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை உழுதுண்ணும் உழவர்கள் உண்மையுடன் பாராட்டுகின்றனர்; உளமகிழ்ந்து வாழ்த்துகின்றனர். வாழ்த்த மனமில்லாதவர்கள் எல்லாம் இன்றைக்குத் தலைகுனிகிறார்கள்.

கடந்த வருடம் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் நிரந்தர வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளையும், தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள 140 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். மேலும், விரிவான வெள்ளப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றையும் எங்கள் அம்மா அவர்களின் அரசு தயாரித்து வருகிறது. கும்பிட்ட கரங்கள் விலகுவதற்கு முன்னே, வரம் தரும் கடவுளாக, மழை வருவதற்கு முன்னே வெள்ளத் தடுப்புப் பணிகளைச் செய்துவரும், எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களை எல்லோரும், நல்லோரும் பாராட்டுகிறார்கள் என்பதைப் பெருமையோடு எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய சிந்தனையுடன் இந்தத் தொலைநோக்குத் திட்டத்தின் இலக்கினை அடைவதற்கு ஒரே குறிக்கோளுடன் மாநில அளவிலே ஐம்பெரும் இயக்கங்களை இன்றைக்கு வடிவமைப்பு செய்து கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏழையெளிய மக்கள் ஏற்றம் பெற வேண்டும் என்பதற்காகவும், பொருளாதாரத்திலே பின்தங்கி இருப்பவர்களை மேன்மைப் பெறச் செய்யவேண்டும் என்பதற்காகவும், கருவறையிலிருந்து கல்லறைக்குப் போகும் வரை, பல்வேறு சலுகைகள் இந்தப் பட்ஜெட்டிலே இடம் பெற்றிருப்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். வறிய நிலையில் உள்ள தாய்மார்கள் பொருளாதார மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காக, 12,000 தாய்மார்களுக்கு, விலையில்லா கறவை மாடுகள் வாங்குவதற்கான தொகையை ரூ.30,000/-லிருந்து, ரூ.35,000/- ஆக உயர்த்தி மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றைக்கு ஆணையிட்டிருக்கிறார்கள். மாற்றுத் திறனாளிகளெல்லாம் பொதுப்

பிரிவினருக்கு இணையாக வாழ வேண்டும் என்பதற்காக, 1,000 பேருக்கு பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் இலவசத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சிறுபான்மையினர் நலன் கருதி, உலமாக்களுக்கெல்லாம், உதவித் தொகையை 1,000/- ரூபாயிலிருந்து 1,500/- ரூபாயாக உயர்த்தி வழங்க ஆணையிட்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்க ரூ.1,429.94 கோடி ஒதுக்கீடு; மீன்பிடித் தடை காலங்களுக்கான உதவித் தொகை ரூ.4,000/-லிருந்து ரூ.5,000/- ஆக உயர்வு; 5.35 இலட்சம் மாணவர்களுக்கு விலையில்லா மடிக் கணினி வழங்க ரூ.890 கோடி ஒதுக்கீடு; ரூ.422/- கோடி செலவில் காவலர்களுக்கு 2,673 வீடுகள் கட்டித் தரப்படும் போன்ற சலுகைகளை எல்லாம், இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வாரி வழங்கியிருக்கிறார்கள். அனைத்துத் தரப்பு மக்களும் இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களை வரவேற்று, பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே” என்ற சீத்தலை சாத்தனாரின் வாக்கிற்கேற்ப, அம்மா உணவகத்தின்மூலம் உண்டி கொடுத்து, உயிர் கொடுத்த உன்னதத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தத் திட்டத்தை டைம்ஸ் ஆப் நியூயார்க் (Times of New York) என்ற உலகப் புகழ்பெற்ற அமெரிக்க நாட்டுப் பத்திரிகை வியந்து பாராட்டியிருக்கிறது. ஆகவேதான், கடந்த 5 ஆண்டுக் காலம் மாண்புமிகு அம்மா அவர்கள் செய்த சாதனை திட்டங்களுக்கு நற்சான்றாக, கடந்த உள்ளாட்சித் தேர்தலிலே 90 சதவிகிதம் வெற்றி; பாராளுமன்றத் தேர்தலிலே 95 சதவிகிதம் வெற்றி; 32 ஆண்டுகளுக்குப் பிறகு தொடர்ச்சியாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கே வெற்றி கிடைத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “ஆணும் பெண்ணும் நிகரெனக்கொள்வதால், அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்” என்று பெண்கள் முன்னேற்றத்திற்காகக் கூறிய மகாகவி பாரதியினுடைய வாக்கை மெய்ப்பிக்க, வரும் உள்ளாட்சித் தேர்தலிலே பெண்களுக்கு 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு பெற்றுத் தந்த தாயே! (குறுக்கீடு) ஆயிரம் நட்சத்திரம் கூடினாலும் சந்திரனாகாது; எதிரிகள் எல்லோரும் ஒன்று கூடினாலும் உங்களை வெல்ல முடியாது; அம்மா உங்களுக்கு

நிகர் நீங்கள்தான். வரும் உள்ளாட்சித் தேர்தலில் 100 சதவிகிதம் வெற்றி எங்கள் மாண்புமிகு அம்மா அவர்களுக்கே என்று தெரிவித்துக்கொள்கிறேன். சாதாரண சட்டக் கல்லூரி மாணவராக உங்கள் பின்னாலே ஓடோடிவந்த கடைக்கோடி தொண்டனான என்னை, இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெறச் செய்து, இந்த நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திலே பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி, எனது தொகுதி சம்பந்தமான 5 முக்கியக் கோரிக்கைகளை மட்டும் கூறிவிட்டு, மற்ற கோரிக்கைகளை சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்யும்படி தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அரக்கோணம் நகரத்தைத் தலைநகரமாகக்கொண்டு ஒரு புதிய மாவட்டம் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரக்கோணம் நகர மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான வெளிவட்டச் சாலை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அரக்கோணத்தில் ஓர் அரசு பாலிடெக்னிக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க ஒரு தொழிற்சாலை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் 400 K.V.A. திறன் கொண்ட ஒரு துணை மின் நிலையத்தை அமைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு, மற்ற கோரிக்கைகளையெல்லாம் சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ளும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டு, நன்றி கூறி அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**தொகுதிக் கோரிக்கைகள்:**

அரக்கோணம் நகரில் மாவட்ட கூடுதல் அமர்வு நீதிமன்றம் அமைக்க வேண்டும். அரக்கோணத்தில் கோட்டாட்சியர் அலுவலகம் அமைக்க வேண்டும். அரக்கோணம் நகரில் தொழிலாளர் நல நீதிமன்றம் அமைக்க வேண்டும். அரக்கோணம் பழனிப்பேட்டை இரயில்வே மேம்பாலப் பணிகளை உடனடியாகத் துவங்கிட வேண்டும். அரக்கோணம் புதிய பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த வேண்டும். அரக்கோணம் தொகுதியில் போக்குவரத்துப் பணிமனை அமைத்துத் தர வேண்டும்.

அரக்கோணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். அரக்கோணம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். அரக்கோணம் நகராட்சி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர வேண்டும். அரக்கோணம், சார்பு நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும். அரக்கோணம், அரசு பொது மருத்துவமனைக்கு அனைத்து சிகிச்சைப் பிரிவுகள் அடங்கிய ஒருங்கிணைந்த மருத்துவ வளாகக் கட்டடம் கட்டித் தர வேண்டும். காவேரிப்பாக்கம் ஒன்றியம், செம்பேடு ஊராட்சியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டும். காவேரிப்பாக்கம் ஒன்றியம், செம்பேடு ஊராட்சிக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்துத் தர வேண்டும். தண்டலம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும். குருவராஜப்பேட்டை, கால்நடை கிளை மையத்தை, மருந்தகமாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும்.

காவேரிப்பாக்கம் ஒன்றியம், கடவாரி கண்டிகை, கால்நடைக் கிளை மையத்தை மருந்தகமாகத் தரம் உயர்த்திட வேண்டும். நெமிலி ஒன்றியம், கீழ்வெங்கட்டாபுரம், கால்நடைக் கிளை மையத்தை மருந்தகமாகத் தரம் உயர்த்திட வேண்டும். தணிகைபோளூர் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார மையம் அமைத்துத் தர வேண்டும். பள்ளூர் கிராமத்தில் ஓர் ஆரம்ப சுகாதார மையம் வேண்டும். தணிகைபோளூர் கிராமத்தில் ஒரு கொள்முதல் நிலையம் அமைத்துத் தர வேண்டும். அரக்கோணம், ஆதி திராவிடர் கல்லூரி மாணவர்கள் தங்கிப் படிக்கும் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும். அரக்கோணம், ஆதி திராவிடர் கல்லூரி மாணவியர்களுக்குத் தங்கிப் படிக்க விடுதி துவங்கிட வேண்டும். அரக்கோணம், பிற்படுத்தப்பட்ட கல்லூரி மாணவர்களுக்குத் தங்கிப் படிக்கும் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும். அரக்கோணம், பிற்படுத்தப்பட்ட கல்லூரி மாணவிகளுக்குத் தங்கும் விடுதி துவங்கிட வேண்டும். அரக்கோணம், அரசு கல்லூரி மாணவியர்களுக்குச் சிறப்பு மகளிர் பேருந்து ஒன்றை இயக்க வேண்டும். SKAT Road காஞ்சிபுரம் வெள்ளை கேட்டிலிருந்து அரக்கோணம் வழியாகத் திருத்தணி வரை நான்கு வழிச் சாலையாக அமைக்க வேண்டும். அரக்கோணம், காவனூர், கோணலம், மாவட்ட இதரச் சாலையை மாவட்ட முக்கியச் சாலையாகத் தரம் உயர்த்த வேண்டும். அரக்கோணம், மோசூர், செய்யூர், நகரிகுப்பம், தக்கோலம்

சாலையை அகலப்படுத்த வேண்டும். தக்கோலம் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வர வேண்டும். தக்கோலம் பேரூராட்சியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொண்டு வர வேண்டும். தக்கோலம் கூட்டுரோடு, ஓச்சலம் கிராமத்தில் கால்நடை கிளை மையங்களைத் திறக்க வேண்டும்.

அரக்கோணம், காஞ்சிபுரம் சாலையில் உள்ள கல்லாறு உயர்மட்ட மேம்பாலப் பணியைத் துவக்கி விரைவாகக் கட்டித் தர வேண்டும். அரக்கோணம் ஒன்றியம், வளர்புரம், கிருஷ்ணாபுரம் இடையே செல்லும் நந்தியாற்றின் மேல் நபார்டுமூலம் உயர்மட்ட மேம்பாலம் கட்டித் தர வேண்டும். நெமிலி ஒன்றியம், சம்பத்ராயன்பேட்டை, இலுப்பைத்தண்டலம் இடையே செல்லும் கல்லாற்றில் ஆற்றுபிள்ளையார் கோயில் அருகில் நபார்டுமூலம் உயர்மட்ட மேம்பாலம் கட்டித்தர வேண்டும். மேல்களத்தூர் காலனி, வளர்புரம் காலனி, முஸ்லிம் நகர், கே.ஆர்.பி. நகர், குருவராஜப்பேட்டை, செந்தில் நகர், மேலத் நகர், அரக்கோணம் வார்டு 31, எஸ்.என். கண்டிகை, தணிகைபோளூர், மேல் கண்டிகை, சயனபுரம் காலனி ஆகிய பகுதிகளில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் அமைக்க வேண்டும். பரமேஸ்வரமங்கலம், அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும். அரக்கோணம், அரசு ஆதி திராவிடர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும், அரசு ஆதி திராவிடர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலும் உள்ள மிகப் பழுதடைந்த கட்டடங்களை அகற்றி நபார்டு திட்டத்தின்கீழ் புதிய கட்டடங்கள் கட்டித் தர வேண்டும். அரக்கோணம், மோட்டார் வாகனப் பகுதி அலுவலகத்தை வட்டாரப் போக்குவரத்து அலுவலகமாகத் தரம் உயர்த்த வேண்டும். தக்கோலம் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும். தக்கோலம் சாவடியில் கிராம நிருவாக அலுவலகம் கட்டித் தர வேண்டும். அரக்கோணம் ஒன்றியம், வளர்புரம் பகுதியில் கால்நடை கிளை மையம் துவங்கிட வேண்டும். அரக்கோணம் பகுதியில் அரசு கல்வியியல் கல்லூரியும், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் அமைக்க வேண்டும். அரக்கோணம்-சோளிங்கர் இடையே இரவு 9-30 மணிக்கு ஓர் அரசுப் பேருந்து இயக்க வேண்டும். அரக்கோணம் விண்டர்பேட்டையிலுள்ள 33 கே.வி. துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்திட வேண்டும். அரக்கோணம் அரசு பொது மருத்துவமனையில் அவசர விபத்துப் பிரிவு அமைத்துத் தர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.

***திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் இந்த அவையில் என் கன்னிப் பேச்சைப் பேச வாய்ப்பளித்த எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் தளபதியாருக்கும், உங்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1920 ஆம் ஆண்டில் Montagu-Chelmsford Reforms-ன் அடிப்படையில் முதலில் அமைக்கப்பட்ட மெட்ராஸ் ராஜ்தானி சட்ட மேலவையில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டும், 1952 ஆம் ஆண்டில் சுதந்திரத்திற்குப் பிறகு அமைக்கப்பட்ட முதல் மெட்ராஸ் மாநில சட்டப் பேரவையின் தற்காலிகப் பேரவைத் தலைவராகவும் இருந்து, அனைத்து உறுப்பினர்களுக்கும் பதவிப் பிரமாணம் செய்த எனது தாத்தா தமிழவேள் திரு. பி.டி. ராஜன் அவர்களின் வழியிலும், 1967 ஆம் ஆண்டு தேனி தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டும், 1996-லிருந்து 2001 வரை இச்சட்டப் பேரவையின் தலைவராகவும் பணியாற்றிய என் தந்தையார் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் அவர்களின் வழியிலும், 30 ஆண்டுகளாக பல வெளிநாடுகளில் மாணவர், விரிவுரையாளர், ஆலோசகர், வங்கியாளர் என்று பல துறைகளில் அனுபவம் பெற்ற எனக்கு, பொது வாழ்க்கைக்கு வர மகத்தான வாய்ப்பை அளித்த தலைவர் கலைஞர் அவர்களுக்கும், அருமை அண்ணன் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தலில் உழைத்த பல கட்சித் தொண்டர்களுக்கும், வாக்களித்து வெற்றி பெற வைத்த மதுரை (மத்தி) தொகுதி வாக்காளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

எனது தாத்தாவும், தந்தையாரும் பொது வாழ்க்கையிலிருந்த சுமார் ஒரு நூற்றாண்டில் ஒரு பாரம்பரியத்தை நிலைநாட்டினார்கள். கொள்கைக்கும், பொதுப் பணிக்கும் மட்டுமே அரசியலில் ஈடுபாடு; அந்த அரசியலில் விதிமுறைகளுக்குட்பட்டே செயல்பாடு; ஜாதி, மதம், கட்சி வேறுபாடின்றி எல்லோருக்கும் மரியாதை, எல்லோருடனும் நட்பு, அந்தப் பாரம்பரியத்திற்கு ஏற்றவகையிலும், இந்த அவையில் பேசும்போது, எனது அருமை அண்ணன், சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அண்ணன்

அவர்கள் 'நாங்கள் எதிர்க்கட்சியாக செயல்படுவோம், எதிரிக் கட்சியாக அல்ல' என சொன்னதற்கேற்பவும் செயல்படுவேன்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற குறளுக்கேற்ப இத்தகைய குடும்பத்திற்கு வாரிசாகவும், எனது தலைவரின் வார்த்தைக்குக் கட்டுப்பாடாகவும் இருக்கும் நான், இன்றைக்கும், என்றைக்கும் அவர்களது வழியிலேயே நடப்பதுதான் எனது செய்ந்நன்றியும், சிறப்பு உருவமுமாகும் எனக் கருதுகிறேன்.

Hon'ble Speaker, I would now like to continue my address in English partly because I am more comfortable communicating technical aspects in this language and also to ensure the accurate reporting of my comments in the press. But, I do so with the full awareness that the Hon'ble Chief Minister's command of the language is second to none.

In keeping with the traditions of a Maiden Speech, I would like to raise some issues of vital importance to my constituency of Madurai Central, which includes the world-famous Meenakshi Amman Temple. However, realising that this speech is primarily intended to discuss the budget, and to not unduly demand the attention of the whole House, I would like to limit my spoken remarks to only 3 major issues and request you to kindly include the list of 8 other issues, which I have in printed form and will submit to the Secretary in due course-to be taken as read as part of my speech.

First, we have been anxiously awaiting the Third Vaigai Drinking Water Scheme, which I am told has now been sanctioned. I urge that implementation be done as quickly as possible, as many areas of my constituency are currently without proper access to drinking water supply.

Second, the budget mentions a Vaigai Rejuvenation Scheme (in conjunction with the Noyyal River) to be funded to the tune of Rs.24.58 Crores. I have concerns about whether the stated amount will suffice for even the Vaigai alone, let alone the Noyyal. However, I am much more concerned that any such rejuvenation attempts must first start with the removal of all encroachments in the river bed, followed by the comprehensive clean-up. Steps should also be taken to build clear barriers

and retaining walls which prevent future encroachments or dumping. And I urge that such a scheme should also include the clean-up and restoration of the Anuppanadi and Kiruthumal channels, so that they may serve their original purpose as storm-water overflow management drains.

Third, we need a comprehensive traffic study to understand the extent to which the existing road network can ever be improved in order to accommodate both current and future traffic demands. It is my belief that in the ancient city of Madurai, which is more than 2000 years old, it will be impossible to resolve traffic flow problems in the long term without the development of a mass rapid transit system like the Chennai Metro along with re-designation of large parts of the City as “No Vehicles Zones” similar to the schemes developed in many ancient European Cities like Brussels, Copenhagen, Munich and Rome. I suggest that such a study be funded and initiated as quickly as possible, because the traffic congestion in the city is already quite extreme and will soon get much worse.

Hon’ble Speaker, I can summarise these and all of my other requirements on the submitted list, through one overarching request that Madurai be developed as one of the 10 World Class Cities promised by the Hon’ble Chief Minister in the Vision 2023 document.

I would now like to turn to the Budget that was presented by the Hon’ble Finance Minister on Thursday, the 21st of July. As fellow descendants of the Self-Respect Movement, it is unlikely that the ruling and main opposition parties will have major disagreements in principle about the beneficial impact of most of the programs pursued by the Government. But even allowing for this similarity of principles, I note that the proposed budget has some aspects that cause concern.

These include,

1) A recently developed inability especially in the last 2 years to realize State’s Own Tax Revenue anywhere close to the Government’s Budget projections, even as the State’s Own Non-Tax Revenue, as well as Total Central contribution components are very accurately estimated or conservatively estimated.

2) The growth rate in Realised State’s Own Tax Revenue over the past 3 years has considerably lagged the growth rate in GDSP.

3) In fact, the growth rate in Revenue spending has consistently exceeded the growth rate in Revenue Income, thereby causing increasing Revenue Deficits, which have culminated in our current Revenue Deficit of over 10%.

4) We have a proposed fiscal deficit of 2.96% for this year, brushing against the 3% target of the Fiscal Responsibility, but stated projections already suggest that we will violate this target next year.

*பிற்பகல் 1-40*

5) The great increase in the State's overall debt of almost Rs.1 Lakh crores since April 1st, 2014 is also a cause of concern. A concurrent and consequent steep rise in the proportion of Total Revenue that is used for interest payments has gone from 11% to over 14%. The growth rate of capital investment is far below the growth rate of Revenue Expenditure, when it should actually be much higher as promised in the Vision 2023 document. A consistent inability over the past few years to realize the Capital Investment targets set forth in each Budget means that we have under-invested compared to Budget before the end of the year. Last, but not least, there are some inconsistencies between 2016-2017…(Interruption)

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,… (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒன்றும் இல்லை. உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) உட்காராமல் இருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நான் என்னவென்று பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) இப்படிப் பேசிக்கொண்டிருந்தால் எப்படி? (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்திக்கொண்டிருக்கிறார். அவர் சொல்லியிருக்கின்ற புள்ளிவிவரத்தில் தவறு இருப்பதாக உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் point of clarification கேட்கிறார். (குறுக்கீடுகள்) நான் permit செய்கிறேன். (குறுக்கீடுகள்)

சபாநாயகர் permit செய்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் தனிநபர் வருமானத்தைப் பற்றி சில ஐயப்பாடுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே, தமிழ்நாட்டில் மாண்புமிகு அம்மா அவர்களால் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் பிரகடனப்படுத்தப்பட்டது. அந்தத் திட்டத்தின்படி, தமிழ்நாட்டில் 2023-ல் 15 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் 217 அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், சம்பந்தப்பட்ட திட்டங்கள் பல்வேறு துறைகளில் செயல்படுத்தப்படும் என்ற வகையில், தொலைநோக்குத் திட்ட ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அதில் இன்றைய நாள் வரை 86 திட்டங்களுக்கான பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன; 17 திட்டங்களுக்கான பணிகள் ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் நிலையை அடைந்துள்ளன; 26 திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கை (D.P.R.), விரிவான சாத்தியக்கூறு ஆய்வு (Detailed Feasibility Study) அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளன. ஏனைய திட்டங்களில் 89 திட்டங்கள், திட்ட வடிவமைப்பில் தயாராக உள்ளன. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் செயல்படுத்தப்படுவதால், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி மேலும் உயரும் வாய்ப்பு ஏற்பட்டு, தமிழ்நாட்டில் சராசரி தனிநபர் வருமானத்தை 10,000 அமெரிக்க டாலர் அளவிற்குக் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) பொறுமையாக இருங்கள். (குறுக்கீடுகள்) இந்த ஆவணமே. . .

பிற்பகல் 1-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இந்த ஆவணம் 2023 வரை தயாரிக்கப்பட்டு, (குறுக்கீடுகள்) திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. உறுதியாக மாண்புமிகு

அம்மா அவர்கள் 2023 ஆம் ஆண்டிலும் முதலமைச்சராக இருப்பார். அதற்குப் பின்னாலும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் முதலமைச்சராக இருப்பார். (மேசையைத் தட்டும் ஒலி) இது காலத்தின் கட்டாயம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, 2023-க்கு பின்னால் உலக அளவில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு ஒப்பாக மதிப்பிடப்படும் தனிநபர் சராசரி வருமானம் தமிழ்நாட்டிலும் இருக்குமென்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இலக்கு நிர்ணயம் செய்து, அதன்படி இன்றைக்கு அரசு உத்வேகத்துடன் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதனை நான் இங்கு பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தியாக ராஜன், இருங்கள். நீங்கள் பேசியதில் ஒரு clarification கேட்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) இருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பாண்டியராஜன் ஒரு clarification கேட்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, திரு. தியாக ராஜன் அவர்களே permit செய்கிறார். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர் திரு. தியாக ராஜன் அவர்களே அதனைக் கேட்பதற்கு permit செய்கிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது, பிறிதொரு உறுப்பினர் குறுக்கிட்டுப் பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டால், அனுமதி கொடுப்பதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஆகவே, யாருக்கும் நீங்கள் வாய்ப்புக் கொடுக்கக்கூடாது என்று தங்களுக்கு ஆணையிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்கள் பேசாமல் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தியாக ராஜன் இப்போது பேசிக்கொண்டிருக்கிறார். அவர் பேசிக் கொண்டிருப்பதிலே ஒரு clarification கேட்க வேண்டுமென்று திரு. பாண்டியராஜன் கேட்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) சொல்வதைக்

கேளுங்கள். (குறுக்கீடுகள்) அவர் clarification கேட்டால், அதையும் ஏற்றுக்கொண்டு பதில் சொல்கிறேன் என்று திரு. தியாக ராஜன் yield ஆகியிருக்கிறார். ஆகவே, திரு. பாண்டியராஜன் நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

**THIRU K. PANDIARAJAN:** Respected Member, Mr. Thiaga Rajan recorded here that the growth rate of Tamil Nadu is nowhere near the growth rate projected by Hon'ble Amma in Vision 2023. (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். திரு. தியாக ராஜன் yield ஆகியிருக்கிறார். (குறுக்கீடுகள்) அவர் பதில் சொல்கிறேன் என்கிறார். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், அவர் பேசி முடித்தவுடன் உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புத் தருகிறேன்; நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**THIRU K. PANDIARAJAN:** I do not want it to get recorded. (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டியராஜன் ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்) திரு. தியாக ராஜன் yield ஆகி, அந்த clarification—க்கு பதில் சொல்கிறேன் என்கிறார். எனவே, திரு. பாண்டியராஜன் அந்த clarification—ஐக் கேட்பார். அவர் கேட்டு முடித்தவுடன், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் வாய்ப்புக் கேட்டால், நான் வாய்ப்புக் கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) அவர்தான் நான் பதில் சொல்கிறேன் என்கிறார். (குறுக்கீடுகள்) திரு. தியாக ராஜன், திரு. பாண்டியராஜன் கேட்கின்ற clarification—க்கு பதில் சொல்கிறேன் என்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**THIRU K. PANDIARAJAN:** The Hon'ble Member of the Assembly Mr. Thiaga Rajan spoke of 5 aspects in 5 minutes. The first thing he spoke about was that, according to Vision 2023, the growth rate of GDP which has been projected, and that projection is about 11% over 11 years. Every year, 11% over 11 years is what has been projected and in these 5 years of implementation of Vision 2023, we started with the GDP of 4.2 lakh crores by DMK (Thumping of desks) and where we are today is Rs.12

lakh 12 thousand crores as has been given in the budget document. . . (Interruptions) as has been given in the budget document. . . (Interruptions) ஏன்? அவர் பேசும்போது நான் ஆங்கிலத்தில் பேசக் கூடாதா? அவருடைய கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அதைத்தானே சொல்லியிருக்கிறார். What he asked is a question about... (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன், நீங்கள் உட்காருங்கள். முழுமையாக அவர் பேசி முடிக்கட்டும். உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)

**THIRU K. PANDIARAJAN:** The earlier Finance Minister Mr. Anbazhagan, spoke about in this august Assembly,... (Interruptions) The former Finance Minister Thiru Anbazhagan, in this august Assembly spoke in 2011. . . (Interruptions)

பிற்பகல் 1-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். திரு. பழனிவேல் தியாக ராஜன் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார். நீங்கள் ஏன் குறுக்கிடுகிறீர்கள்?

**THIRU K. PANDIARAJAN:** The former Finance Minister Mr. Anbazhagan presented in this forum that the Per Capita Income of Tamil Nadu has grown to Rs.67,000/- only from around Rs.39,000/-. It grew to Rs.67,000/- over five years of DMK rule and where we are today is Rs.1,68,000/- as far as Tamil Nadu is concerned. The growth rate what Tamil Nadu Chief Minister Amma had committed in Vision 2023 was only 11% and this year the growth rate has been 8.79%. The actual growth rate plus inflation put together is 13.5%. That is what the Finance Minister has presented here. This is only one of the five mis-statements which were getting recorded here.

The second was clarified by the Hon'ble Finance Minister. The third one is regarding the violation of FRBM Act. Thiru Anbazhagan, former Finance Minister under DMK rule spoke in this august Assembly and presented why the DMK had to exceed the revenue deficit target thrice in their five years' rule. The AIADMK Government has crossed Rs.15,000 crores in its first year itself. That is a reality. But today, DMK inclusive

Central Government has exceeded the revenue deficit target every year, year after year and that is something the Hon'ble Member need to know. (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** O.K. (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள், ஆரோக்கியமாக விவாதம் போய்க்கொண்டிருக்கும்போது, திரு. சாமி, ஏன் நீங்கள் இப்படிச் செய்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) வாய்ப்புத் தருகிறேன், நான் வாய்ப்புத் தருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்பொழுது மதுரை மாநகராட்சிக்குட்பட்ட அவரது தொகுதியில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினையைப்பற்றிப் பேசினார்கள். அதைப்போல, மூன்றாவது கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப்பற்றியும் பேசினார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, வைகை அணையிலிருந்து நாள்தோறும் 100 மில்லியன் லிட்டர் குடிநீர் மாநகராட்சி முழுவதும் விநியோகம் செய்யப்படுகிறது; சில வார்டுகளில் லாரி மூலமாகவும் விநியோகம் செய்யப்படுகிறது. அதேபோல, வைகை மூன்றாவது கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப்பற்றிப் பேசினார்கள். 250 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அந்தத் திட்டமும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் AMRUT திட்டத்தின் வாயிலாக இன்றைக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. அது AMRUT திட்டமாக இருந்தாலும்கூட, மத்திய அரசு அந்த திட்டத்தின்கீழ் 35 சதவிகிதம் நிதியைத்தான் கொடுக்கின்றது. மீதி 65 சதவிகித நிதியினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தில் இந்தப் பணிகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக 12 மில்லியன் லிட்டர் குடிநீர் தினமும் மதுரை மாநகராட்சிக்கு வழங்கப்படவுள்ளது. அதற்கான சோதனை ஓட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேபோல, பாதாளச் சாக்கடைத் திட்டம் மூலமாக கழிவுநீர் கலக்கப்பட்டு

வருகிறது என்றும் சொன்னார்கள். அந்தக் கழிவுநீர் எல்லாம் குடிநீரில் கலக்காமல் தடுப்பதற்காக கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் நிதியினை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்து நடவடிக்கை எடுத்துள்ளார்கள். அதேபோல, இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பாதாளச் சாக்கடைத் திட்டம் மட்டுமல்ல; வடிகால் திட்டத்திலும் நடவடிக்கை எடுத்துள்ளார்கள். கடந்த தி.மு.க. ஆட்சியிலே அந்தத் திட்டம் எடுக்கப்பட்டு, திட்டப் பணிகள் சரியாக முடிவடையாமல் இருந்தன. ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு முடிவடையாமல் இருந்த அந்தப் பணிகளுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்த நிதியோடு 250 கோடி ரூபாய் நிதியையும் தாயுள்ளத்தோடு வழங்கி, அந்தத் திட்டமும் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டங்கள் எல்லாம் முடிவடையும்போது, குடிநீர் வழங்கக்கூடிய அந்தத் திட்டமும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்**: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, நான் பல நாடுகள் சென்று பல அதிசயங்களைப் பார்த்திருக்கிறேன். கன்னிப் பேச்சு பேசுகிற எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பேச்சினிடையே ஆளுங்கட்சி உறுப்பினர் clarification கேட்கிற நிகழ்வினை நான் இதுவரையிலும் பார்த்ததில்லை. சரி; ஏதோ எனக்கு ஒரு நம்பிக்கை. மாண்புமிகு முதலமைச்சருக்கு எல்லா மொழிகளும் தெரியும்; எல்லா கருத்துகளும் தெரியும். அதனால் இந்த அவைக் குறிப்பைப் படிக்கும்போது, அவர்களுக்கு நன்றாக தெரிந்துபோகும். நான் சொன்ன point-க்கும், அவர் கேட்ட clarification-க்கும் சம்பந்தம் இல்லை என்பது அவர்களுக்குத் தெரியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு அவ்வளவு ஞானம் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) Given the limited time I have, I would like to address only two issues in detail today. I speak not as a partisan.

நான் மூன்று நிமிடங்களுக்குப் பேசியிருக்கிறேன். எங்களுடைய குடும்பப் பாரம்பரியம் என்ன? நான் யார்மீதும் குற்றச்சாட்டு

சொல்ல வரவில்லை. நான் வெறும் கணக்கை எடுத்துச் சொல்வதற்குத்தான் வந்திருக்கிறேன். நான் பேசுவதற்கே இதுபோன்று நீங்கள் விடவில்லையென்றால், எப்படி சார் இந்தச் சபையில் பேச முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை; இப்போது உங்களைப் பேசுவதற்குத்தானே நான் permit செய்திருக்கிறேன். நீங்கள் பேசுங்கள்.

*பிற்பகல் 1-55*

**THIRU PALANIVEL THIAGA RAJAN:** Hon’ble Speaker Sir, I have with me here a simple analysis of the State Budget. I have just cut and paste 6 years of State Budget into a spread sheet. I urge you to verify the accuracy of these numbers and place them on the record as read. These numbers show a very clear story. This Government which had very strong fiscal responsibility for the first 3 years, over the last 2 years has fallen by the wayside and has increased the revenue deficit pretty substantially not by design, but by execution. That is to say, the Budgets have always said that we will meet revenue expenses with revenue income. However, as pointed out by my colleague, the own revenues from taxes every year dropped by 20 per cent. This was not the case in 2011-12, not the case in 2012-13, not the case in 2013-14 when this same Government was in power and it knew how to do the estimates well, then. (Interruption) How is it that, it now doesn’t have the capacity to get the estimates correctly? (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இதுமாதிரி பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) இவ்வாறு நீங்கள் பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) முறையில்லாமல் பேசுகிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்; உறுப்பினர்கள் அவரவர்களுடைய இடத்திற்குச் சென்று உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சென்று உட்காருங்கள். (குறுக்கீடு) வார்த்தைகளை நாகரிகமாகப் பேசவேண்டும். நாகரிகம் இல்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடு) நாகரிகமாகப் பேசவேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் பேசியதற்கு, திரு. பாண்டியராஜன் அவர்கள் clarification கேட்டார். அவர் clarification கேட்பதற்கு அவரும் ஒப்புக்கொண்டு, திரு. பாண்டியராஜனும் பேசினார். இப்போது திரும்பவும் திரு. பழனிவேல் தியாக ராஜன் பேசியதில், சின்ன clarification

கேட்பதற்காக அவர் எழுந்திருக்கிறார். விவாதம் ஆரோக்கியமாகத்தானே போய்க்கொண்டிருக்கிறது? (குறுக்கீடு) நான் சொல்வது என்னவென்றால், உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் பேசியதற்கு, திரு. பாண்டியராஜன் அவர்களும் ஆரோக்கியமாகத்தான் clarification கேட்டார். அதற்குப் பதிலை திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார். நல்ல ஆரோக்கியமான விவாதம் போய்க்கொண்டிருக்கும்போது, நீங்கள் ஏன் குறுக்கீடு செய்கிறீர்கள்? திரு. பாண்டியராஜன் அவர்களும் ஓர் உறுப்பினர்தானே? அவர் பேசுவதில் உங்களுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது? (குறுக்கீடுகள்) அதில் என்ன கஷ்டம் இருக்கிறது? திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் பேசினார்; திரு. பாண்டியராஜன் clarification கேட்கிறார். அதற்கு, திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்களும் பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார். நீங்கள் ஏன் குறுக்கே தடுக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) நீங்கள் ஏன் தடுக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) நீங்கள் தடுக்காதீர்கள். விவாதம் நல்ல ஆரோக்கியமாகப் போய்க்கொண்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்) முதலில் உங்களுடைய உறுப்பினர்களை அவரவர் இடத்திற்குப் போகச் சொல்லுங்கள். (குறுக்கீடு) முதலில் உங்களுடைய உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த மாமன்றத்தில் புதிய உறுப்பினர்கள் பேசுகிறபோது, குறுக்கிடுவது இல்லை என்பது ஒரு மரபு. நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டால், (குறுக்கீடு) சற்று பொறுமையாக இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார். ஆனாலும், தவிர்க்கமுடியாத நேரத்தில் புதிய உறுப்பினர் பேசினாலும் மாண்புமிகு அமைச்சர்கள் குறுக்கிடுவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. நான் அதற்கு மறுப்பு சொல்லவில்லை. நீங்களும் யாராவது ஓர் உறுப்பினர் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டாலும் அல்லது பேசுவதற்கு வாய்ப்புக் கேட்டாலும், வாய்ப்புக் கொடுப்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. அதையும் நான் மறுக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியராஜன் அவர்கள் நிறைய விஷயங்கள் தெரிந்த ஒரு நல்ல நண்பர் என்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. (குறுக்கீடுகள்) திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் இந்த

அவைக்குப் புதியவர். அவர் என்ன சொல்கிறார் என்று கேட்டுவிட்டு, அமைதியாக இருந்தபிறகு, அவர் ஆயிரம் கேள்விகள் கேட்கட்டும்.

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. துரைமுருகன்:** அதற்குப் பின்னர் நீங்கள் பதில் கொடுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால், ஒரு புதிய உறுப்பினர் பேசும்போது இதுபோன்று அடிக்கடி குறுக்கிடுவது நியாயம்தானா என்பதைத் தங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு இந்தச் சபையில் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்திக்கொண்டிருக்கிறார். இடையில் ஓர் உறுப்பினர் clarification என்ற முறையில் பேசுகிறார். (குறுக்கீடு) நல்ல ஆரோக்கியமாகப் போய்க்கொண்டிருக்கிற இந்த விவாதத்தில், நீங்கள் ஏன் இப்படி குறுக்கிடுகிறீர்கள்? (குறுக்கீடு) திரு. பாண்டியராஜன் அவர்கள் நன்றாகத்தான் கேட்கிறார். (குறுக்கீடு) விவாதம் நன்றாகப் போகட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர்கள் விளக்கம் சொல்வது என்பது வேறு; clarification-ஐ ஓர் உறுப்பினர் கேட்பது என்பது வேறு. ஆகவே, அந்த clarification-க்கு அவரும் பதில் சொன்னார். இரண்டு உறுப்பினர்களும் நன்றாகத்தான் பேசிக்கொள்கிறார்கள். இடையில் நீங்கள் ஏன் குறுக்கிடுகிறீர்கள்? (குறுக்கீடு) இவர் கேட்கிற கேள்விக்கு அவர் பதில் சொல்கிறார். நல்லவிதமாக, ஆரோக்கியமாக விவாதம் போய்க் கொண்டிருக்கிறது. நீங்கள் ஏன் குறுக்கிடுகிறீர்கள்? (குறுக்கீடு) விவாதம் நல்ல ஆரோக்கியமாகப் போகட்டும்; உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பாண்டியராஜன், என்னவென்று கேளுங்கள். (குறுக்கீடு) விவாதம் நல்ல முறையில் போய்க்கொண்டிருக்கிறது. நீங்கள் ஏன் கெடுக்கிறீர்கள்? (குறுக்கீடு)

**THIRU. K. PANDIARAJAN:** In the speech, what he began with is that, there is a gap between the intention and the result, and he says, the gap between the intention and the result is purely due to the execution issue. What he went on to say is that, the own revenue income of Tamil Nadu. (Interruption)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்களுக்கு பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) நிற்காதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. க. பாண்டியராஜன்:** வருமானத்திலே இரண்டு வகைப்படும். அதில் வரி வருவாய், வரியல்லாத வருவாய் ஆகிய இரண்டும் சேர்ந்து மாநிலத்தின் சொந்த வருவாய் என்பது 20 சதவிகிதம் கடந்த இரண்டு வருடங்களில் குறைந்தது என்று record செய்கிறார். அதைப்பற்றி அவருக்கே தெரியும். மாநிலத்தின் சொந்த வருவாய் என்பது உயர்ந்துகொண்டே சென்றது. கடந்த இரண்டு வருடங்களிலும் உயர்ந்தது. அந்த இடத்தில் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டதற்குக் காரணங்கள் என்னவென்றும் நாங்கள் சொல்லியிருக்கிறோம். நீங்கள் சொன்ன intention and execution gap is not responsible for it. You know that there are external factors which are responsible. But what you spoke here was that the own revenue income of Tamil Nadu went down by 20%, which is completely not in line with truth. மாநிலத்தின் சொந்த வருவாய் என்பது கணிப்புகள் என்ன இருந்தாலும் சரி, திருத்த மதிப்பீடுகளில் ரூபாய் 95 ஆயிரத்து 468 கோடி வருமானம் ஈட்டப்பட்டது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். Clarification முடியட்டும். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள்; வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) நீங்கள் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன்.

**திரு. க. பாண்டியராஜன்:** தமிழகத்தில் சொந்த வருவாய் உயர்ந்தது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தில்தான். வரியில்லாத வருமானம் 7 சதவிகிதமாக உயர்த்தப்பட்டதும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசாங்கத்தில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சருடைய பதிலுரை வெள்ளிக்கிழமை காலைதான். ஆனால், திரு. பாண்டியராஜன் அவர்கள் இப்போது பதிலுரை ஆற்றிக் கொண்டிருக்கிறாரா என்பதுதான் எங்களுடைய கேள்வி. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டியதை அவர் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை கிடையாது. Clarification-தான். (குறுக்கீடு) திரு. பழனிவேல் தியாக ராஜன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. பழனிவேல் தியாக ராஜன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய native place தேனியிலிருந்து வரும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் என் குடும்பத்திற்கு வேண்டியவர். எனக்கு அவர்மேல் எந்தக் குறையும் இல்லை. நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், நான் கேட்கிற கேள்விக்கும், அவர் சொல்கிற பதிலுக்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது. State revenue drop ஆகிறது என்று நான் சொல்லவே இல்லை. நான் என்ன சொன்னேன் என்றால், 2015-2016 Budget-ல் present செய்த figure-க்கும், வந்த figure-க்கும் 20% குறைந்தது என்று நான் சொல்லவில்லை. Overall figure குறைந்தது என்று நான் சொல்லவில்லை. Overall figure increase ஆகியிருக்கிறது என்று சொல்கிறேன். நான் என்ன சொன்னேன் என்றால், Revenue increase ஆகியிருக்கும் அதே நேரத்தில், செலவும் அதிகமாகியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். நான் அரசியல்வாதி என்ற ரீதியில் பேசவில்லை; நான் கணக்குப் போட்டிருக்கிறேன். 234 பேரும் ஒரே கட்சியாக இருந்தாலும், கணக்கு கணக்குதான்; நீங்கள் கணக்கை மாற்றிவிட முடியாது. நான் இதுவரைக்கும் எந்தத் தவறையும் சொல்லவில்லை. கணக்கை நான் சொல்லியிருக்கிறேன். யாருக்கெல்லாம் படிக்கத் தெரியுமோ, கணக்குப் போடத் தெரியுமோ—அதெல்லாம் உண்மைதான். அதெல்லாம் மாற்ற முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் எதையுமே தவறாகச் சொல்லவில்லை. ஒரேயொரு குறள் சொல்கிறேன்.

> "ஆகுஆறு அளவுஇட்டிது ஆயினும் கேடுஇல்லை
> போகுஆறு அகலாக் கடை."

இந்த வழியில் நான் வேறு எந்தத் தவறும் சொல்லாமல் சொல்கிறேன். இப்போது ரூபாய் 2 இலட்சத்து 52 ஆயிரத்து சொச்சம் கோடி கடன் வைத்திருக்கிறோம். In effect, for a population of about 72 million people, that amounts to about 35,000 rupees of debt for every man, woman and child who resides in the State, and that number is up from under Rs.15,000/- in 2011. But, I am not one who suggests that all debt is bad. I understand that, in a developing economy you have to finance investment with debt. But where we have a problem is that, we are financing revenue deficits with debt and not financing investment with debt.

Hon. Speaker, I refer to this report which is available on the RBI's website and I am happy to put it on the record for you, which is called "State Finances: A study of Budgets of 2015-2016". This report says many good things about Tamil Nadu. I am not here only to make complaints. It says many good things about Tamil Nadu. But, what it clearly says is that, in following with macro-economic principles, those States which see an increase in interest payments as a proportion of revenue and those States that favour revenue spending compared to capital spending will consequently see a reduction in future growth. My concern is, we used to be a State that did not have these two problems.

*பிற்பகல் 2-05*

In the last two years we have developed these two problems. I understand there are extraneous circumstances; I understand that the global economy is at risk. But I would suggest that the global economy is no worse today that it was during the great financial crisis of 2008-2009 when my own company Lehman Brothers went bankrupt. I know something about finance and global crises. I would suggest that unless we correct this as quickly as possible, we are going to find ourselves leaving our children ever increasing debt.

I had a lot of things to say, Hon'ble Speaker, about how the Dravidian ethos has actually added value. But given the ruling party does not like me to speak, I am going to skip through most of my comments. What I really had to say was positive about many of the Chief Minister's schemes and many of the plans that are historically called freebies by other people, but I will argue that they are actually developmental projects. But if you must insist on disrupting me every time because you have three more people to speak, I would conclude my comments now with just one point.

We are reminded multiple times everyday how after 32 years this party has come back to ruling power and how great an achievement it is. It is a fact, and because it is a fact it doesn't require repeating ten times everyday. We all understand that fact, but surely the benefit of having the luxury of 10 years of continuous governance in a democracy which otherwise forces the Government to take policies based on short term elections, the luxury of being able to say that I am here for 10 years, allows you to make courageous decisions. Even if they are unpopular

decisions you must make courageous decisions. So, I request the Hon'ble Chief Minister to use the opportunity that the people have given her of having 10 years of power to do what is right, not just what is popular, in terms of controlling debt and not allowing this to spiral further out of control.

I would humbly suggest that for Visionary leaders they must be as concerned with how their achievements will be viewed by posterity, by future generations to come, rather than just by these around us today.

எனது தொகுதிக் கோரிக்கைகளை தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நடவடிக்கைக் குறிப்புகளில் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

மதுரை நகரில் பெரும்பாலான பகுதிகளில் சமீப காலமாக குடிதண்ணீருடன் சாக்கடை நீரும் கலந்து வருகிறது. இதனால், மஞ்சள் காமாலையும், காய்ச்சலும் வந்து மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, குடிதண்ணீரில் சாக்கடை நீர் கலப்பதைத் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் தண்ணீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, அங்குள்ள பெரிய கண்மாய்களான வண்டியூர் கண்மாய், மாடக்குளம் கண்மாய், தென்கால் கண்மாய், செல்லூர் கண்மாய் போன்ற கண்மாய்களை ஆழப்படுத்தி, வருடம் முழுவதும் தண்ணீர் தேக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் டி.வி.எஸ். நகர், பழங்காநத்தம் மற்றும் வெங்கடாசலபுரம் பி.பி. ரோட்டில் இணைப்புப் பாலப் பணிகள் 2009 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, பாலத்தின் இரு பகுதிகளிலுள்ள பணிகள் முடிவடைந்தன. இதர பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன. மேற்படி பணிகளை உடனே தொடர்ந்து, அந்தப் பாலம் பொது மக்களின் பயன்பாட்டிற்கு வருவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மற்றும் கோவையிலுள்ள கூட்டமைப்புகளின் சந்திப்புக் கூட்டங்கள்போல, மதுரையில் சந்திப்புக் கூட்டங்கள் நடத்திட, போதுமான வாகன நிறுத்தும் வசதியுடன் கோவையிலுள்ள கொடீசியா (CODISSIA) அமைப்பு போல ஓர்

அமைப்பை மதுரை நகரில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை நகரில் 4, 5 ஆண்டுகளாகப் பராமரிக்கப்படாமலிருக்கும் அருள்தாஸ்புரம், நேரு நகர், அபிமன்னார் சந்து, திடீர் நகர், விவேகானந்தர் ரோடு ஆகிய இடங்களிலுள்ள சமுதாயக்கூடங்களைப் பழுதுபார்த்து, பராமரித்து, பொது மக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்த்திட, ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள கோரிப்பாளையம் தேவர் சிலைப் பகுதியிலும், காளவாசல் பகுதியிலும் மேம்பாலங்கள் அமைத்திட நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை நகரில் கடந்த 4, 5 ஆண்டுகளாக மக்கள் பெருக்கம் மிகுந்த குறுக்குச் சாலைகள் பராமரிக்கப்படாமல், குண்டும் குழியுமாக உள்ளன. இதனால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, மேற்படி அனைத்துச் சாலைகளையும் முழுமையாகத் தோண்டி எடுத்துவிட்டு, சாலைகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றத்தில் விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்டுள்ள துணை கோள் நகரத்தினை (Satellite city) மதுரையில் விரைவில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Hon’ble Speaker and fellow Members, I thank you for the opportunity and the courtesy, and I conclude my address.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கன்னிப் பேச்சு என்கிற காரணத்தினால், இடையிலே நான் குறுக்கிடவில்லை. மதுரை மாநகரத்திலே போக்குவரத்து நெரிசலைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். மதுரை மாநகரத்தில் இருக்கின்ற போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான் பல்வேறு

உயர்மட்டப் பாலங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து, யானைக்கால் வரை உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, ரூ.38 கோடி செலவில் அதற்குத் தேவையான 02.047 ஹெக்டேர் நிலத்தினைக் கையகப்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல, மதுரை மாநகரில் காளவாசல் சந்திப்பில் உயர்மட்டப் பாலம், இரண்டடுக்கு மேம்பாலம் ரூ.192 கோடி செலவில் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, தற்போது வடிவமைப்பு இறுதி செய்யப்படவுள்ளது. மேலும், மதுரை மாநகரத்தில் தேவர் சிலை அருகில் மேம்பாலம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, பாலத்தின் நேர்பாடு இறுதி செய்யப்பட்டு, வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு வருகிறது. பாலம் கட்டுவதற்குத் தேவையான நிலம் கையகப்படுத்துவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்லாமல், மதுரை மாநகரத்திற்கு நான்கு வழித்தட வெளிவட்டச் சாலை அமைப்பதற்கு 213.69 கோடி ரூபாயில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மதுரை மாநகரத்தில் இருக்கின்ற போக்குவரத்து நெரிசல் இந்தப் பாலங்கள் கட்டுவதன்மூலம் குறையும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 2-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியது கன்னிப் பேச்சு என்பதால் நான் இடையில் குறுக்கிடவில்லை. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்றதிலிருந்து, ஒவ்வோர் ஆண்டும் வரியின் மூலமாக வருகின்ற வருவாய் உயர்ந்துகொண்டுதான் இருந்தது. உதாரணத்திற்கு 2011-2012-ல் ரூ.59,517 கோடியிலிருந்த வருவாய் 2012-2013-ல் ரூ.71,254 கோடியாக உயர்ந்து, 2013-2014-ல்

ரூ.73,718 கோடியாக உயர்ந்து, 2014-2015-ல் ரூ.78,656 கோடியாக உயர்ந்து, 2015-2016 ஆண்டு முதல் நிலை கணக்குகளின்படி ரூ.80,477 கோடியாக உயர்ந்திருக்கிறது.

நாம் ஒரு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கின்றபோது, ஒரு இலக்கை நிர்ணயிப்போம். ஆண்டு இறுதியில், மார்ச் 30 ஆம் தேதி, நமக்கு வருகின்ற வருவாய், குறிப்பாக 90,000 கோடி ரூபாய் வருகிறது என்று இலக்கு நிர்ணயிப்போம். ஆனால், உலக அளவில் இருக்கின்ற பொருளாதார மந்த சூழ்நிலை; இந்திய அளவில் இருக்கின்ற பொருளாதார மந்த சூழ்நிலை போன்றவை தமிழ்நாட்டிலும் தொடர்ந்து பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு இக்கட்டான சூழ்நிலையின் காரணமாக, ஒவ்வொரு வருடமும் இலக்கை எட்ட முடியாத ஒரு சூழல் கடந்த மூன்று ஆண்டுகளாக நிலவி வருகிறது. இதற்குக் காரணம், பொருளாதார மந்த சூழல் என்பதனை நாம் அனைவரும் நன்றாக அறிவோம்.

அந்தவகையில்தான் ஒவ்வோர் ஆண்டும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, திட்டங்கள் வகுக்கப்பட்டு, அந்தத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம். சம்பளங்களை நாம் கொடுக்காமல் இருக்கமுடியாது; ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்காமல் இருக்கமுடியாது; வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு நாம் செலவழிக்காமல் இருக்கமுடியாது; சேவைத் துறைகளுக்கு, (குறுக்கீடுகள்) மக்கள் நலப் பணிகளுக்கு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்குவதாகச் சொல்லப்பட்ட நிதியை நாம் ஒதுக்காமல் இருக்கமுடியாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் முறையல்ல.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஆக, நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்ட நிதியை நாம் முழுமையாக ஒதுக்கியாக வேண்டும் என்ற கட்டாயத்தில் இருக்கும்போது, நாம் வெளியே கடன் வாங்கி அதை ஈடுகட்டவேண்டிய சூழ்நிலையில்தான் இருக்கின்றோம். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் முடித்துவிடுகிறேன். உதாரணத்திற்கு, நம்முடைய திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி, 90,691 கோடி ரூபாய் வருவாய் வரும் என்று நாம் எதிர்பார்த்து, திட்ட இலக்கு நிர்ணயம் செய்து, பல்வேறு திட்டங்களுக்கு நாம் நிதி ஒதுக்கி, நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறோம். இருக்கின்ற

பொருளாதார சூழ்நிலையைப் பொறுத்து, ஆண்டு இறுதியில் உயரும் அல்லது குறையும். தொடர்ந்து குறைந்து வருகின்ற காரணத்தினால், நமக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படுகிறது. அந்த நிதிப் பற்றாக்குறையைச் சரி செய்வதற்கு நாம் கடன் வாங்க வேண்டிய கட்டாயம், நிர்ப்பந்தம் ஏற்படுகிறது.

பொதுக் கடன் பற்றிய சில விவரங்களை சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அதாவது, நான் சொன்னதைப் போன்று வரி, வருவாய் increase-ல் இருக்கிறது. ஆனால், பொருளாதார மந்த சூழ்நிலை காரணமாக நாம் இலக்கை எட்ட இயலவில்லை. செலவை நாம் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆண்டு முதலில் நாம் அந்தச் செலவை வரையறுக்கிறோம். (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள் பேசி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இதனால் ஏற்படுகின்ற நிதிப் பற்றாக்குறையை, fiscal deficit-யை ஈடு செய்வதற்காக பொதுக் கடன் பெறுவது என்பது உலகிலுள்ள அனைத்து அரசுகளும் கையாளும் வழிமுறையாகும். இதில் தவறு இல்லை. வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் கடன் பெற்று, வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வது ஒரு சிறந்த வழிமுறை என பொருளாதார வல்லுநர்களும் கூறுகின்றனர். எனவே, கடன் பெற்று உள்கட்டமைப்பு போன்ற அசையா சொத்துகளை உருவாக்குவதாலும், கல்வி, சுகாதாரம், திறன் பயிற்சி போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி மனித வள ஆற்றலை மேம்படுத்துவதாலும், பொருளாதார வளர்ச்சி தூண்டிவிடப்படுகிறது. அத்தகைய பொருளாதார விரிவாக்கம் எதிர்காலத்தில் அதிக வருவாயைப் பெருக்கி, வருவாய் வரவுகளை அதிகரித்து கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு அது வழிவகுக்கிறது. காலப்போக்கில் கடன் நிலுவைத் தொகையானது, தொகை அளவில் உயர்ந்தாலும், பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து, மாநில அரசின் வருவாய் வரவுகளையும் அதிகரிக்கும்போது, அதைத் திரும்பச் செலுத்தும் திறன் அரசுக்குத் தானாகவே ஏற்படுகிறது. எனவேதான், வாங்கிய கடனை வட்டியுடன் தவணை தவறாமல் இவ்வரசால் திருப்பிச் செலுத்த முடிந்துள்ளது. இதில் கவனிக்கப்பட வேண்டியது, அத்தகைய திறனை எவ்வாறு மதிப்பிடுவது என்பதுதான். அதனால்தான் கடன்

அளவைவிட மாநில உற்பத்தி மதிப்பில் கடன் அளவு எவ்வளவு உள்ளது என்பது சரியான அளவுகோலாகக் கருதப்படுகிறது. மத்திய அரசும், பிற மாநில அரசுகளும் பொதுக் கடன் பெற்றுத்தான் மூலதனச் செலவினங்கள் உள்பட பிற செலவினங்களை மேற்கொள்கின்றன.

பிற்பகல் 2-15

உதாரணமாக மத்திய அரசின் 2016-2017 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், 2016-2017 ஆம் ஆண்டு இறுதியில் மொத்த நிலுவைக் கடன் 74.3 இலட்சம் கோடி அதாவது நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பில் 47.10 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. மொத்த கடன் நிலுவைக்கும், மொத்த மாநில உற்பத்தி மதிப்பிற்குமான விகிதாச்சாரம் 2015-2016 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளின்படி ஆந்திரப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் 28.20 சதவீதமாகவும், கர்நாடகத்தைப் பொறுத்தவரையில் 23.62 சதவீதமாகவும், கேரளத்தைப் பொறுத்தவரையில் 26.31 சதவீதமாகவும், நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் குறைந்த அளவாக 17.47 சதவீதமாகவும்தான் கணக்கிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து கடன் பெறுவதும், அதனைத் திருப்பிச் செலுத்துவதும் இயல்பானது. அனைத்து மாநில அரசுகளும், நாடுகளும் இம்முறையைத்தான் பயன்படுத்தி வருகின்றன. ஆனால் கடன்மூலம் செலவுகள் மேற்கொள்ளும்போது முக்கியமாக மூன்று கூறுகள் கவனத்தில் இருக்க வேண்டும். ஒன்று; பெறப்படும் கடன் முறையாக, பொருளாதார வளர்ச்சியைத் தூண்டக்கூடிய செலவினங்களுக்கு மட்டும் செலவிடப்பட வேண்டும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 2016-2017 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பெறப்படும் நிகரக் கடன் 40,529 கோடி ரூபாயாகும். இவற்றில் மூலதனச் செலவுகளுக்காக 22,363 கோடி ரூபாயும், கடன்கள் அளிப்பதற்காக 2,310 கோடி ரூபாயும், மூலதன மானியங்களுக்காக 11,400 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களுக்கான மானியங்கள், வீட்டு வசதித் திட்டங்கள், கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்களுக்கான மானியங்கள் மூலதன மானியங்களில் அடங்கும்.

இரண்டாவது கூறாகப் பெறப்படும் கடன் வகுக்கப்பட்டுள்ள வரையறைக்குள் இருக்க வேண்டும். தமிழ்நாட்டைப்

பொறுத்தவரையில் 2015-2016 திருத்த மதிப்பீடுகளின்படி, நிலுவைக் கடன் மாநிலத்தினுடைய மொத்த உற்பத்தி மதிப்பில் 17.47 சதவீதமாகவும், 2016-2017 ஆம் ஆண்டில் திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி 18.43 சதவீதமாகவும் மதிப்பிடப்பட்டு, நமக்கு வகுக்கப்பட்டிருக்கின்ற வரையறையான 25 சதவீதத்தைக் காட்டிலும் மிகவும் குறைந்த அளவிலேயே அது உள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த அளவுக்கு கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 2010-2011-ல் 17.33 சதவீதமாகவும், 2009-2010-ல் 18.53 சதவீதமாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது கூறாக வட்டி செலுத்துதல் சரியான முறையில் தவறாது செலுத்தப்படுகிறதா என்பது. இதனைப் பொறுத்தவரையிலும், நமது மாநிலம் இதுவரை எல்லாத் தவணைகளையும் உரிய நேரத்தில் செலுத்தி வந்துள்ளது. நிதி நிலை மற்றும் கடன் நிலை கட்டுப்பாட்டிற்குள் இருந்தாலும், தொடர்ந்து நிலவும் பொருளாதார மந்த நிலை ஒரு சவாலாகவே உள்ளது. இதுவரை இருந்திடாத அளவிற்கு மூன்றாண்டுகளுக்கு மேலாக இத்தகைய நீண்ட பொருளாதார மந்த நிலை இருந்து வருவதால், வருவாய் வரவுகள் வளர்ச்சியில் தொய்வு காணப்படுகிறது. இதனால் ஏற்படும் இடைவெளியை சரி செய்ய மாநில அரசு கடன் பெறுவதைத் தவிர வேறு வழி இல்லை. இரண்டாவதாக, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கடனை நிதி நிலை சீரமைப்புத் திட்டத்தின்கீழ் தமிழக அரசு தனது கடனாக ஏற்றுக்கொண்டதன் காரணமாகவும் ஏற்பட்ட கூடுதல் கடன் சுமை மற்றும் வட்டிச் சுமையும் மிக முக்கியமான ஒன்றாகும். இச்சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு மாநிலத்தின் நிதி நிலைமையை சீர் செய்து, மக்கள் நலத் திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அனைத்து முயற்சிகளையும் செய்யும். கடன் தொடர்ந்து வரையறைக்குள்ளாகவே கட்டுப்படுத்தப்படும். எனவே, மக்களிடையே தமிழ்நாட்டின் பொதுக் கடன் நிலை ஆபத்தான நிலையில் உள்ளதாக எடுத்துரைக்கப்படுவது ஒரு மிகைப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டாகும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்புணர்வுடன் நிதி நிலைமையைப் பராமரித்து வருகின்றது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 2-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன், என்ன சொல்லுங்கள்.

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு clarification Sir. The Hon'ble Finance Minister says, that the great portion of spending is on salaries and pensions. However, between 2011-2012 and today, salaries and pensions have only risen by about 55% to 60%. On the other hand, the subsidies and transfers have risen by 130%. So I think it is not an excuse to say that most of the excess spending comes from salaries and pensions.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்களும், தற்போது பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் தமிழகத்தின் வருவாய் குறைந்துவிட்டதென்று கூறினார்கள். அவர்களுடைய ஆட்சியில் அந்த வருவாய் இழப்பு எப்படி ஏற்பட்டது என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். தார்ச் சாலை அமைத்திருந்தால் தமிழகத்திற்கு அதிக வருவாய் வரி மூலமாகக் கிடைத்திருக்கும் என்று சொன்னார்கள். மெட்ரோ இரயில் ஒப்பந்தம் போடுகின்றபோது, அப்போது இங்கேயும் அவர்களுடைய ஆட்சி; மத்தியிலும் அவர்களுடைய ஆட்சி. மத்திய அரசுக்குத் தேவையான அனைத்து வரி வருவாய்களும் சென்றுவிடும். ஆனால் தமிழகத்திற்கு வரவேண்டிய வரிவருவாய் அனைத்தையும் தள்ளுபடி செய்து விடுகிறோம் என்று சொல்லிப் போட்ட ஒப்பந்தம்தான் இவர்களுடைய ஒப்பந்தம். இவர்கள் வருவாய்க் குறைவைப் பற்றி கூறுகிறார்களே, இப்போது தார்ச் சாலை அமைப்பதில் வரி வருவாய் குறைந்துவிட்டது என்று சொல்கிறீர்களே, அப்போது மெட்ரோ இரயில் திட்டத்தில் 14,600 கோடி ரூபாய் வரி வருவாய் வந்திருந்தால், தமிழகத்திற்கு எவ்வளவு வரி வருவாய் வந்திருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள். சத்தமாகப் பேசுங்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்நாள் முழுவதும் திவாலான Lehman Brothers நிறுவனத்தில் உழைத்தவன் நான். அதனால் ஒரு மாநிலம் திவாலை நோக்கிச் செல்லும்போது, 'நான் நன்கறிவேன்' என்ற வார்த்தையை பதிவு செய்ய விடக்கூடாது. ஏனென்றால், அது மிகப் பெரிய விஷ வார்த்தை. எனது கருத்து, அவர் Lehman Brothers-ல் வேலை செய்திருக்கலாம். அமெரிக்காவையே திவாலுக்குப் பக்கத்தில் கொண்டுபோன Lehman Brothers-ல் பணிபுரிந்தேன் என்று இந்த இடத்தில் பதிவு செய்கிறார். (குறுக்கீடுகள்) ஆனால், தமிழக அரசாங்கத்திற்கும், திவாலுக்கும் சம்பந்தமே கிடையாது. ஏனெனில், அந்த இடத்தில் நிதிநிலைமை பொறுப்புடைமைச் சட்டம், இந்த வருடமும் 2.96 percent-ல் வைத்து நிறைவு செய்திருக்கிறோம். அடுத்த வருடம் 3.24 போகப்போகிறது என்று சொல்வதற்குக் காரணம், 7th Pay Commission-உடைய பரிந்துரைப்படி 30 percent நமது ஊழியர்களுக்கான wages அதிகமாகப் போகிறது; 35 percent pension அதிகமாகப் போகிறது; அதற்கான provisions கொடுத்திருக்கிறோம். அதைத்தான் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் கடைசியாக சொன்ன கருத்து, ஊதியம் கூடவில்லை; பென்ஷன் கூடவில்லை; இந்த அளவிற்கு என்று சொன்னீர்கள். நீங்கள் கூறிய subsidies / நலத் திட்டங்கள். ரூ.68,113 கோடி நிதி ஒதுக்கீட்டில் இன்றைக்கு 30-க்கும் மேற்பட்ட நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அதனால்தான் கூடியிருக்கிறது. நீங்கள் 121% subsidy கூடியிருக்கிறது என்று சொல்கிறீர்கள்; உண்மைதான். நீங்கள் சொன்னதுபோல், அந்த மானியங்கள் மக்களுக்கு நேரடியாக செல்லக்கூடிய Direct Benefit Transfer Schemes-களுக்கான நிதி. நீங்கள் முதலில் பேசும்போது மாண்புமிகு அம்மா அவர்களின் நலத் திட்டங்களை விரும்புவதாகச் சொன்னீர்கள்; 'அது நல்ல விஷயம். அனைவரும் சொல்வதுபோல் இலவசங்களுக்கு நான் எதிரி கிடையாது' என்றும் சொன்னீர்கள். அந்த விலையில்லாத் திட்டங்களுக்காகத்தான் ரூ.68,111 கோடி கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் சொல்கிற 121% வளர்ந்தது நிஜம். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற விஷயம், நிதிநிலைமை பொறுப்புடைமைச் சட்டத்தை நாங்கள் இதுவரை மீறவில்லை. அடுத்த வருடத்தில், அதில் ஒரு amendment மட்டும் கொண்டு வரப்போகிறோம் என்று

*சொல்லியிருக்கிறார்கள். இது சட்டத்தால் ஒப்புக்கொள்ளப்படும் ஒரு விஷயம்தான். மத்திய அரசாங்கமே இதனை மாற்றியமைக்க முயற்சிகள் எடுத்துவருகிறது. (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது,* subsidy and grants *அதிகரித்துள்ளது என்ற கருத்தையும், மூலதன மானியம் வழங்கியதும்தான் காரணம் என்று குறிப்பிட்டிருக்கிறார். பல வளர்ச்சித் திட்டப் பணிகள். . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *உட்காருங்கள் நீங்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *நான் பேசுவதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* subsidy and grants *அதிகரித்துள்ளதன் காரணம் பல வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கும் மானிய உதவிதான் வழங்கப்படுகிறது. எனவேதான்* subsidy and grants *கூடியிருக்கிறது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன் சரஸ்வதி அவர்கள். (குறுக்கீடுகள்) ஏதாவது சொல்ல வேண்டுமா?*

*பிற்பகல் 2-25*

**திருமதி பொன். சரஸ்வதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, கொஞ்சம் இருங்கள் (குறுக்கீடு) உங்களுக்குத்தான் நான் நிறைய வாய்ப்புகள் கொடுத்திருக்கிறேனே! மீண்டும் என்ன? (குறுக்கீடு) சரி, சீக்கிரம் சொல்லுங்கள்.*

**திரு. பழனிவேல் தியாக ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். ஒரு மணி நேரத்திற்கு முன், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்*

7-வது Pay Commission-க்கு இதுவரை குழுவே அமைக்கவில்லை, எப்படி நிதியை ஒதுக்க முடியும் என்று கூறினார். பின் வரிசையில் இருக்கும் உறுப்பினர் ஒருவர், ஏற்கெனவே நிதி ஒதுக்கப்பட்டுவிட்டது என்று சொல்கிறார். எது உண்மை என்பதைச் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான்தான் பேசப் போகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் கேட்டதற்கு, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதில் சொல்லட்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் சொல்லிய கருத்தினுடைய உட்கருத்து, 2017-2018-ல் 3.36 சதவிகிதம் Fiscal deficit-ல் வரையறுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுக் காட்டினார். தொடர்ந்து அடுத்தாண்டு வரப்போகின்ற 7-வது சம்பள கமிஷனில் அது உயர்வதற்கு வாய்ப்பு இருக்கிறதென்ற கருத்தோடுதான் அவர் சொன்னார் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) நிறைய பேசியாகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடு) இது சம்பந்தமாக நிறைய பேசியாகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்து பெண் உறுப்பினர் பேச வேண்டும்; உட்காருங்கள்.

**திருமதி பொன். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பின்னர் பேசலாம், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் பேச ஆரம்பித்தாகிவிட்டது.

***திருமதி பொன். சரஸ்வதி:** அரசியல் சிகரமே, அன்பின் அகரமே, இயக்கத்தின் ஆதாரமே, எளிய அமைதியின் வடிவம், வசந்த

கால பூக்கள் எல்லாம் அசந்து போகும் புன்னகை தவழும் அழகு முகம்; கம்பீரமான சிங்கப் பார்வை கொண்ட நெஞ்சினிக்கும் அமுதத் தாய்; வானை மிஞ்சி நிற்கும் புகழ் தமிழ் தாயே! அறிவுலக மேதையரும், அடிபணிந்து ஞானம் பெறும் கருத்துநிறைப் பெட்டகமே; தவ வாழ்வின் மகத்துவத்தை தரணி அறிய தடம் அமைத்து 'மக்களால் நான், மக்களுக்காக நான்' என்று வாழ்ந்து மங்காப் புகழ் படைத்துவரும், மாதவம் செய்து இம்மாநிலம் பெற்ற மாசறு பொன்னே! (மேசையைத் தட்டும் ஒலி)

ஆற்றல், தெளிவு, தைரியம் இவற்றைக் கொண்ட தமிழகத்திற்கு, 'அமைதி, வளம், வளர்ச்சி' தந்து, வான் எட்டும் புகழெல்லாம் தமது தாள் ஒற்றி சுழலச் செய்திடும் வாழும் தெய்வமே! கருணைத் தாயே, தூரத்தே உள்ள நிலவு அதன் சாரத்தை ஒளியாய் தருவதுபோல், புரட்சித் தலைவரின் இரத்தத்தின் இரத்தமான உடன்பிறப்பே என்று தொண்டர்களை அழைத்து ஏழு பிறப்பும் எழுச்சிபெறும் பாச உணர்வை ஊட்டி வரும் அன்புத் தாயே! சுவாசிக்கும் நிதப்பொழுதும், நெஞ்சம் வாசிக்கும் திருமறையே, நின் பாதம் பட்ட திசை வணங்கும் பாக்கியம் கிட்டாதா என காத்திருந்த எனக்கு, பரம்பொருளே, நீர் கோலோச்சும் கோட்டையிலே, உமை வணங்கும் மாபாக்கியம் கிடைத்தது என் பிறவிப் பெரும்பயனே, வணங்குகிறேன் தாயே! என் வாழ்வனைத்தும் நின் பாதம் சமர்ப்பிக்கிறேன்.

ஓங்கு புகழ் திருவடிவே, நின் ஒப்பற்றத் தலைமையின்கீழ் ஜீவ நதியாய் தமிழ்நாட்டினை வளப்படுத்திவரும் நம் கழகத்தின் கடைக்கோடி சாதாரண உறுப்பினராய் விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, வார்டு கழகத் துணைச் செயலாளராகவும், நகர மகளிர் அணிச் செயலாளராகவும், மாநிலப் பொதுக் குழு உறுப்பினராகவும், அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவராகவும், நகர மன்றத் தலைவராகவும், தற்போது சட்டமன்ற உறுப்பினராகவும் வாய்ப்பளித்தமைக்கு நானும், என் குடும்பமும் இறுதி மூச்சு உள்ளவரை நன்றிக் கடன் செலுத்தக் கடமைப்பட்டிருப்போம், தாயே! என்னை வெற்றி பெறச் செய்த திருச்செங்கோடு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாபெரும் வெற்றிக்காகப் பிரச்சாரம் செய்த எங்கள் குடும்ப தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியை பொற்பாதங்களில் சமர்ப்பித்துக்கொள்கிறேன், தாயே! (மேசையைத்

தட்டும் ஒலி) அம்மா! நீங்கள் சென்ற திசைகளில் எல்லாம் வெற்றிகள் வந்து குவிகின்றன. அம்மா! நீங்கள் நின்ற இடங்களில் எல்லாம் நியாயங்கள் பாதுகாக்கப்படுகின்றன, தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் இந்தியாவில் முதன்மை மாநிலமாக, தலைநிமிர்ந்து விளங்கிட 2016-2017 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட திட்டங்கள் யாவும் தமிழக வரலாற்றில் கல்வெட்டுக்களாய் அல்ல, பொன்வெட்டுக்களாய் புகழ்பெறும் திட்டங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவை மக்களின் உள்ளங்களில் வெள்ளிமலையாய் மின்னுகின்றன.

6-வது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்ற அன்றே புனித ஜார்ஜ் கோட்டைக்கு வந்து, தேர்தல் சமயத்தில் அறிவித்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில், 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்' மனம் வாடிய வள்ளலாரும் இன்றிருந்தால், உம்மைப் பாடிப் புகழ்ந்திடும் வகையில், வேளாண் பெருமக்களின் நலன் காத்திட, கூட்டுறவு வங்கிகளுக்கு சிறு, குறு விவசாயிகள் செலுத்தவேண்டிய பயிர்க் கடன், நடுத்தரக் காலக் கடன் மற்றும் நீண்ட காலக் கடன் ஆகிய அனைத்தையும் தள்ளுபடி செய்து, உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் உழவர்களின் உரிமையை மீட்டெடுத்து விவசாய மக்களின் நலனைப் பேணிக்காத்தீர்கள், தாயே!

பிற்பகல் 2-30

இடர்களையும், தடைகளையும் முறியடித்து - வெற்றி சுடரொளியைப் படர விடும் எம்குல விளக்கே. மின்சாரம் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் மிகவும் அத்தியாவசியமான ஒன்று என்பதைக் கணக்கிட்டு, 100 யூனிட் மின்சாரம் கட்டணம் எதுவும் இல்லாமல் வீடுகளுக்கு வழங்குவதற்கு ஆணையிட்டீர்கள், தாயே! நாட்டின் எல்லா வளர்ச்சிப் பணிகளுக்கும் மின்சார சக்தியின் அத்தியாவசியத் தேவையை அறிந்து, தனது ஒப்பற்ற ஆளுமைத் திறத்தால் தமிழகத்தை மின் மிகை மாநிலமாக மாற்றியமைத்த தாயே, கோடி நன்றி மலர்களை உங்கள் பாத திருவடிகளில் சூடி வணங்குகிறேன், தாயே!

நாட்டின் சமூக முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக இருக்கின்ற பெண்கள் சார்ந்த அளப்பரிய திட்டங்கள் வகுத்து,

பெண்கள் வாழ்வு வளமடைய பொற்பாதை அமைத்திட்ட பொன்மனத் தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, ஏழைப் பெண்களுக்குத் திருமண நிதியுதவியாக வழங்கப்பட்டு வந்த 4 கிராம் தங்கத்திற்குப் பதிலாக ஒரு சவரன், அதாவது 8 கிராம் என உயர்த்தி ஆணையிட்டீர்கள், தாயே! மேலும், மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்திடவும், பெண்கள் சட்டங்கள் செய்திடவும், பட்டங்கள் வென்றிடவும், ஆண், பெண் என்ற ஏற்றத்தாழ்வில்லா சமுதாயம் அமைந்திட மாபெரும் சமுதாயப் புரட்சி ஏற்படும்வகையில் உள்ளாட்சி அமைப்புகளில் 50 சதவிகிதம் இட ஒதுக்கீடு என்ற மாபெரும் கொள்கை பிரகடனத்தை அறிவித்த தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) பெண்களுக்கான உங்களின் அற்புதத் திட்டங்களால் நாடே தங்களைத் திரும்பிப் பார்க்கிறது தாயே!

முத்தான திட்டங்களால் உங்களைப் போற்ற வார்த்தைகளின்றி பாதம் வணங்கி மகிழ்கிறேன் தாயே! “காலுக்குச் செருப்பில்லை; கால் வயிற்றுக்குக் கூழ் இல்லை வீணுக்கு உழைத்தோமடா” என்று நெஞ்சம் வெம்பி இருந்த நெசவாளர்கள் வாழ்வில், ஆட்சிக் கட்டிலில் வீற்றிருந்த காலமெல்லாம் சீரிய திட்டங்கள் வகுத்து, அவர்கள் வாழ்வில் விளக்கேற்றிய தாங்கள், தற்போது கட்டணமில்லாமல் வழங்கப்படும் கைத்தறிக்கான மின்சாரத்தை 200 யூனிட்டுகள் எனவும், விசைத்தறிக்கான மின்சாரத்தை 750 யூனிட்டுகள் எனவும் உயர்த்தி ஆணையிட்டீர்கள், தாயே!

இறைவடிவே - உமது அருளாட்சியில் இந்து சமய அறநிலையத் துறையில் ஒருகால பூஜை திட்டத்தின்கீழ் பன்னிரெண்டாயிரத்து ஐநூற்று நான்கு கோயில்களைப் பயன்பெறச் செய்தும், அன்னதானத் திட்டம் மற்றும் கோயில்களைப் புதுப்பித்தல் திட்டங்கள்மூலம் பக்தர்களின் நெஞ்சமெல்லாம் பால்வார்த்து அருளாசி வழங்குகின்ற தாயே!

ஆர்ப்பரிக்கும் கடல் அலையும், அடிபணிந்து தலைவணங்கும் மாதர் குல மணி விளக்கே! தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி உயர்ந்திடும் வகையில், உலக முதலீட்டாளர்கள் மாநாடுமூலம் இருபத்தி மூன்றாயிரத்து இருநூற்றி ஐம்பத்து எட்டு கோடி முதலீடுகள் வரப்பெற்று, நாற்பத்து எட்டாயிரத்து நூற்றி நாற்பத்தைந்து நபர்கள் வேலைவாய்ப்புப் பெற்றமைக்கு இளைஞர் சமுதாயமே உங்கள் பாதம் வணங்கி மகிழ்கிறது, தாயே!

வீணர்களை வீழ்த்தியும், தமிழகத்தை வென்றெடுத்தும் தர்மத்தை நிலைநாட்டிய நீதி தேவதையே! குடிசைகளில்லா கிராமம் மற்றும் நகர்ப்புறங்களை உருவாக்க தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவாறு, பல்வேறு திட்டங்களின்கீழ் பத்து இலட்சம் வீடுகள் ஐந்து ஆண்டுகளில் கட்டி முடிக்கப்படும் என அறிவித்து, குக்கிராமம்கூட நவீன நகரமாய் மாறிட நடவடிக்கை எடுத்துள்ள தாயே! நன்றிகள் கோடி கூறி வணங்குகிறேன். தாயே!

சிறப்பான எதிர்காலம் தங்களுக்கு நிரந்தரம் என்பதை நன்கு உணர்ந்து வரலாற்றுச் சிறப்பாய் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியைத் தொடர செய்த தமிழக மக்களின் வாழ்க்கையில் மிகச் சிறப்பான முன்னேற்றத்தைக் கொண்டுவரும் நோக்கத்தோடு பாடுபடும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நீர் வள ஆதாரங்கள் மற்றும் பாசனத் துறையில் செயல்படுத்திடும் திட்டங்களும், விரிவான வெள்ளப் பாதுகாப்புத் திட்டமும் சொல்லில் அடங்காத வளர்ச்சியின் வடிவங்கள் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை ஏழை எளியோர் சிகிச்சை பெற்று நலம் அடையும் வகையில் செயல்படுத்தி, அனைவருக்கும் சிறந்த செல்வமாய் ஆரோக்கிய வாழ்வை அளித்த அருட்பெரும் கருணைக் கடலே, நன்றி பல பாடி வணங்கி மகிழ்கிறேன், தாயே!

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்-2023 ஆவணத்தின்படி, இரண்டு கோடி நபர்களுக்குத் திறன் பயிற்சி அளிக்க மாநில திறன் மேம்பாட்டு இயக்கத்தை அமைத்த சீர்மிகு சிந்தனைகளின் வடிவே, உம்மை வணங்குகிறேன் தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிருவாகத்தில் வெளிப்படைத் தன்மையும், பொறுப்புடைமையும் அதிகரிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு எடுத்துவரும் பல்வேறு முயற்சிகளில் பொது சேவைகளை மக்களின் இல்லங்களுக்கே கொண்டு சேர்க்கும் அம்மா திட்டத்தையும் (மேசையைத் தட்டும் ஒலி) 24 மணி நேரத்தில் குறைகளைத் தீர்க்கவல்ல அம்மா அழைப்பு மையத்தையும், செயல்படுத்தச் செய்த மாண்புமிகு அம்மா, உங்களின் ஆளுமை புரட்சியுகத்திற்கான புது வடிவமாகும் தாயே!

கடும் போக்குவரத்து நெருக்கடியினைப் போக்குவதற்காக தொலைநோக்குத் திட்டத்துடன் நெடுஞ்சாலைத் துறையில் சாலைகளை அகலப்படுத்தவும், மேம்படுத்தவும் ரூபாய் இரண்டாயிரத்து எண்ணூறு கோடி ஒதுக்கீடு செய்து செயல்படும் அரசு என்பதைச் செயல்படுத்திய தாயுள்ளமே, தலைவணங்கி உங்கள் பாதம் பணிகிறேன் தாயே!

*பிற்பகல் 2-35*

ஆறரைக் கோடி தமிழ் மக்கள் வணங்குகின்ற அறம் காக்கும் அன்புத் தாயே! புதிய சரித்திர சகாப்தம் படைத்திட்ட சாதனையின் திருவுருவே! இன்னார்க்கு இதுவென்று இனம் கண்டு தந்தருளும் தன்னிகரில்லா தாயே! கேட்காமல் கொடுத்திடும் உங்கள் கொடைப் பெருமையை உலகறியும் தாயே! மாண்புமிகு அம்மா உங்களது கருணைப் பார்வைக்குப் பாதம் பணிந்த எனது வேண்டுகோள் தாயே! ஈராயிரம் ஆண்டுகள் திருக்கொடி மாடஞ் செங்குன்றூர் எனும் பழம் பெருமைபெற்ற தெய்வத் திருத்தலமாம் திருச்செங்கோட்டில் சுமார் ஐநூறு ஆண்டுகள் கடந்த உற்சவத் திருத்தேர்களைப் புனரமைப்பு செய்தும், தேரோட்டம் சிறப்புற நடைபெறவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன், தாயே! தமிழகத்தை ஆட்சி செய்து, தமிழகத்தை உலகத்திற்கே முன்னுதாரணமாக்கி, மங்காப் புகழ்பெறச் செய்யும் மனிதர் குல மாணிக்கமே! திருச்செங்கோடு தொகுதிவாழ் மக்கள் சார்பாக நன்றி மலர்களை உங்கள் பொற்பாதங்களில் பணிந்து சமர்ப்பித்து வணங்குகிறேன், தாயே! பொன் மலர் வாசம் பெற்றதுபோல் பொன்விழா கண்ட இந்தச் சட்டமன்றம் உங்களால் வரலாற்றுச் சிறப்பு பெற்றிருக்கும் இவ்வேளையில், இம்மாமன்றத்தில் பேசுவதற்கு நல்ல வாய்ப்பளித்தமைக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு கோடானு கோடி நன்றியினை உயர் பணிந்து தெரிவித்து, பொற்பாதம் வணங்கி, உரை முடித்து, நன்றியைப் பதிவு செய்து விடைபெறுகிறேன் தாயே! நன்றி! வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (26-7-2016) செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2-36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

# 4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*7. பள்ளிக் கல்வித் துறையினால் 6-7-2007 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட* II(2)/SE/360(f2)/2007 *ஆம் எண் அறிவிக்கைக்கு சட்டவிதிகள் ஆய்வுக் குழு அளித்துள்ள பரிந்துரையின் அடிப்படையில் திருத்தம் செய்தது குறித்து 16-12-2015 ஆம் நாளிட்ட பள்ளிக் கல்வித் (பக5(1)) துறையின் அரசாணை (நிலை) எண் 203-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (அறிவித்தல் மற்றும் கொண்டாடுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/2006) 9 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*8.* (i) *அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு வணிகர், இந்திய இரயில்வே துறை மற்றும் தமிழ்நாட்டிலுள்ள ஏனைய மாநில அரசுகளின் துறைகள் உட்பட மாநில மற்றும் மத்திய அரசு துறைகளுக்கு முதலாவது விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனை மீது செலுத்தத்தக்க வரி வீதத்தினை குறைத்தது குறித்தும்;* (ii) *அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, யாதொரு வணிகர், மின்சக்திக்கான உற்பத்தி, அனுப்புகை மற்றும் பகிர்மானம் குறித்த பயன்பாட்டிற்காக அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களுக்கு பெட்ரோல், டீசல் மற்றும் சிமிட்டி நீங்கலான ஏனைய பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தை குறைத்தது குறித்தும் வணிகவரி மற்றும் பதிவு (பி2) துறையின் 11-7-2011 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 77-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (மறுஅச்சு செய்யப்பட்டது) [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

*9. 12-12-2014 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்*-II, *பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின்* II(2)/CTR/751(d-1)/2014 *ஆம் எண் அறிவிக்கைக்கு வேறுபாட்டினை செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு(பி2)த் துறையின் 12-11-2015ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 94-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]*

*2016 ஜூலை 25*]

*10. 27-2-2013* ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-II, பிரிவு *2*-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/CTR/222/2013 ஆம் எண் அறிவிக்கைக்கு சட்டவிதிகள் ஆய்வுக் குழு அளித்துள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் வேறுபாடுகள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு(பி2)த் துறையின் *17-12-2015* ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் *123*-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*2006*ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *32/2006*) *80(5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*11.* (i) *2007* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்தும்; மற்றும் (ii) *1990* ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்தும் வணிக வரி மற்றும் பதிவு (பி1) துறையின் *20-12-2015* ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் *126*-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *32/2006*) *80(5)* பிரிவின்கீழ் மற்றும் *1990* ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *13/1990*) *18(4)* பிரிவின்கீழ் முறையே பேரவைமுன் வைக்கப்பெற்றன.]

*12. 2007* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி1) துறையின் *30-12-2015* ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் *133*-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *32/2006*) *80(5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*13.* மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டியைச் சேர்ந்த திருவாளர்கள் காந்திநிகேதன் ஊரக நலன் மற்றும் மேம்பாட்டு அறக்கட்டளையால் இயக்கப்படும் பயிற்சி மற்றும் உற்பத்தி மையங்களால் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது

குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 22-1-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 9-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*14.* (i) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் வகைமுறைகளின்கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள அனைத்து வணிக நடவடிக்கைகளையும் மின்னணு மூலம் நிருவகிக்கும் பொருட்டு, 2000 ஆம் ஆண்டு தகவல் தொழில் நுட்பச் சட்டத்தில் (மத்தியச் சட்டம் 21/2000) அடங்கியுள்ள வகைமுறைகள் மற்றும் அதன்கீழ் இயற்றப்பெற்ற விதிகள் மற்றும் வழங்கப்பட்ட வழிமுறைகள் எந்த அளவிற்கு பொருந்துமோ அந்த அளவிற்கு மேற்சொன்ன சட்டத்தின்படியான நடவடிக்கைகளுக்கு கடைபிடிப்பது குறித்தும்; (ii) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி சட்டத்தின் பிரிவு 67-A ல் கூறப்பட்டுள்ள நோக்கங்களுக்காக அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள பொருட்களை அறிவித்தது குறித்தும்; (iii) பதிவுபெற்ற வணிகருக்கு, சிறப்பு பொருளாதார மண்டலத்திற்குள் அத்தகைய அலகுகளை அல்லது அத்தகைய ஏனைய நிறுவனங்களை ஏற்படுத்துவதற்கு அல்லது மத்திய அரசால் குறிப்பிடப்பட்ட ஆணையத்தால் அத்தகைய சிறப்பு பொருளாதார மண்டலத்தை மேம்படுத்தி, செயல்பாட்டிற்கு கொண்டு வந்து பராமரிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டிருப்பின், மத்திய அரசால் அறிவிக்கையிடப்பட்டவாறாக தமிழ்நாடு மாநிலத்தின் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் ஓர் அலகை ஏற்படுத்துவதற்கு, செயல்படுத்தி பராமரிக்கும் செயல் நோக்கத்திற்காக அல்லது சிறப்பு பொருளாதார மண்டலத்தின் மேம்பாட்டாளரால் சிறப்பு பொருளாதார மண்டலத்தை மேம்படுத்துவற்கு, செயல்படுத்துவதற்கு மற்றும் பராமரிப்பதற்கு, பதிவு பெற்ற வணிகருக்கு யாதொரு வணிகரால் விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் குறித்து அத்தகைய வணிகரால் செலுத்தத்தக்க வரியிலிருந்து அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, விலக்களித்தது குறித்தும் வணிகவரி மற்றும் பதிவு (பி1) துறையின் 29-1-2016 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 15-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*2016 ஜூலை 25]*

*15. 2014-2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்கு அறிக்கையுடன் தணிக்கை அறிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 105(2) மற்றும் 104(4) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*4. 2016-2017 ஆம் ஆண்டிற்கான விரிவான மானியக் கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரை மற்றும் வரவு-செலவு திட்ட வெளியீடுகள் எண்கள் 56 முதல் 59 வரை. (திருத்திய நிதிநிலை) (58 புத்தகங்கள்)*

*5. 2016-2017 ஆம் ஆண்டிற்கான வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள். (திருத்திய நிதிநிலை)*

*6. 2016-2017 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை. (திருத்திய நிதிநிலை)*

*7. 2016-2017 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு-பகுதி-I. (திருத்திய நிதிநிலை)*

*8. 2016-2017 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு-பகுதி-II. (திருத்திய நிதிநிலை)*

*9. 2016-2017 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள். (திருத்திய நிதிநிலை)*

*10. 2016-2017 ஆம் ஆண்டுத் திட்டம் (திட்டம்-வரவு செலவுத் திட்ட இணைப்பு) (2016-2017 ஆம் ஆண்டு விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு). (திருத்திய நிதிநிலை)*

*11. 2016-2017 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல். (பகுதி-II திட்டங்கள்) (திருத்திய நிதிநிலை)*

*12. 2016-2017 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள். (திருத்திய நிதிநிலை)*

*13. 2016-2017 ஆம் ஆண்டு செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)*

*14. 2016-2017 ஆம் ஆண்டு திருத்திய நிதிநிலை அறிக்கை குறித்து மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)*

*15. 2016-2017 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல். (திருத்திய நிதிநிலை) (தமிழ், ஆங்கிலம்)*

******

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the**
**Director of Stationery and Printing,**
**Chennai-600 002.**